E Paper

மின்னிதழ்

www.thinakaran.lk

/ Thinakaran.lk / ThinakaranLK

2022 செப்டெம்பர் 3 சனிக்கிழமை

தினகரன்

THINAKARAN

1932 - 2022

வரு. 90 இல. 208

Saturday 03, September, 2022

13பக்கங்கள்

40/-

## உள்ளூராட்சி சபை தேர்தல் விரைவில்

### நிமல் புஞ்சிஹேவா தெரிவிப்பு



உள்ளூராட்சி சபைத் தேர்தல்களை எதிர்வரும் ஆண்டு மார்ச் மாதத்துக்குள் நடத்த எதிர்பார்க்கப்படுவதாக தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் நிமல் புஞ்சிஹேவா தெரிவித்தார்.

உள்ளூராட்சி 06

## எரிபொருள், எரிவாயு, நெல் தொடர்பான பிரச்சினைகளுக்கு துரிதமான தீர்வு

### சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு சாகல ரத்நாயக்கா ஆலோசனை



நாட்டில் நிலவும் எரிபொருள், சமையல் எரிவாயு மற்றும் நெல் தொடர்பான பிரச்சினைகளுக்கு உடனடித் தீர்வுகளை வழங்குமாறு ஜனாதிபதி பணிக்குழாம் பிரதானியும் தேசிய பாதுகாப்பு தொடர்பான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகருமான சாகல ரத்நாயக்க அதிகாரிகளுக்கு ஆலோசனை வழங்கினார்.

ஜனாதிபதி செயலகத்தில் (01) நடைபெற்ற கலந்துரையாடலின் போதே அவர் இவ்வாறு அறிவுறுத்தல் வழங்கினார்.

எரிபொருள் கொள்வனவு மற்றும் விநியோகத்தில் ஏற்பட்டுள்ள பிரச்சினைகள் தொடர்பில் பெற்றோலியக் கூட்டுத்தாபன அதிகாரிகளுடன் கலந்துரையாடப்பட்டதுடன், 06

பல மருத்துவ சாதனங்கள் உட்பட

## 43 வகை மருந்துகளின் சில்லறை விலையில் திருத்தம்

### சிறப்பு வர்த்தமானி வெளியானது

43 மருந்து வகைகள் மற்றும் பல மருத்துவ சாதனங்களின் அதிகபட்ச சில்லறை விலையில் திருத்தம் செய்யப்பட்டுள்ளதுடன் சிறப்பு வர்த்தமானி அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது.

2015 ஆம் ஆண்டின் 05 ஆம் இலக்க தேசிய மருந்துகள் ஒழுங்குமுறை அதிகாரசபை சட்டத்தின் விதிகளின் கீழ் சுகாதார அமைச்சர் கெஹெலிய ரம்புக்வெல்லவினால் இந்த வர்த்தமானி வெளியிடப்பட்டுள்ளது. 06

## தகவல் அறியும் உரிமைக்கு புதிய அணுகுமுறை அறிமுகம்

### தகவல்களை துரிதமாக வழங்க அரச நிறுவனங்களில் ஏற்பாடு



அரச நிறுவனங்களிடமிருந்து தகவல்களைப் பெறுவதில் ஏற்படும் தாமதங்களைத் தவிர்ப்பதற்காக புதிய அணுகுமுறையொன்றை அறிமுகம் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

தகவல் பெறுவதற்காக விண்ணப்பப் படிவத்தை அனுப்பும் போது முகவரியுடன், தொலைபேசி இலக்கம், வட்ஸ்அப் இலக்கம், மின்னஞ்சல் முகவரி ஆகியவற்றையும் குறிப்பிடுமாறு பொது நிர்வாக மற்றும் உள்நாட்டலுவல்கள் அமைச்சு, விண்ணப்பதாரிகளைக் கோரியுள்ளது.

கடிதங்கள் மூலம் கோரப்படும் தகவல்களை அனுப்புவதில் ஏற்படக்கூடிய காலதாமதத்தைத் 06

2022 ஆம் அண்டு இடைக்கால வரவு– செலவுத் திட்டம்;

# 115 மேலதிக வாக்குகளால் நேற்று நிறைவேறியது

## ஆதரவாக 120; எதிராக 05 வாக்குகள் மட்டுமே

### 43 எம்.பிக்கள் நடுநிலை; SJB வாக்கெடுப்பில் கலந்துகொள்ளவில்லை; டளஸ் எம்.பி உள்ளிட்ட 13 எம்.பிக்கள் விலகியிருந்தனர்



லோரன்ஸ் செல்வநாயகம்

இடைக்கால வரவு செலவுத் திட்டம் 115 மேலதிக வாக்குகளால் நேற்று சபையில் நிறைவேற்றப்பட்டது. இடைக்கால வரவு செலவு திட்டத்துக்கு ஆதரவாக 120 வாக்குகளும் எதிராக 05 வாக்குகளும் அளிக்கப்பட்டதுடன் 43 பேர் வாக்களிப்பில் கலந்து கொள்ளவில்லை.

சபைக்கு சமுகமளித்திருந்தவர்களில் 43 பேர் வாக்களிக்காத அதேநேரம் தமிழ் தேசியக் கூட்டமைப்பு, தமிழ் மக்கள் தேசிய கூட்டணி எம்.பிக்கள் 06



ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் 71ஆவது ஆண்டு விழா நேற்று மஹரகம தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தில் கட்சியின் தலைவர் முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையில் நடைபெற்றது. கட்சியின் 71ஆவது ஆண்டுவிழா மலரை கட்சியின் பேச்சாளர் வீரகுமார திஸாநாயக்க தலைவர் மைத்திரிபால சிறிசேனவிடம் கையளித்த போது பிடிக்கப்பட்ட படம். ( துஷ்மந்த மாயாதுன்ன)

## நாட்டின் ஸ்திரத்தன்மையை உறுதி செய்யும் ஜனாதிபதி ரணில்

### பிரித்தானிய பிரதமர் போரிஸ் ஜோன்சன் பாராட்டு



இலங்கை மக்கள் எதிர்நோக்கியுள்ள பிரச்சினைகளுக்கு நிரந்தர தீர்வுகாண்பதற்கு முன்னுரிமையளிக்கும், அரசாங்கமொன்றை நிறுவுவதற்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க எடுத்துள்ள முயற்சிகளுக்கு பிரிட்டன் பிரதமர் போரிஸ் ஜோன்சன் பாராட்டு தெரிவித்துள்ளார். இலங்கையின் ஜனாதிபதியாக ரணில் விக்கிரமசிங்க பதவியேற்றமைக்கு வாழ்த்துத் தெரிவித்து அனுப்பியுள்ள செய்தியில் பிரிட்டன் பிரதமர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

ஜனநாயக கொள்கைகளை பின்பற்றுவது, ஜனநாயக இணக்கப்பாட்டை எட்டுவது என்பன ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் வெற்றிக்கு வழிவகுக்கும் என்றும் அவர் 06

## காணாமல் போனோர் தொடர்பான விசாரணைகளை துரிதப்படுத்தவும்

### அதிகாரிகளுக்கு நீதியமைச்சர் விஜயதாச பணிப்புரை



காணாமல் போனோர் தொடர்பில் கிடைக்கப்பெற்ற முறைப்பாடுகள் தொடர்பிலான விசாரணைகளை துரிதப்படுத்தவும் காணாமற் போனதற்கான சான்றிதழ்களை வழங்கவும் அதிகாரிகளுக்கு நீதி அமைச்சர் விஜேயதாச ராஜபக்ஷ பணிப்புரை வழங்கினார். அத்தோடு மோதல்களினால் இழந்த உயிர்கள் மற்றும் 06

## சவால்களை பொறுப்பேற்று துணிச்சலுடன் சமர்ப்பித்த பட்ஜட்

### ஜனாதிபதிக்கு அமைச்சர் அலிசப்ரி சபையில் பாராட்டு

லோரன்ஸ் செல்வநாயகம்



வரிகளில் திருத்தம், வறுமை நிலையிலிருந்து மக்களை மீட்பதற்கான பொறிமுறை, போராட்டம் இல்லாத அரசியல் என்பனவே நாட்டுக்கு இன்று தேவையாக உள்ளது. அனைவரும் இணைந்து நெருக்கடியில் உள்ள நாட்டை மீட்டெடுக்க அர்ப்பணிப்புடன் செயற்பட வேண்டுமென வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி நேற்று பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

நாட்டின் நெருக்கடி மிக்க காலகட்டத்தில் துணிச்சல் மிக்க தலைவராக சிறந்த வரவு செலவுத் திட்டத்தை 06

## பசில் ராஜபக்ஷவிற்கு வெளிநாடு செல்ல அனுமதி

### உயர் நீதிமன்றம் நேற்று அறிவிப்பு



முன்னாள் நிதி அமைச்சர் பசில் ராஜபக்ஷ 2023 ஆம் ஆண்டு ஜனவரிமாதம் 15 ஆம் திகதி வரை வெளிநாடு செல்வதற்கு உயர் நீதிமன்றம் நேற்று அனுமதி வழங்கியுள்ளது.

மருத்துவ சிகிச்சைக்காக அடுத்த வாரம் வெளிநாடு செல்வதற்கு பசில் ராஜபக்ஷ எதிர்பார்ப்பதாக அவரின் சட்டத்தரணி தெரிவித்துள்ளதுடன் பசில் ராஜபக்ஷவை வெளிநாடு செல்வதற்கு 06

செப்.05 ஆம் திகதி நள்ளிரவு முதல்

## லிட்ரோ சமையல் Gas விலை மேலும் குறைகிறது



லிட்ரோ சமையல் எரிவாயுவின் விலையை எதிர்வரும் திங்கட்கிழமை (05) முதல் குறைக்க நடவடிக்கை எடுக்கப்படுமென நிறுவனத்தின் தலைவர் முதித பீரிஸ் நேற்று தெரிவித்தார்.

உலக சந்தையில் சமையல் எரிவாயுவின் விலை குறைவடைந்துள்ளதால், விலைச் சூத்திரத்தின் பிரகாரம் திருத்தம் மேற்கொள்ளப்படுமென அவர் நேற்று (02) தெரிவித்தார். அதன்படி, கணிசமான 06

## இலங்கை பொலிஸ் திணைக்களத்தின் 156 ஆவது பொலிஸ் தினம் இன்று



இலங்கை பொலிஸ் திணைக்களத்தின் 156 ஆவது தினத்தையிட்டு பொலிஸ் திணைக்களம் நாடு முழுவதும் பல்வேறு நிகழ்வுகளை ஏற்பாடு செய்துள்ளது.

இரண்டு நூற்றாண்டுகளுக்கு மேல் பழமையான வரலாற்றைக் கொண்ட இலங்கை பொலிஸ் சேவையின் முதலாவது பொலிஸ் மா அதிபராக ஸ்ரீமத் ஜீ. டபிள்யூ. ஆர். கெம்பல் 1866 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 03 ஆம் திகதி அரசியலமைப்பு ரீதியாக நியமிக்கப்பட்டார். 06

தடைசெய்யப்பட்ட புலிகளுடன் தொடர்புகளை பேணிய

## இலங்கை பிரஜைகள் சிலரின் சொத்துக்கள் பறிமுதல்

### இந்திய அரசினால் 337 மில். சொத்துக்கள் அரசுடமையானது



தடை செய்யப்பட்ட விடுதலைப் புலிகளுடன் தொடர்புகளை பேணிய இலங்கை பிரஜைகளின் 337 மில்லியன் ரூபாய் மதிப்புள்ள மூன்று அசையா சொத்துக்களை பணமோசடி தடுப்பு வழக்கில் பறிமுதல் செய்துள்ளதாக இந்தியாவின் அமுலாக்க பணியகம் தெரிவித்துள்ளது.

தமிழகத்தில் கிழக்கு கடற்கரை சாலையில் (ஈசிஆர்) என்ற இடத்திலுள்ள ஒரு பங்களாவும், 06



## இலங்கைக்கான கடன் வழங்கும் நாடுகளுக்கு ஜப்பான் அழைப்பு

### நிதியமைச்சர் ஷுனிச்சி சுசுகி மீண்டும் அழைப்பு விடுத்தார்

03

## கோயிலுக்கு சென்ற பெண்; யானை தாக்கி பலி

### மட்டு.கரடியனாறு பகுதியில் சம்பவம்

03

புத்தளம் வைத்தியசாலையில்

## ஒரே பிரசவத்தில் நான்கு குழந்தைகளை பெற்ற தாய்



புத்தளம் வைத்தியசாலையில் முதல் தடவையாக ஒரே பிரசவத்தில் நான்கு குழந்தைகள் பிறந்துள்ளன.

24 வயதான இளம் தாய் ஒருவரே இவ்வாறு நான்கு குழந்தைகளை பிரசவித்துள்ளதாக புத்தளம் வைத்தியசாலையின் பணிப்பாளர் சுமித் அன்டன் பெர்ணான்டோ தெரிவித்துள்ளார். 06

தேர்தல் முறைகேடு குற்றச்சாட்டு;

## ஆங் சான் சூகிக்கு மேலும் 3 வருட சிறை



மியன்மாரின் முன்னாள் தலைவர் ஆங் சான் சூகி, தேர்தல் முறைகேடுகளில் ஈடுபட்டதாக நிரூபிக்கப்பட்டுள்ளது. அதன்படி, அவருக்கு மூன்றாண்டுகள் கடுங்காவல் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

வெளிநாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ள செய்தியிலேயே இவ்வாறு 06

பல ஹிட் பாடல்களை பாடிய


## பிரபல பாடகர் பம்பா பாக்யா காலமானார்



தமிழில் வெளியான எந்திரன் 2.0, சர்கார், பிகில், பொன்னியின் செல்வன் போன்ற பல்வேறு படங்களில் பாடிய திரையிசைப் பாடகர் பம்பா பாக்யா நேற்று காலமானார்.

பாடகர் பம்பா பாக்யா தனது 06

## கொழும்பில் 18 மணிநேர நீர்வெட்டு



கொழும்பின் சில பகுதிகளில் இன்று 18 மணிநேர நீர்வெட்டு அமுல்படுத்தப்படுமென தேசிய நீர்வழங்கல் வடிகாலமைப்பு சபை தெரிவித்துள்ளது. இன்று 03 ஆம் திகதி காலை 08 மணி முதல் 18 மணி நேர நீர் விநியோகத்தடை அமுல்படுத்தப்படவுள்ளது.

கொழும்பு, தெஹிவளை, கல்கிசை, கோட்டை, கடுவெல மற்றும் 06

## கொவிட் 19 தொற்று; 04 ஆண்கள் மரணம்



கொவிட் 19 தொற்றுக்குள்ளான 04 பேர் நேற்று முன்தினம் மரணித்துள்ளதாக சுகாதார பணிப்பாளர் நாயகம் நேற்று (02) உறுதிப்படுத்தியுள்ளார்.

30 வயதுக்கும் 59 வயதுக்கும் இடைப்பட்ட 02 ஆண்களும் 60 வயதுக்கு மேற்பட்ட 02 ஆண்களுமாக 04 பேர் மரணித்துள்ளதாக அவர் உறுதிப்படுத்தியுள்ளார்.

# சர்வதேச செய்திகள்

## இந்தியாவில் 'சிப்' தயாரிப்புக்கு தாய்வான் நிறுவனம் விண்ணப்பம்



அமெரிக்கா, தாய்வான் மற்றும் சில ஐரோப்பிய நாடுகளைச் சேர்ந்த நிறுவனங்கள் இந்தியாவில் குறைக்கடத்தி உற்பத்தி பிரிவுகளை அமைக்க ஆர்வம் காட்டுவதாக மத்திய மின்னணு மற்றும் தகவல் தொழில் நுட்பத்துறை இணையமைச்சர் ராஜீவ் சந்திரசேகர் தெரிவித்துள்ளார். ஊடகவியலாளர் சந்திப்பு ஒன்றில் உரையாற்றிய சந்திரசேகர் கூறியதாவது, “சிப் வர்த்தகம் அல்லது குறைக்கடத்தி திட்டம் இந்தியாவில் வர்த்தகம் மற்றும் முதலீட்டுக்காக திறக்கப்பட்டுள்ளது என்பதை அறிவிக்கிறோம்.

இது தாய்வான் நிறுவனங்களுக்கு மாத்திரமல்ல, அமெரிக்கா, ஐரோப்பா மற்றும் அனைத்துத் தரப்புக்குமானது” என்றார்.

கொவிட்டுக்கு பின்னரான உலகெங்கும் உள்ள இலத்திரன் பெறுமதிச் சங்கிலி பாரிய மாற்றங்களுக்கு உட்பட்டு வருவதாகவும் அது இந்தியாவுக்கு 120 பில்லியன் டொலர் ஏற்றுமதி இலக்கை அடைவதற்கு வாய்ப்பை ஏற்படுத்தி இருப்பதாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.

## போமன் கைது: சீனாவின் அமைதி குறித்து கண்டனம்



மியன்மாருக்கான பிரிட்டனின் முன்னாள் தூதுவரும் தென்கிழக்காசியாவில் வர்த்தக ஒழுங்குமுறை ஆலோசனைக் குழுவின் தலைவருமான விக்கி போமன் மற்றும் அவரது கணவர் மியன்மாரில் தடுத்து வைக்கப்பட்டிருப்பது குறித்து சீனா தொடர்ந்து அமைதிகாத்து வருவதற்கு கண்டனங்கள் வெளியாகியுள்ளன.

மாற்றப்பட்ட தமது முகவரியை பதிவு செய்யத் தவறியதற்காக குடியவரவு சட்டங்களை மீறியதாகவே அவர் கைது செய்யப்பட்டார்.

மியன்மாரின் இராணுவ அரசின் செயற்பாடுகளை சீனா கண்டிக்காத நிலையிலேயே இந்தக் கைது இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது.

மியன்மார் அரசு என்ன செய்தபோதும் சீனா சகித்துக்கொள்ளும் நிலைப்பாட்டிலேயே உள்ளது என்று தென்கிழக்காசியாவைச் சேர்ந்த வல்லுநரான பில் ஹைடன் குறிப்பிட்டுள்ளார்.

## படுகொலை முயற்சி: நூலிழையில் உயிர் தப்பினார் ஆர்ஜன்டீன துணை ஜனாதிபதி

துப்பாக்கிதாரி ஒருவரால் குறிவைக்கப்பட்ட ஆர்ஜன்டீன துணை ஜனாதிபதி கிறிஸ்டீனா பெர்னாண்டஸ் டி சிர்ச்னர் படுகொலை முயற்சியில் இருந்து நுலிழையில் உயிர்தப்பியுள்ளார்.

கிறிஸ்டீனா தனது வீட்டுக்கு வெளியில் ஆதரவாளர்களை வரவேற்றிருந்தபோது, கூட்டத்தில் இருந்த ஒருவர் அவரது முகத்துக்கு நேரே துப்பாக்கியை நீட்டியுள்ளார்.

அந்தத் துப்பாக்கியில் ஐந்து தோட்டாக்கள் இருந்தபோதும் துப்பாக்கிதாரி விசையை அழுத்தவில்லை என்று ஜனாதிபதி அல்பார்டோ பெர்னாண்டஸ் தெரிவித்தார்.

கிறிஸ்டீனா ஊழல் குற்றச்சாட்டில் சிக்கி நீதிமன்றத்தில் இருந்து திரும்பி இருந்தார். அவர் தன் மீதான குற்றச்சாட்டுகளை மறுத்து வருகிறார்.

35 வயதான பிரேசில் நாட்டவர் என்று உள்ளூர் ஊடகங்கள் அடையாளப்படுத்தி இருக்கும் துப்பாக்கிதாரி கைது செய்யப்பட்டு தடுப்புக் காவலில் வைக்கப்பட்டிருப்பதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். இந்தத் தாக்குதல் முயற்சிக்கான காரணத்தை கண்டறியும் விசாரணையை அவர்கள் ஆரம்பித்துள்ளனர்.

கடந்த வியாழக்கிழமை (01) நடந்த இந்த சம்பவத்தைத் தொடர்ந்து அன்றைய தினம் மாலையில் நாட்டு மக்களிடம் உரையாற்றிய ஜனாதிபதி பொர்னாண்டஸ், “கிறிஸ்டீனா தொடர்ந்து உயிர் வாழ்வதற்கான தொழில்நுட்ப ரீதியான காரணம் இன்னும் கண்டறியப்படவில்லை. ஏனெனில் துப்பாக்கியில் ஐந்து தோட்டாக்கள் இருந்தபோதும் சுடப்படவில்லை” என்று குறிப்பிட்டார்.

இந்தத் தாக்குதலை கண்டித்த அவர் இந்தக் கொலை முயற்சி 1983 இல் நாட்டில் ஜனநாயகம் திரும்பிய பின் நிகழ்ந்த மிக மோசமான சம்பவம் என்றும் விபரித்தார்.

ஊழல் வழக்கு விசாரணைக்கு முகம்கொடுத்து வரும் 69 வயதான கிறிஸ்டீனாவுக்கு ஆதரவாக அவரின் வீட்டுக்கு வெளியில் அண்மைக்காலத்தில் மக்கள் திரண்டு வருகின்றனர்.

2007 தொடக்கம் 2015 வரை கிறிஸ்டீனா ஜனாதிபதியாக பதவி வகித்தபோது தனது கோட்டையாக உள்ள படகோனியாவில் அரச ஒப்பந்தங்களை மோசடியாக வழங்கியதாகவே குற்றஞ்சாட்டப்பட்டுள்ளார்.

இந்த வழக்கில் அவர் குற்றங்காணப்பட்டால் 12 ஆண்டுகள் சிறை மற்றும் அரசியலில் ஈடுபட ஆயுள் காலத் தடையும் விதிக்கப்பட வாய்ப்பு உள்ளது.

எனினும் அவர் மீது மேலும் பல ஊழல் குற்றச்சாட்டுகள் இருக்கும் நிலையில் அதன் மீதான வழக்கு விசாரணைகள் எதிர்வரும் மாதங்களில் இடம்பெறும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.



## 2ஆம் உலகப் போர் அழிவு: இழப்பீடு கோரும் போலந்து



இரண்டாம் உலகப் போரில் ஜெர்மனியால் போலந்துக்கு 1.32 டிரில்லியன் டொலர் இழப்பீடு ஏற்பட்டிருப்பதாக போலந்தின் ஆளும் தேசியவாதக் கட்சித் தலைவர் ஜரோஸ்லோ காஸ்னிக்கி தெரிவித்துள்ளார். இதற்கு தமது நாடு இழப்பீடு கோரும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

போலந்தில் மிகப்பெரிய வர்த்தக நட்பு நாடாகவும் ஐரோப்பிய ஒன்றியம் மற்றும் நேட்டோவின் சக நாடாகவும் ஜெர்மனி உள்ளது. உலகப் போருடன் தொடர்புபட்ட அனைத்து இழப்பீடுகளும் வழங்கப்பட்டுவிட்டதாக ஜெர்மனி ஏற்கனவே அறிவித்துள்ளது. போலந்தின் ஆளும் கட்சி 2019 ஆம் ஆண்டு மதிப்பிட்ட 850 பில்லியன் டொலர் இழப்பீட்டை விடவும் தற்போதைய மதிப்பீடு அதிகமாக உள்ளது.

2015இல் ஆட்சிக்கு வந்த நீதி மற்றும் அமைதிக் கட்சி அது தொடக்கம் இழப்பீடு பற்றி கூறி வருகின்றபோதும் இதுவரை உத்தியோகபூர்வ கோரிக்கைகள் விடப்படவில்லை.

இரண்டாம் உலகப் போரின்போது சுமார் 3 மில்லியன் போலிஷ் யூதர்கள் உட்பட சுமார் 6 பில்லியன் போலந்து நாட்டவர்கள் கொல்லப்பட்டனர். சுமார் 200,000 மக்கள் கொல்லப்பட்ட 1944 எழுச்சி ஒன்றை அடுத்து தலைநகர் வார்சோ தரைமட்டமாக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## கொர்பச்சேவ் இறுதிச் சடங்கில் ரஷ்ய ஜனாதிபதி புட்டின் இல்லை



சோவியத் ஒன்றியத்தின் கடைசித் தலைவரான மிகைல் கொர்பச்சேவ்வின் இறுதிச் சடங்கில் ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புட்டின் பங்கேற்க மாட்டார் என்பது உறுதி செய்யப்பட்டுள்ளது.

புட்டினின் வேலைப்பளு காரணமாக இன்று சனிக்கிழமை நடைபெறும் இறுதிச் சடங்கில் அவரால் பங்கேற்க முடியவில்லை என்று பேச்சாளர் டிமிட்ரி பெஸ்கோவ் தெரிவித்துள்ளார்.

கொர்பச்சேவ் தனது 91ஆவது வயதில் கடந்த செவ்வாய்க்கிழமை காலமானார். அவருக்கு புட்டின் மொஸ்கோ மருத்துவமனையில் அஞ்சலி செலுத்தியதாக பேச்சாளர் மேலும் தெரிவித்தார்.

கொர்பச்சேவ்வின் சீர்திருத்த நடவடிக்கைகள் பனிப்போரை முடிவுக்குக் கொண்டுவந்தபோதும் சோவியட் ஒன்றியத்தின் முடிவாக அது இருந்தது. இது பற்றி புட்டின் அதிருப்தி நிலைப்பாட்டையே கொண்டுள்ளார்.

சோவியத் ஒன்றியத்தின் வீழ்ச்சி (20ஆம்) நூற்றாண்டில் புவிசார் அரசியலின் மிகப்பெரிய பேரழிவு என்று புட்டின் 2005 ஆம் ஆண்டில் கூறி இருந்தார்.

எவ்வாறாயினும் கொர்பச்சேவ்வின் மறைவுக்காக அவரது குடும்பத்தினருக்கு புட்டின் கடந்த புதன்கிழமை அனுதாபத்தை வெளியிட்டிருந்தார். அவர் உலக வரலாற்றில் பெரும் தாக்கத்தை செலுத்தியவர் என்று அதில் சுட்டிக்காட்டி இருந்தார்.

## ஆர்ஜெண்டினாவில் மர்ம நோயால் மூவர் மரணம்



அர்ஜெண்டினாவில் மர்ம நோய் ஒன்று பரவிவருகிறது. ஒருவித நிமோனியா காய்ச்சலான அந்த நோயால் இவ்வாரம் மூவர் உயிரிழந்தனர். நோய்க்குப் பலியானவர்கள் ஒரு குறிப்பிட்ட தனியார் மருந்தகத்துடன் சம்பந்தப்பட்டவர்கள் என்று சுகாதார அதிகாரிகள் தெரிவித்தனர்.

துக்குமன் மாநிலத்தில் இதுவரை 9 பேருக்கு அந்த நோய் தொற்றியுள்ளது. அவர்களில் 8 பேர் பாதிக்கப்பட்ட தனியார் மருந்தகத்தில் மருத்துவ ஊழியர்களாகப் பணிபுரிபவர்கள்.

உயிரிழந்த மூவரில் இருவர் மருத்துவ ஊழியர்கள்.

சம்பவம் குறித்து அதிகாரிகள் சோதனைகள் நடத்திவருகின்றனர்.

அந்த மர்ம நோய் கொவிட் நோய், சளிக்காய்ச்சல்', லிஜனெல்லா நுண்ணுயிர் நோய், எலிவகை விலங்குகளால் பரவும் ஹண்ட்டா வைரஸ் ஆகியவை இல்லை என்று தெரிய வந்துள்ளது.

அதன் மாதிரிகள் போனஸ் அயர்ஸிலுள்ள மெல்பிரான் கல்வி நிலையத்துக்கு அனுப்பப்பட்டுள்ளன.

மிக அண்மையில் மர்ம நோய்த் தொற்று ஏற்பட்டதாகக் கண்டறியப்பட்டவர், தனியார் மருந்தகத்தில் அறுவைசிகிச்சை பெறச் சேர்க்கப்பட்ட 70 வயதுப் பெண்ணாவார்.

அவருக்குத் தான் முதன்முதலில் மர்ம நோய் தொற்றியிருக்கும் என்று சந்தேகிக்கப்படுகிறது. அதுகுறித்துக் கூடுதல் விசாரணை இடம்பெறுகிறது. நோய்த்தொற்று ஏற்பட்ட முதல் 6 நோயாளிகளிடம் ஓகஸ்ட் 18க்கும் 23க்கும் இடைப்பட்ட காலத்தில் வாந்தி, கடுமையான காய்ச்சல், வயிற்றுப்போக்கு, உடல்வலி போன்ற அறிகுறிகள் தென்பட்டன.

## கொவிட் பரவலால் சீனாவின் மற்றொரு நகரிலும் முடக்கம்



சீனாவில் கடைப்பிடிக்கப்பட்டு வரும் கடுமையாக கொவிட் கட்டுப்பாட்டு விதியால் சுமார் 21 மில்லியன் மக்கள் வசிக்கும் செங்டு நகரில் பொது முடக்கம் அமுல்படுத்தப்பட்டுள்ளது.

மக்களை வீடுகளில் தங்கி இருக்கும்படியும், ஒரு வீட்டில் இருந்து அத்தியாவசியப் பொருட்களை வாங்குவதற்கு ஒருவருவருக்கு மாத்திரமே வெளியே வர அனுமதிக்கப்படும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

செங்டு நகரில் கடந்த வியாழக்கிழமை 157 புதிய நோய்த்தொற்று சம்பவங்கள் பதிவானதோடு இவர்களில் 51 பேரிடம் நோய் அறிகுறிகள் தென்படவில்லை.

சீனாவின் கொவிட் கொள்கையின்படி, சிறு எண்ணிக்கையான தொற்றுச் சம்பவங்கள் பதிவானாலும் நகரங்களை முடக்குவதற்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

இந்நிலையில் நீச்சல் தடாகங்கள் மற்றும் பொழுதுபோக்கு இடங்களில் பெரும் எண்ணிக்கையான மக்கள் ஒன்று திரண்டதே நோய் பரவக் காரணம் என நகர நிர்வாகம் குறிப்பிட்டிருப்பதோடு நிலைமை கடும் சிக்கலானதும் தீவிரமானதாகவும் இருப்பதாக எச்சரித்துள்ளனர்.

ஏற்கனவே சீனாவின் தெற்கில் ஷென்சனிலும் வட கிழக்கில் டாலியனிலும் கொவிட் கட்டுப்பாடுகள் அமுலில் உள்ளன.

## பாகிஸ்தான் வெள்ள அனர்த்தம்: உயிரிழப்பு 1200ஐத் தாண்டியது



பாகிஸ்தான் வெள்ள அனர்த்தத்தால் உயிரிழந்தவர்கள் எண்ணிக்கை 1,200ஐத் தண்டியுள்ளது. இவர்களில 400க்கும் அதிகமானவர்கள் சிறுவர்களாவர்.

பாகிஸ்தானின் தென் பகுதியே அதிகம் பாதிக்கப்பட்டுள்ளது. அங்கு ஐம்பதாயிரம் பேர் பாதுகாப்பான இடங்களுக்கு அனுப்பப்பட்டுள்ளனர்.

பிரிட்டன் 17 மில்லியன் டொலர் வழங்க முன்வந்துள்ளது. பேரிடரில் சிக்கித் தவிக்கும் மக்களுக்கு அவசர உதவி வழங்க 160 மில்லியன் டொலர் தேவைப்படுவதாக ஐக்கிய நாடுகள் சபை கூறுகிறது.

பருவ மழையின் காரணமாகவும் மலைப் பிரதேசத்தில் பனிப்பாறைகள் உருகுவதாலும் இந்து நதியில் இருந்து வெள்ளம் பெருக்கெடுக்கிறது.

சிந்து மாநிலத்தின் தெற்கில் பெரும்பகுதி தண்ணீரில் மூழ்கியிருப்பதை ஐரோப்பிய விண்வெளி ஆய்வு நிலையத்தின் செய்மதிப் படங்கள் காட்டுகின்றன.

பாகிஸ்தானில் வழக்கத்தைவிடப் பத்து மடங்கு அதிகமாக மழை பெய்வதாக ஆய்வு நிலையம் கூறியது.

6.5 மில்லியன் பேருக்கு அவசர உதவி தேவைப்படுவதாக உலக சுகாதார அமைப்பு குறிப்பிட்டுள்ளது.

தினகரன் விளம்பரம் 0112429367
விற்பனை பிரிவு 0112429444, 0112429378
ஆசிரியபீடம் editor.tkn@lakehouse.lk

2022 செப்டெம்பர் 3 சனிக்கிழமை

# தினகரன்

THINAKARAN தினகரன்


**தொழுகை நேரம்**

02 முதல் 04 வரை

| | |
|---|---|
| சுபஹ் | 04.47 |
| லுஹர் | 12.12 |
| அஸர் | 03.16 |
| மஃரிப் | 06.18 |
| இஷா | 07.28 |

**இன்றைய சுபதினம்**

சுபகிருது வருடம் ஆவணி 18

ராகுகாலம் : பகல் : 9.00 - 10.30வரை
சுபநேரம் : காலை : 7.30 - 9.00வரை

யோகம்: சித்தயோகம்

திதி: அஷ்டமி

**இராசி பலன்கள்**

| | |
|---|---|
| மேஷம் | வெற்றி |
| ரிஷபம் | பாராட்டு |
| மிதுனம் | தனம் |
| கடகம் | போட்டி |
| சிம்மம் | கோபம் |
| கன்னி | சுகம் |
| துலாம் | நன்மை |
| விருச்சிகம் | நிறைவு |
| தனுசு | முயற்சி |
| மகரம் | பொறுமை |
| கும்பம் | செலவு |
| மீனம் | மறதி |

கலாநிதி இராமச்சந்திரகுருக்கள் (பாபு சர்மா)

# இலங்கையில் உணவு திட்டங்களுக்கு அதிகளவு ஆதரவை வழங்க வேண்டும்

### பிரதமர் கோரிக்கைக்கு WFP இணக்கம்



குழந்தைகள் மற்றும் பெண்கள், குறிப்பாக கர்ப்பிணி மற்றும் பாலூட்டும் தாய்மார்களை இலக்காகக் கொண்ட ஊட்டச்சத்து உணவு விநியோக திட்டங்களுக்கு அதிகளவு ஆதரவை வழங்குமாறு பிரதமர் தினேஷ் குணவர்த்தன விடுத்த கோரிக்கையை உலக உணவுத் திட்டம் (WFP) ஏற்றுக்கொண்டுள்ளது.

WFP ஆசியா மற்றும் பசிபிக் பிராந்திய பணிப்பாளர் John Aylieff, இலங்கை அரசாங்கத்துடன் WFP உண்மையான பங்காளித்துவத்தைக் கொண்டுள்ளதுடன், பாடசாலை மாணவர்களுக்கான மதிய உணவு மற்றும் போஷாக்கு விநியோகத்துக்கான திரிபோஷா போன்ற அவர்களின் கூட்டுத் திட்டங்கள், ஏனைய பெறுனர் நாடுகளின் வெற்றிகரமான மாதிரிகளாகும்,பின்பற்றவும் முடியும்.

"இலங்கையில் WFP திட்டங்களில் அரசாங்கம் சமமான பங்காளியாக மாறியுள்ளதால் நாங்கள் ஒரு சக்திவாய்ந்த தாக்கத்தை ஏற்படுத்த முடியுமென அய்லிஃப் (01) தெரிவித்தார். பாராளுமன்றத்தில் பிரதமர் அலுவலகத்தில் பிரதமர் தினேஷ் குணவர்த்தனவை சந்தித்த போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

ஒரு நாட்டுக்கு ஆரோக்கியமான சமூகத்தின் முக்கியத்துவத்தை எடுத்துரைத்த பிரதமர், தீவில் குடிசைக் கைத்தொழில்கள் மற்றும் நுண் மீன்பிடித் தொழில்களை அபிவிருத்தி செய்வதற்கான உதவிகளை அதிகரிப்பதற்கான சாத்தியக்கூறுகளை ஆராயுமாறு WFPயிடம் கோரினார்.

WFP பிராந்திய பணிப்பாளர், இந்த கடினமான காலங்களில் இலங்கைக்கான மானியங்கள் மேலும் 20 மில்லியன் அமெரிக்க டாலர்களால் அதிகரிக்கப்படும் என்றும், மொத்த தொகை 60 மில்லியன் அமெரிக்க டாலர்களாக இருக்குமென்றும் கூறினார்.

# தவறான குற்றச்சாட்டுகளை முன்வைப்பதன் மூலம் நெருக்கடிக்கு தீர்வு காண முடியாது

**லோரன்ஸ் செல்வநாயகம்**



தவறான குற்றச்சாட்டுகளை முன்வைப்பதன் மூலம் நாட்டின் பொருளாதார நெருக்கடிக்கு தீர்வு காண முடியாதென எதிர்க்கட்சி எம்.பி ஹர்ச டி சில்வா பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

மத்திய வங்கியின் முன்னாள் ஆளுநர் அஜித் நிவார்ட் கப்ரால் நாட்டின் நிதி நிலைமை தொடர்பில் நாட்டையும் பாராளுமன்றத்தையும் தவறாக வழிநடத்தியுள்ளாரென்றும் தற்போதைய மத்திய வங்கியின் ஆளுநர் நந்தலால் வீரசிங்க நாட்டை வங்குரோத்து நிலைக்கு கொண்டு சென்றாரென்றும் குற்றஞ்சாட்டுவது அடிப்படையற்றது என்றும் அவர் சபையில் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று விசேட கூற்றொன்றை முன்வைத்து உரையாற்றிய அவர் அது தொடர்பில் மேலும் குறிப்பிடுகையில்:

பொருளாதார மீட்சிக்கான நடவடிக்கைகள் மற்றும் கடன் மறுசீரமைப்பு உள்ளிட்ட அடிப்படை விடயங்களுக்கு நாம் அரசாங்கத்துக்கு ஒத்துழைப்பு வழங்க தீர்மானித்துள்ளோம். எனினும் அரசாங்கத்தின் செயற்பாடுகள் எமது தீர்மானத்தை கேள்விக்குள்ளாக்கியுள்ளன.

மத்திய வங்கியின்

06

# தினகரன் றிம்ஸானின் தந்தை காலமானார்

பேருவளை மஹகொடையைச் சேர்ந்த மொஹமட் நிஸாம் ( வயது 75) மூன்று பிள்ளைகளின் தந்தை நேற்று (02) காலமானார்.

அன்னார் தினகரன், தினகரன் வாரமஞ்சரி பத்திரிகையில் பணியாற்றும் மொஹமட் றிம்ஸானின் தந்தையாவார். அன்னாரின் ஜனாஸா நேற்று மு.ப 11.30 மணிக்கு மருதானை மஸ்ஜிதுல் அப்ரார் ஜும்ஆ பள்ளிவாசல் மையவாடியில் நல்லடக்கம் செய்யப்பட்டது.

ஜனாஸா நல்லடக்கத்தில் உலமாக்கள், பேருவளை நகர சபை எதிர்க்கட்சித் தலைவர் ஹஸன் பாஸி உட்பட லேக்ஹவுஸ் நிறுவன ஊடகவியலாளர்கள், பிரதேச விளையாட்டுக்கழக உறுப்பினர்கள், அரசியல் பிரமுகர்கள் உட்பட பெருந்திரளானோர் கலந்து கொண்டனர்.

**மத்திய வங்கி ஆளுநர் தொடர்பில்**

# ஜனாதிபதியும் பிரதமரும் பொது இணக்கப்பாட்டுக்கு வர வேண்டும்

### சபையில் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ

**லோரன்ஸ் செல்வநாயகம்**



மத்திய வங்கியின் ஆளுநர் நந்தலால் வீரசிங்க தொடர்பில் ஜனாதிபதியும் பிரதமரும் ஒரு பொது இணக்கப்பாட்டுக்கு வர வேண்டுமென எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

மத்திய வங்கியின் ஆளுநர் நந்தலால் வீரசிங்க, இரட்டைப் பிரஜாவுரிமை கொண்டவரென குற்றஞ்சாட்டி அவரை பதவியிலிருந்து நீக்கி தங்களுக்கு வேண்டிய ஒருவரை மத்திய வங்கியின் ஆளுநராக்கும் சதியில் அரசு ஈடுபட்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

எம்.பி.க்களுக்கான செயலமர்வில் மத்திய வங்கி ஆளுநர் தொடர்பில் ஆளும் கட்சி எம்.பி.க்கள் செயற்பட்ட விதம் சட்டம் இயற்றும் இடத்தில் இவ்வாறானவர்களா இருக்கின்றார்களென்ற கேள்வியை மத்திய வங்கி அதிகாரிகள் மத்தியில் ஏற்படுத்தியிருக்குமெனவும் அவர் சபையில் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் விசேட கூற்றொன்றை முன்வைத்து உரையாற்றிய எதிர்க்கட்சித் தலைவர் அது தொடர்பில் மேலும்

06

# கோயிலுக்கு சென்ற பெண் யானை தாக்கி பலி

### மட்டு. கரடியனாறு பகுதியில் சம்பவம்

கரடியனாறு பொலிஸ் பிரிவிற்குட்பட்ட பெரியபுல்லுமலை பிரதேசத்தில் யானை தாக்கியதில் வயோதிப பெண்ணொருவர் (01) மரணமடைந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

பெரியபுல்லுமலை பிரதேசத்தைச் சேர்ந்த நான்கு பிள்ளைகளின் தாயாரான (42) வயதுடைய நவரெட்ணம் புஸ்பவதி என்பவரே யானை தாக்கி மரணமானவராவார்.

கடந்த 28ஆம் திகதி தனது வதிவிடத்திலிருந்து கோப்பாவெளி பிரதேசத்திலுள்ள கோயிலுக்கு வழிபாட்டுக்காக சென்று கொண்டிருக்கும் போது வீதியோரத்தில் மறைந்திருந்த யானை தாக்கியதில் படுகாயமடைந்த அவர் மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்தார். எனினும் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளதாக பொலிஸாரின் ஆரம்பக்கட்ட விசாரணைகளின் போது தெரியவந்துள்ளது.

கரடியனாறு பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரியின் வேண்டுகோளுக்கமைவாக சம்பவ இடத்துக்குச் சென்ற பிரதேச திடீர் மரண விசாரணை அதிகாரி எம்.எஸ்.எம். நசீர் சடலத்தை பார்வையிட்டதுடன் பிரேத பரிசோதனைக்கு உட்படுத்திய பின்னர் உறவினர்களிடம் ஒப்படைந்தார்.

# இலங்கைக்கான கடன் வழங்கும் நாடுகளுக்கு ஜப்பான் அழைப்பு

### நிதியமைச்சர் ஷுனிச்சி சுசுகி மீண்டும் அழைப்பு விடுத்தார்



சர்வதேச நாணய நிதியம், இலங்கையுடன் கடன் ஒப்பந்தத்தை எட்டியுள்ள இச் சந்தர்ப்பத்தில், இலங்கையின் கடன் மறுசீரமைப்பு குறித்து விவாதிக்குமாறு அனைத்து கடன் வழங்கும் நாடுகளையும் ஜப்பானிய நிதி அமைச்சர் ஷுனிச்சி சுசுகி மீண்டும் வலியுறுத்தியுள்ளார்.

இதன்படி சீனா மற்றும் இந்தியா உட்பட அனைத்து கடன் வழங்கும் நாடுகளும் இலங்கையின் கடன் மறுசீரமைப்பு பற்றி விவாதிக்க ஒன்று கூடுவது முக்கியம் என்று ஷுனிச்சி சுசுகி நேற்று (02) நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டில் தெரிவித்தார்.

**வெளிநாட்டமைச்சர் அலி சப்ரியுடன்**

# ஆசிய, பசிபிக் பிராந்திய WFP பணிப்பாளர் சந்திப்பு



இலங்கைக்கு விஜயம் செய்துள்ள ஆசிய, பசுபிக் பிராந்தியத்துக்கான உலக உணவுத் திட்டத்தின் பிராந்தியப் பணிப்பாளர் ஜோன் அய்லிஃப், வெளிநாட்டமைச்சர் அலி சப்ரியை மரியாதை நிமித்தம் நேற்று முன்தினம் (01) சந்தித்தார்.

உணவுக்கான அணுகல் மற்றும் உணவு கிடைக்கும் தன்மையை உறுதி செய்வதற்காக உணவு முறைமைகளை வலுப்படுத்தி, குறிப்பாக சமுர்த்தி திணைக்களத்துடன் பிரதிபலிக்கும் பாதுகாப்பு வலையமைப்பு தொடர்பான திட்டங்களை உருவாக்கும் பொருட்டு, தேசிய போஷாக்குத் திட்டங்கள் மற்றும் தேசிய பாடசாலை உணவுத் திட்டத்தை ஆதரிப்பதன் மூலம் தேசிய சுகாதார அமைப்பு உட்பட பல பகுதிகளில் ஆதரவை வழங்குவதற்காக, கடந்த தசாப்தங்களாக உலக உணவுத் திட்டம் இலங்கைக்கு வழங்கிய ஆதரவை வெளிநாட்டமைச்சர் பாராட்டினார். நாடு எதிர்கொள்ளும் சவால்களிலிருந்து வெளிவருவதற்கு உள்நாட்டு மற்றும் சர்வதேசப் பங்காளிகள் உட்பட அனைத்து பங்குதாரர்களுடனும் பேச்சுவார்த்தை நடத்தி இலங்கை அரசாங்கம் முன்னெடுத்த முயற்சிகள்

06

# ஐக்கிய தேசியக் கட்சியின் 76 ஆவது ஆண்டு நிறைவு

**செவ்வாய்க்கிழமை கொண்டாட்டங்கள்**

ஐக்கிய தேசியக் கட்சியின் 76ஆவது ஆண்டு நிறைவு விழா ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையில் செப்டெம்பர் 06 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை கொழும்பு சுகததாச உள்ளக விளையாட்டரங்கில் நடைபெற ஏற்பாடாகியுள்ளது.

“ஒன்றிணைவோம்” என்ற கருப்பொருளின் கீழ் இம்முறை இம் மாநாடு நடைபெறவுள்ளது.

28 வருடங்களின் பின்னர் ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் கட்சி மாநாட்டுக்கு தலைமை தாங்கவுள்ளார்.

கடந்த 1993 ஆம் ஆண்டு டி.பி. விஜேதுங்க ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவராக இருந்த போது கட்சியின் ஆண்டு விழாக்கள் கொண்டாடப்பட்டன.

ஆண்டு விழா கூட்டத்தை தொடர்ந்து கட்சியில் பல முக்கிய பதவிகளில் மாற்றங்கள் இருக்குமென கட்சி வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

# அடக்குமுறைகளைப் பற்றி பேசும் சஜித் தந்தையின் அடக்குமுறைகளை மறந்து விட்டார்

**லோரன்ஸ் செல்வநாயகம்**



அடக்குமுறைகளைப் பற்றி பேசும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தமிழ் மக்களின் வீடுகளையும் சொத்துக்களையும் எரித்து 30 வருட யுத்தத்துக்கு வழி வகுத்தவர் அவரது தந்தை பிரேமதாச என்பதை மறந்து பேசுகிறாரென அமைச்சர் பிரசன்ன ரணதுங்க பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

அதே வேளை நாட்டில் 60,000 இளைஞர்களை கொன்று குவித்ததும் அவரது தந்தை பிரேமதாசவே என குறிப்பிட்ட அமைச்சர், எரியும் நெருப்பில் குளிர்காய முற்பட வேண்டாம் என்றும் கண்ணாடி வீட்டில் இருந்து கொண்டு கல்லெறிவது நல்லதல்ல என்றும் தெரிவித்தார்.

எதற்கெடுத்தாலும் ராஜபக்ஷ குடும்பத்தினர் மீது குற்றம் சாட்டும் எதிர்க்கட்சியினர் உக்ரேன் யுத்தத்தோடு இதைவிட மோசமான பொருளாதார நிலைமையை எதிர்காலத்தில் எதிர்கொள்ள நேரும் போதும் அதற்கும் ராஜபக்ஷக்கள் மீதுதான் பழி போடுவார்கள் என்றும் சபையில் தெரிவித்தார்.

வரவு செலவுத் திட்டம் மீதான மூன்றாம் நாள் விவாதம் நேற்று பாராளுமன்றத்தில் இடம் பெற்ற போது விவாதத்தில் உரையாற்றிய அமைச்சர் அது தொடர்பில் மேலும் தெரிவிக்கையில்:

நாட்டின் நிலைமை கடந்த வருடத்தை விட மாற்றமடைந்து மிக மோசமான நிலையில் காணப்படுகிறது. இத்தகைய சூழ்நிலையிலேயே ஆறு அடிப்படை

06

# இந்தியா உணவுக் கப்பலை அனுப்பும்போது சீனா உளவுக் கப்பலையே அனுப்புகிறது

### சபையில் கோவிந்தன் கருணாகரம் எம்பி

**லோரன்ஸ் செல்வநாயகம்**



இலங்கைக்கு இந்தியா உணவுக் கப்பல்களை அனுப்பி உதவுகையில் சீனா உளவுக் கப்பலையே அனுப்புகின்றதென தமிழ்த் தேசிய கூட்டமைப்பு எம்.பி கோவிந்தன் கருணாகரம் பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

அதேவேளை பாராளுமன்றத்தில் சபைக்குள் செங்கோலை எடுத்து வரும்போது எழுந்து நிற்காத அத்துரலிய ரதன தேரர் சீனாவிலிருந்து அந்த உளவுக் கப்பல் வரும்போது அங்கு சென்று அந்த உளவுக்கப்பலுக்கு மரியாதை வழங்கும் வகையில் எழுந்து நின்றதாகவும் அவர் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற இடைக்கால வரவு செலவு திட்டத்தின் மூன்றாம் நாள் விவாதத்தில் உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்:

நாடு நெருக்கடிக்குள் சிக்கிய நேரத்தில் உதவிய நாடு இந்தியா மட்டுமே.கடந்த கால பொருளாதார நெருக்கடியின் போது 04 பில்லியன் டொலர்களை இலங்கைக்கு கடனாக வழங்கியுள்ளது.

06

**கல்முனை வடக்கு பிரதேச செயலக விவகாரம்**

# தமிழ் மக்கள் தொடர்ந்தும் ஏமாற்றப்படுவதை அனுமதிக்க முடியாது

**லோரன்ஸ் செல்வநாயகம்**



2015 ஆம் ஆண்டு முதல் கல்முனை வடக்கு பிரதேச செயலக விவகாரம் தொடர்கிறது. அந்த பிரதேச செயலகம் அரச பதிவிலிருந்து நீக்கப்பட்ட ஒரு நாசகார செயல் இடம் பெற்றுள்ளது. எந்த அதிகாரிகள் மட்டத்தில் இது நடைபெற்றுள்ளது என்பதை ஆராய வேண்டும். சில தமிழ், முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர்கள் இதற்கு பொறுப்பு கூற வேண்டும்.

நல்லிணக்க அரசியல் என்ற பெயரில் தமிழ் மக்களின் உரிமைகள் விழுங்கப்படுகின்றன. மக்கள் தொடர்ந்து ஏமாற்றப்பட்டு வருகின்றனர். நோன்பு, தைப்பொங்கல் போன்ற பண்டிகைகளை இணைந்து கொண்டாடுவதன் மூலம் நல்லிணக்கம் ஏற்படப் போவதில்லை. இவ்வாறு தமிழ் மக்கள் ஏமாற்றப்படுவதை இனியும் அனுமதிக்க முடியாது.

நாசகார அரசியல் மூலம் தமிழ் மக்களின் காணி மற்றும் பொருளாதார வளங்கள் குழிதோண்டி புதைக்கப்படுகிறது. அவ்வாறான செயற்பாடுகளை மேற்கொள்ள முற்பட வேண்டாம் என சம்பந்தப்பட்டவர்களை நான் கேட்டுக் கொள்கின்றேன் என்றும் வியாழேந்திரன் எம்பி தெரிவித்தார்.

அதேவேளை மட்டக்களப்பு மாவட்டத்தில் கல்விப் பொது தராத உயர்தரப் பரீட்சையில் சிறந்த பெறுபேறுகளை பெற்றுக் கொண்ட மாணவர்களை வாழ்த்துவதில் தாம் பெருமை அடைவதாகவும் கொரோனா வைரஸ் சூழ்நிலை உள்ளிட்ட நெருக்கடியான நிலைகளின் மத்தியிலும் அவர்கள் புரிந்துள்ள சாதனைக்காக பாராட்டுக்களைத் தெரிவித்துக் கொள்வதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# தேயிலை தோட்டங்களுக்கு உரம் விநியோகம் ஆரம்பம்

தேயிலை பயிர்ச்செய்கைக்கான யூரியா மற்றும் ஏனைய உர வகைகளை விநியோகிக்கும் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக சிறு தேயிலைத் தோட்ட அபிவிருத்தி அதிகார சபை தெரிவித்துள்ளது.

சிறு தேயிலை தோட்ட சங்கங்கள் மற்றும் தேயிலை தொழிற்சாலைகளூடாக உரங்கள் விநியோகிக்கப்படுவதாக சிறு

06

**நாணய மாற்று**

| நாணயம் | வாங்கும் விலை | விற்பனை விலை |
|---|---|---|
| அவுஸ்திரேலியா டொலர் | 244.50 | 256.43 |
| கனடியன் டொலர் | 272.16 | 285.15 |
| யூரோ | 353.45 | 368.56 |
| ஜப்பான் யென் | 2.5937 | 2.6993 |
| சிங்கப்பூர் டொலர் | 254.19 | 265.21 |
| ஸ்டேலிங் பவுன்ஸ் | 418.55 | 435.71 |
| சுவிஸ் பிராங்க் | 368.26 | 385.71 |
| அமெரிக்க டொலர் | 357.40 | 368.71 |

| மத்திய கிழக்கு | குறித்த விலை | | குறித்த விலை |
|---|---|---|---|
| பஹ்ரின் டினார் | 957.52 | கட்டார் ரியால் | 98.22 |
| குவைத் டினார் | 1,173.60 | சவூதி ரியால் | 96.12 |
| ஓமான் ரியால் | 937.65 | ஐ.அ. இராச்சியம் டிர்ஹாம் | 98.28 |

தினகரன்
THINAKARAN

35, டி. ஆர். விஜயவர்தன மாவத்தை, கொழும்பு - 10
தபால் பெட்டி இலக்கம்: 834
தொலைபேசி இலக்கம்: 2429429, 2429272, 2429279
பெக்ஸ் : 2429270, 2429329, விளம்பர முகாமையாளர் : 2429321

சுபகிருது வருடம் ஆவணி மாதம் 18ஆம் நாள் சனிக்கிழமை
ஹிஜ்ரி வருடம் 1444 ஸபர் பிறை 06

## குறள் தரும் சிந்தனை



ஒளியார்முன் ஒள்ளிய ராதல் வெளியார்முன்
வான்சுதை வண்ணம் கொளல்

அறிவாளிகளுக்கு முன்னால் அவர்களையொத்த பாலின் தூய்மையுடன் விளங்கும் அறிஞர்கள், அறிவில்லாதவர்கள் முன்னால் வெண்சுண்ணாம்பு போல் தம்மையும் அறிவற்றவர்களாய்க் காட்டிக் கொள்ள வேண்டும்.

# தமிழக அரசியலில் மீண்டும் ஒலிக்கும் கச்சதீவு விவகாரம்!

இலங்கையிடமிருந்து கச்சதீவை மீட்டெடுக்க வேண்டுமென்ற கோரிக்கைகள் சமீப காலமாக தமிழ்நாட்டில் மீண்டும் தலை தூக்கியுள்ளன. தமிழ்நாட்டிலுள்ள திராவிடக் கட்சிகளின் அரசியல் முக்கியஸ்தர்கள் இக்கோரிக்கையை நீண்ட காலமாகவே வலியுறுத்தி வருகின்றனர். அதே சமயம் தற்போது பாரதீய ஜனாதா கட்சியின் முக்கியஸ்தர்களே கச்சதீவை மீட்டெடுக்க வேண்டுமென்ற கோரிக்கையை முன்வைக்கத் தொடங்கி விட்டனர்.

பாரதீய ஜனதா கட்சியின் தமிழ்நாடு மாநிலத் தலைவர் அண்ணாமலை அண்மையில் இக்கோரிக்கையை வலியுறுத்தியிருக்கின்றார். கச்சதீவை இந்தியா மீட்டெடுக்க வேண்டுமென்பது ஆளும் பாரதீய ஜனதாவின் கொள்கையென்பது இதுவரை தெளிவாகத் தெரியவில்லை. கச்சதீவை மீட்க வேண்டுமென ஆளும் பா.ஜ.க இதுவரை ஒருபோதுமே வெளிப்படையாகக் கூறியதுமில்லை. அவ்வாறிருக்கையில் கச்சதீவை இந்தியா மீட்டெடுக்க வேண்டுமென தமிழக மாநில பா.ஜ.க தலைவர் அண்ணாமலை கூறியிருப்பது கூர்ந்து நோக்க வேண்டியதாகும்.

இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையிலான பாக்கு நீரிணையில் அமைந்துள்ள குட்டித்தீவு கச்சதீவு ஆகும். அன்றைய காலத்தில் இத்தீவு இந்தியாவின் வசம் இருந்தது. இந்தியப் பிரதமராக இந்திரா காந்தியும், இலங்கைப் பிரதமராக சிறிமாவோ பண்டாரநாயக்கவும் பதவி வகித்த காலத்தில், கச்சதீவை இலங்கைக்குச் சொந்தமான தீவாக இந்திரா காந்தி கையளித்திருந்தார். அவ்விரு பிரதமர்களதும் நட்பின் அடையாளமாகவே கச்சதீவு இலங்கையிடம் கையளிக்கப்பட்டதாக அந்நாளில் செய்திகள் வெளியாகியிருந்தன.

அதன் பின்னர் சில காலம் கச்சதீவு தொடர்பாக இரு நாடுகளுக்குமிடையில் எதுவித முரண்பாடுகளுமே நிலவியதில்லை. ஆனால் இந்திய மீனவர்கள் இலங்கைக் கடல் எல்லைக்குள் அத்துமீறிப் பிரவேசித்து மீன்பிடிப்பது அதிகரித்த பின்னரே, கச்சதீவு விவகாரமானது தமிழ்நாட்டில் தீவிரமடையத் தொடங்கியது. கச்சதீவை எவ்வாறாவது இந்தியா மீட்டெடுக்க வேண்டுமென தமிழ்நாட்டின் அரசியல்வாதிகளும், மீனவர்களும் தொடர்ந்தும் குரலெழுப்பி வருகின்றனர்.

கச்சதீவை மீட்க வேண்டுமென்ற தமிழ்நாட்டின் கோரிக்கையின் பின்னணியில் இரு காரணிகள் உள்ளன. முதலாவது காரணி மீனவர்களின் நலன் சார்ந்ததாகும். கச்சதீவை இந்தியா தனக்குச் சொந்தமாக்கிக் கொள்ளுமானால், கச்சதீவையும் தாண்டியவாறு இலங்கைக் கடல் எல்லைக்குள் வந்து தாராளமாக மீன்பிடித்துச் செல்ல வழியேற்படுமென தமிழ்நாடு மீனவர்கள் எண்ணுகின்றனர். கச்சதீவு இந்தியாவுக்குச் சொந்தமாகி விட்டால், இலங்கைக் கடல்பரப்பினுள் மீன்பிடிப்பதில் இலங்கைக் கடற்படையின் தொந்தரவு இருக்காதென தமிழக மீனவர்கள் நினைக்கின்றனர். எனவேதான் இலங்கையிடமிருந்து கச்சதீவை இந்தியா மீட்க வேண்டுமென அவர்கள் கோருகின்றனர்.

இக்கோரிக்கைக்கான அடுத்த காரணி தமிழக அரசியல்வாதிகளின் சுயநலன் சார்ந்ததாகும். தமிழ்நாட்டு மீனவர்களின் கோரிக்கையை தாங்களும் வலியுறுத்துவதன் மூலம் மக்களின் ஆதரவைச் சம்பாதித்துக் கொள்ள முடியுமென தமிழக அரசியல்வாதிகள் நினைக்கின்றனர். அதேவேளை தமிழ்நாடு கரையோரப் பிரதேசங்களில் மீன்பிடிப் படகுகள் பலவற்றின் உரிமையாளர்கள் அரசியல்வாதிகளும், அவர்களது நெருக்கமான ஆதரவாளர்களுமாவர். எனவே அவர்களது கோரிக்கைக்கு ஆதரவாகச் செயற்பட வேண்டிய கட்டாயம் அங்குள்ள அரசியல்வாதிகளுக்கு உள்ளது.

எனவேதான் தமிழ்நாட்டின் திராவிடக் கட்சிகளின் தலைவர்களும், தமிழ்நாட்டு மக்களும் கச்சதீவை மீட்க வேண்டுமென தொடர்ந்தும் வலியுறுத்தி வருகின்றனர். அந்த நிலைமை மாற்றமடைந்து தற்போது தமிழ்நாடு மாநில பாரதீய ஜனாதா கட்சித் தலைவரே கச்சதீவை இந்தியா மீட்டெடுக்க வேண்டுமென்ற வலியுறுத்தலை முன்வைத்துள்ளார். தமிழ்நாட்டு மக்களின் ஆதரவைப் பெருக்கிக் கொள்ள வேண்டுமென்ற உள்நோக்கம் கொண்ட கருத்தாகவே அண்ணாமலையின் கோரிக்கையை நோக்க வேண்டியுள்ளது.

தமிழ்நாட்டின் அரசியலில் இலங்கை விவகாரம் அக்காலத்தில் இருந்தே பெரும் தாக்கம் செலுத்தி வருகின்றதென்பது தெரியாத விடயமல்ல. இலங்கைத் தமிழர்கள் மீது தமிழக மக்கள் அன்பும் அக்கறையும் கொண்டுள்ளனரென்பது உண்மை. அதேநேரம் தமிழ்நாட்டின் அரசியல்வாதிகள் பலர் இலங்கைத் தமிழர் விவகாரத்தை தங்களது அரசியல் ஆதாயத்துக்குப் பயன்படுத்தி வருகின்றனரென்பதும் உண்மை.

அயல்நாட்டின் கடல் எல்லைக்குள் இந்திய மீனவர்கள் அத்துமீறிப் பிரவேசித்து மீன்பிடிப்பது குற்றம் என்ற உணர்வை தமிழக மீனவர்கள் மாத்திரமன்றி, அங்குள்ள அரசியல்வாதிகளும் கொண்டிருக்கவில்லை. அதன் காரணமாகவே தமிழக மீனவர்கள் இலங்கைக் கடல் எல்லைக்குள் அத்துமீறிப் பிரவேசிக்கின்றனர். அத்துமீறி மீன்பிடிப்பதை சட்டபூர்வமாக்குவதற்காகவே கச்சதீவை மீட்க வேண்டுமென தமிழக மீனவர்கள் குரலெழுப்புகின்றனர்.

கச்சதீவானது இலங்கைக்கு சட்டபூர்வமாக வழங்கப்பட்டதாகும். அவ்வாறு வழங்கப்பட்ட தீவை மீண்டும் தன்வசப்படுத்துவதற்கு இந்தியா ஒருபோதுமே முற்படப் போவதில்லையென்பது தெளிவானதொரு யதார்த்தமாகும். அரசியலுக்காக இந்திய அரசியல்வாதிகள் பலதும் பேசுவார்கள். அவற்றில் ஒரு கோஷமாகவே கச்சதீவு விவகாரத்தையும் எடுத்துக் கொள்ள வேண்டியுள்ளது.

editor.tkn@lakehouse.lk

# இலங்கைக்கு உதவுவதற்கான உணவு உதவியைக் கையளித்தது ஜப்பான்

ஆறு மில்லியனுக்கும் அதிகமான மக்கள் – இலங்கை மக்கள் தொகையின் சுமார் 30 சதவீதமானோர் உணவு நெருக்கடியை எதிர்கொள்வதால் இந்த வருடத்தின் ஆரம்பத்தில் ஜப்பான் அரசாங்கத்தினால் உறுதியளிக்கப்பட்ட உணவு உதவியின் முதலாவது தொகுதியானது ஐக்கிய நாடுகளின் உலக உணவுத் திட்டத்தின் ஊடாக வழங்கப்பட்டது.

நிதியமைச்சில் நடைபெற்ற நிகழ்வின் போது WFP இன் பிரதிநிதியும், வதிவிடப் பணிப்பாளருமான அப்துல் ரஹீம் சித்திக்கீயின் முன்னிலையில் இலங்கைக்கான ஜப்பானிய தூதுவர் மிஷ்கொஷி ஹிதியாகியினால் வர்த்தக, வணிக மற்றும் உணவு பாதுகாப்பு அமைச்சர் கௌரவ நளீன் பெர்னாண்டோவிடம் வர்த்தக, வணிக மற்றும் உணவு பாதுகாப்பு அமைச்சில் வைத்து உதவிகள் கையளிக்கப்பட்டன.

அரிசி, பருப்பு மற்றும் எண்ணெய் உள்ளடங்கியதாக இந்த உதவியானது, 1.5 மில்லியன் அமெரிக்க டொலர்கள் பெறுமதியானதாகும். கிராமப்புற, மற்றும் நகர்ப்புறங்களில் சுமார் 15,000 பேருக்கும், 380,000 பாடசாலை சிறுவர்களுக்கும் WFPஇனால் இது பகிர்ந்தளிக்கப்படும்.

WFPஇன் துரித கொள்முதலுடன் அத்தியாவசிய உணவுப் பொருட்களின் முதலாவது தொகுதியை கையளிக்க முடிந்தமை எமக்கு பெருமிதம் தருகின்றது. எதிர்பாராத பொருளாதார நெருக்கடியின் போது உணவுப் பற்றாக்குறை மற்றும் அதிகரிக்கும் உணவு விலைகளின் மத்தியில், கடும் சிரமத்தை எதிர்கொள்ளும் நாட்டில் உள்ள இலகுவில் பாதிப்புக்கு உள்ளாகக் கூடிய குடும்பங்கள் மற்றும் சிறுவர்களுக்கு இந்த உதவி வழங்கப்படும். தேவையில் உள்ள அனைத்து மக்களுக்கும் இந்த மனிதநேய உதவியானது நிவாரணத்தை வழங்கும் எனவும், அவர்களது நாளாந்த ஊட்டச்சத்து தேவைகளை எட்டுவதற்கு உதவும் எனவும் நாம் உண்மையாக நம்புகின்றோம்' என இலங்கைக்கான ஜப்பானிய தூதுவர் H.E. மிஷ்கொஷி ஹிதியாகி தெரிவித்தார்.

இந்த உரிய நேர உதவிக்காக ஜப்பான் மக்களுக்கு நான் நன்றித் தெரிவிக்கின்றேன். உலக உணவுத் திட்டத்தின் கோரலுக்கு பதிலளித்த முதல் நாடுகளில் ஒன்றாக ஜப்பான் உள்ளது. போதியளவு மற்றும் ஊட்டச்சத்து மிக்க உணவுப் பழக்கம் ஒன்றை பேணுவதற்கான மில்லியன் கணக்கான மக்களின் ஆற்றலில் தாக்கத்தை தொடர்ச்சியாக ஏற்படுத்தும் உயர்ந்து செல்லும் விலைகளும், உணவு மற்றும் ஏனைய அத்தியாவசியப் பொருட்களின் பற்றாக்குறை என்பவற்றினால் இலங்கையில் அதிகரித்துச் செல்லும் உணவுப் பாதுகாப்பின்மையை அடையாளப்படுத்துவதில் இந்த உதவி நீண்ட தூரம் செல்லும்' என சித்திக்கீ குறிப்பிட்டார்.





ஜப்பான் அரசாங்கத்தினால் உறுதியளிக்கப்பட்ட உணவு உதவியின் முதலாவது தொகுதியானது இலங்கைக்கான ஜப்பானியத் தூதுவர் மிஷிகோஸி ஹிதியாகியினால், வர்த்தக, வணிக மற்றும் உணவுப் பாதுகாப்பு அமைச்சர் நளீன் பெர்னாண்டோவிடம் உலக உணவுத் திட்டத்தின் இலங்கைப் பிரதிநிதி மற்றும் வதிவிடப் பணிப்பாளர் அப்துர் ரஹீம் சித்திக்கீ முன்னிலையில் கையளிக்கப்படுகின்றது.

60 சதவீதத்திற்கும் அதிகமான குடும்பங்கள், பெண்கள் மற்றும் சிறுவர்கள் மத்தியில் ஏற்கனவே உள்ள அதிகளவு ஊட்டச்சத்தின்மையை மேலும் அதிகரிக்கக் கூடிய உணவின் அளவை குறைத்தல், குறைந்தளவு ஊட்டச்சத்து உணவை உட்கொள்ளல் போன்ற எதிர்கொள்ளல் உபாயங்களை நாடுவதாக அண்மைக்கால ஆய்வுகள் சுட்டிக்காட்டுகின்றன.

இதற்குப் பதிலளிக்கும் விதமாக, அவசர உணவு உதவி தேவைப்படும் 1.4 மில்லியன் மக்கள் உள்ளடங்கலாக, உணவு, பணம் அல்லது வவுச்சர் உதவி மற்றும் ஒரு மில்லியன் பாடசாலைக் குழந்தைகள் மற்றும் தற்போதுள்ள தேசிய சமூகப் பாதுகாப்பு திட்டங்களுக்கு ஆதரவளிப்பதன் ஊடாக ஒரு மில்லியன் கர்ப்பிணிகள் மற்றும் தாய்ப்பாலூட்டும் பெண்கள் உள்ளடங்கலாக 3.4 மில்லியன் மக்களுக்கு அவசர உதவி வழங்குவதற்கு உலக உணவுத் திட்டம் நிதி மற்றும் ஆதரவைத் திரட்டுகின்றது.

**மேலதிக தகவல்களுக்கு:**
Tanya Jansz; WFP/Colombo Tel: +94 769102462
Embassy of Japan, econojpn@co.mofa.go.jp, Tel. +94-11-269-3831

# தேசிய ரீதியில் கிழக்கு மாகாணம் இம்முறை கல்வியில் பெரும் பங்களிப்பு செய்துள்ளது

கிழக்கில் சாதனை படைத்த மாணவன் தமிழ்வண்ணன் துவாரகேஷ் கல்வி விழிப்புணர்ச்சியை ஏற்படுத்தியுள்ளார் என்று சம்மாந்துறை வலயக்கல்விப் பணிப்பாளர் எஸ். எம். எம். அமீர் புகழாரம் சூட்டினார்.

சம்மாந்துறை வலயத்துக்கு உட்பட்ட நாவிதன்வெளி அன்னமலை மகாவித்தியாலயத்தில் இம்முறை வெளியான கபொத உயர்தர பரீட்சை முடிவின்படி, மூன்று பாடங்களிலும் மூன்று 'ஏ' சித்திகளைப் பெற்ற மாணவிகளை பாடசாலைக்கு சென்று வாழ்த்தி பாராட்டினார் சமாந்துறை வலய கல்வி பணிப்பாளர் எஸ் எம் எம் அமீர்.

கடந்த வியாழக்கிழமை இந்த நிகழ்வு பாடசாலையில் நடைபெற்றது. அவர் அங்கு உரையாற்றினார்.

பாடசாலை பிரதி அதிபர் திருமதி நிலந்தினி ரவிச்சந்திரன் தலைமையில் இந்த பாராட்டு நிகழ்வு இடம்பெற்றது .

சம்மாந்துறை வலய கல்வி பணிப்பாளர் எஸ் எம்.எம். அமீர் அவர்களோடு பாடசாலை மேம்பாட்டு திட்டப் பணிப்பாளர் உதவிகல்விப் பணிப்பாளர் வி.ரி.சகாதேவராஜா, நிர்வாக உத்தியோகத்தர் எம். ஏ. எம். முஷாரப் ஆகியோரும் கலந்து கொண்டார்கள்.

மூன்று 'ஏ' சித்திகளைப் பெற்று சாதனை படைத்த அமிர்தலிங்கம் குவார்த்தனா, சிவபரன் திவ்யபாரதி ஆகியோர் அங்கே பாராட்டி வாழ்த்தி கௌரவிக்கப்பட்டனர். வலயக் கல்வி பணிப்பாளர் எஸ். எம். எம். அமீர் மேலும் கூறுகையில்,





"தேசிய மட்டத்திற்கு இம்முறை எமது கிழக்கு மாகாணம் முக்கியமான பங்களிப்பை செய்திருக்கின்றது. உயிரியல் துறையில் அகில இலங்கை ரீதியில் முதலிடம் பெற்ற மாணவன் தமிழ்வண்ணன் துவாரகேஷ் எமது கிழக்கு மாகாண மாணவன் .அதிலும் நண்பர் சகாவின் பிறந்த ஊரான காரைதீவைச் சேர்ந்தவர். அந்த வகையில் நமக்கெல்லாம் அம்மாணவனால் பெருமை கிடைத்திருக்கிறது.

துவாரகேஷ் கிழக்கு மாகாணத்தில் கல்வி பயில்கின்ற ஏனைய மாணவர்களுக்கு ஒரு உற்சாகத்தை வழங்கி இருக்கின்றான். கல்வியிலேயே விழிப்புணர்ச்சி ஏற்படுவதற்கு சுவாமி விபுலானந்த அடிகளார் பிறந்த மண்ணில் இருந்து தோன்றிய துவாரகேஷ் முன்மாதிரியான மாணவராக திகழ்வதையிட்டு நாமும் பெருமை அடைகின்றோம். மகிழ்ச்சி அடைகின்றோம்.

இது போல ஏனைய மாணவர்களும் கல்வியிலே சிறந்து விளங்க வேண்டும். பின்தங்கிய நாவிதன்வெளி பிரதேசத்திலிருந்து சாதனை படைத்த குவார்த்தனா, திவ்ய பாரதி ஆகிய மாணவிகளை வலயம் சார்பில் பாராட்டுகின்றேன். மேலும் இங்கு பரீட்சைக்குத் தோற்றிய 20 மாணவர்களுள் 18 மாணவர்கள் சித்தி பெற்றிருப்பதாக அதிபர் தெரிவித்தார். அவர்கள் அனைவரையும் அதிபர், ஆசிரியர்கள், பெற்றோர்களையும் வலயம் சார்பில் பாராட்டுகின்றேன். இங்கு பயின்று உயர் கல்விக்காக கல்முனைக்கு சென்று அங்கு மருத்துவத் துறையிலும் ஏனைய துறையிலும் தெரிவான மாணவர்களும் இங்கு பாராட்டப்பட வேண்டும். எதிர்காலத்தில் பாடசாலை மேலும் மிளிர வேண்டும் என்று வாழ்த்துகின்றேன்" என்றார்.

நிகழ்வில் உபஅதிபர் என்.வன்னியசிங்கம், உயர்தர பிரிவுத் தலைவர் எஸ்.ஜெகதீசன், என்.கோடீஸ்வரன் உள்ளிட்ட உயர்தர ஆசிரியர்களும் மற்றும் மாணவர்களும் கலந்து கொண்டார்கள்.

காரைதீவு குறூப் நிருபர்...

# பூவரசந்தீவு அல்-பலாஹ் அஹதிய்யா பாடசாலையின் முப்பது வருட பூர்த்தி விழாவும், பூவாசம் நூல் வெளியீடும்

கிண்ணியா பூவரசந்தீவு அல் பலாஹ் அஹதிய்யா பாடசாலையின் முப்பது வருட பூர்த்தி விழாவும் பூவாசம் நூல் வெளியீடும் பூவரசந்தீவு அல் மினா மகாவித்தியாலயத்தில் அண்மையில் நடைபெற்றன.

அல் பலாஹ் அஹதிய்யா பாடசாலையின் தலைவரும் அல் மினா மகாவித்தியாலயத்தின் அதிபருமான அஷ்ஷெய்ஹ் எம்.வை.எம்.ஹதியத்துல்லாஹ் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் அகில இலங்கை அஹதிய்யா மத்திய சம்மேளனத்தின் தலைவர் எம்.ஆர்.எம். சறூக் பிரதம அதிதியாக கலந்து கொண்டு சிறப்பித்தார்.





## அல் மினா மகாவித்தியாலயத்தில் கோலாகலமான வைபவம்

ஏனைய அதிதிகளாக முஸ்லிம் கலாசார பண்பாட்டலுவல்கள் திணைக்கள உதவிப் பணிப்பாளர் எம்.எல்.எம்.அன்வர் அலி,முன்னாள் முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் அமைச்சின் இணைப்பாளரும் அகில இலங்கை அஹதிய்யா மத்திய சம்மேளன பொருளாளருமான எம்.எச்.எம்.உவைன், நத்வதுல் உலமா அரபுக் கல்லூரி தலைவர் அஷ்ஷெய்ஹ் எம்.எம்.கரீம், சவூதி தூதரக கணக்காளர் அஷ்ஷெய்ஹ் எஸ். ஏ.அப்துல் அஸீஸ் (நளீமி), மேலதிக மாகாண கல்விப் பணிப்பாளர் எம்.எம்.ஜவாத்,அல் ஹிக்மா பௌண்டேஷனின் தலைவர் கலாநிதி அப்பாஸ் இபாதுல்லாஹ்,சுவீடனில் வசிக்கும் பார்க் நிறுவனத்தின் தலைவர் பாரிஸ் மஹரூப்,கிண்ணியா நகரசபை உறுப்பினர் எம். எம்.மஹ்தி ஆகியோருடன் ஊர் பிரமுகர்கள் பலரும் கலந்து சிறப்பித்தனர். அல்பலாஹ் அஹதிய்யா பாடசாலை 1989 ஆம் ஆண்டு 10 ஆம் மாதம் ஒக்டோபர் 27 ஆம் திகதி அல் மினா மகாவித்தியாலய மண்டபத்திலேயே ஆரம்பிக்கப்பட்டது. மூதூர் மத்திய அஹதியாவினுடைய தலைவர் பசீர் தலைமையில் ஆரம்பிக்கப்பட்டு அன்று தொடக்கம் இன்றுவரை பல சவால்கள் தடைகள் அத்தனையையும் எதிர்கொண்டு எதிர்நீச்சல் போட்டு வளர்ந்து வருகிறது.

கடந்த காலங்களில் ஏற்பட்ட வன்முறைகள் வன்செயல் பயங்கரவாத பிரச்சினைகள் காரணமாக அகதிகளாக கிண்ணியா பிரதேசத்திலே பூவரசந்தீவு மக்கள் வாழ்ந்தபோது அங்கே அல் அக்ஸா கல்லூரியில் இவ்வஹதிய்யா பாடசாலை இயங்கியது.

இவ்வாறு பல்வேறு தடைகளையும் தாண்டி இவ் அஹதிய்யா பாடசாலை சிறப்பாக இயங்கி வருகிறது. அதிலும் குறிப்பாக கிண்ணியா பிரதேசத்திலே மிக நீண்டகாலமாக இயங்கி வருகின்ற அஹதிய்யா பாடசாலை இதுவென்பதும் குறிப்பிடத்தக்கது.

இந்த அஹதிய்யா பாடசாலையினுடைய ஸ்தாபகராக அல் மினா மகாவித்தியாலயத்தின் அதிபர் அஷ்ஷெய்ஹ் எம்.வை.எம் ஹதியத்துல்லாஹ் செயற்பட்டு வருகிறார். அவருடைய இளமைக் காலத்திலிருந்தே ஒரு சமூகப் பணியாக தொடங்கி வைக்கப்பட்ட இவ்வஹதிய்யா பாடசாலை இன்று வளர்ந்து அறிவு மணம் பரப்பிக் கொண்டிருக்கிறது.

அதேவேளை, அல் பலாஹ் அஹதிய்யா பாடசாலையின் தலைவர் எம்.வை.எம்.ஹதியத்துல்லாஹ் இன்று திருகோணமலை மாவட்ட அஹதிய்யா பாடசாலை சம்மேளன தலைவராகவும் செயற்பட்டுக் கொண்டிருக்கின்றார். பல்வேறு சமூக முன்னெடுப்புகளை முன்னெடுத்து வருகின்ற இவர் கடந்தகாலங்களில் கிண்ணியா ஜம்இய்யத்துல் உலமாவினுடைய செயலாளராகவும் செயற்பட்டவர்.

யுத்த காலத்தில் முஸ்லிம் சமூக தலைவர்களோடும் அரச படைகளோடும் விடுதலை புலிகளோடும் சமாதான செற்பாடுகளை முன்னெடுத்தவர். 2010 இல் ட்ரான்பெரன்ஷி இன்டநெஷனல் சிறிலங்கா அமைப்பினால் ஊழல் மோசடிக்கெதிராக கடுமையாக உழைத்தமைக்கான விருதொன்றையும் இவர் பெற்றுள்ளார்.

எம்.வை.எம்.ஹதியத்துல்லாஹ் அவர்கள் இலங்கை யுத்த நிறுத்த கண்காணிப்பு குழுவோடு இணைந்து பல பேச்சுவார்த்தைகளில் ஈடுபட்டு சமூகத்திற்காக பல தியாகங்களை செய்தவர். அதேநேரம், அல் பலாஹ் அஹதிய்யா பாடசாலையில் அன்று கற்ற மாணவர்கள் இன்று அதனுடைய ஆசிரியர்களாகவும் அதனுடைய நிருவாகிகளாகவும் செயற்படுகின்றனர்.

பூவாசம் நூல் பூவரசந்தீவு பிரதேசத்தின் வரலாற்றையும் அதன் முதுசங்களையும் அதன் பாரம்பரியத்தையும் செழுமையையும் பேசுகிறது. அதேநேரம், அல் பலாஹ் அஹதிய்யா பாடசாலையின் வளர்ச்சிப் படிகளையும் அதன் வரலாற்றையும் படம் பிடித்துக் காட்டுகிறது. நூலாசிரியர் கே.எம். முர்சலீன் ஆசிரியரின்முயற்சி வரவேற்கத் தக்கதும் பாராட்டுக்குரியதுமாகும்.







இர்ஷாத் இமாமுதீன்...
(கிண்ணியா தினகரன் நிருபர்)

# அரை நூற்றாண்டு காலம் பூர்த்தி செய்துள்ள ஜாமிஆ நளீமியாவின் வளர்ச்சிப் பாதை

**கொடைவள்ளல் எம்.ஐ.எம். நளீம் ஹாஜியார் இலங்கையின் பிரபல புத்திஜீவிகள் குழாமொன்றின் ஆலோசனையோடும் ஒத்துழைப்போடும் 1973 ஆம் ஆண்டு பேருவளையில் ஜாமியா நளீமியா கலாபீடத்தை அமைத்தார். ஜாமியா நளீமியா ஸ்தாபிக்கப்பட்டு இப்போது 50 ஆண்டுகளாகி விட்டது.**

நளீமியாவின் கல்வி சார் இலக்குகள், கல்வித்திட்டம், பாடப்பரப்பு என்பன சிறந்த கல்விப்புலமும், அறிவார்ந்த அணுகுமுறையும், பரந்த நோக்கத்துடனும் ஆன்மீக பண்பாட்டு பயிற்சியும் கொண்ட அறிஞர் பரம்பரையொன்றினை உருவாக்கும் நோக்கைக் கொண்டவையாகும். நளீமியாவிலிருந்து பட்டம் பெற்று வெளியாகக் கூடிய பட்டதாரிகள் இலங்கையின் பல்லின சமூகங்களின் வேறுபட்ட கலாசாரப் பெறுமானங்களை மதிக்கும் பரந்த மனப்பான்மையையும் மனித நேயப்பண்புகளையும் பெற்றிருக்க வேண்டும் என எதிர்பார்க்கப்படுகின்றனர்.

ஜாமிஆ நளீமியாவானது 1982 ஆம் ஆண்டு முதல் பாராளுமன்றத்தில் கூட்டிணைக்கப்பட்ட உள்நாட்டு இறைவரிச் சட்டத்தின் கீழ் இலாப நோக்கமற்ற கல்விச் சேவை நிறுவனமாக பதிவு செய்யப்பட்டுள்ளது. 1973 தொடக்கம் இதுவரை 1500 இற்கும் அதிகமான பட்டதாரிகள் பட்டம் பெற்று வெளியாகியுள்ளனர். அதுமட்டுமன்றி பாகிஸ்தான், மலேசியா, சூடான் போன்ற நாடுகளில் முதுமாணிப் பட்டங்களும், கலாநிதி பட்டங்களும் பெற்ற சிறந்த கல்வித் தகைமைகளைக் கொண்ட நாடறிந்த விரிவுரையாளர்களே அங்கு கல்வி கற்பிக்கின்றனர் .

ஜாமிஆ நளீமியா நந்தவனமானது கண்ணுக்கு குளிர்ச்சியாகவும், மனதுக்கு இதமாகவும் அமையும் அளவுக்கு அதன் வளங்கள் பசுமையுற்று செழிப்பாகக் காணப்படுகின்றன. ஜாமிஆ நளீமியாவின் பள்ளிவாசல், கேட்போர் கூடம், மைதானம், நூலகம், நல்லிணக்கத்துக்கான மாதிரிப்பீடம், அடிப்படை கற்கைகள் நெறிகள் பீடம், இஸ்லாமிய கற்கைகள் நெறிகள் பீடம், நளீமியா தொலைக் கல்வி நிறுவனம், அரபுமொழி ஆய்வுகூடம் என்பன நளீமியாவின் பசுமைக்கு அழகு சேர்க்கின்றன.

நளீமியா மாணவர்கள் அரபுமொழி தவிர்ந்த ஆங்கிலம், தமிழ், சிங்களம் போன்ற மொழிகளையும் கற்கின்றனர். இது தவிர மாணவர்களது எழுத்தாற்றல், பேச்சாற்றல், மொழித்திறன், விளையாட்டுத்திறன் என்பவற்றை விருத்தி செய்யும் நோக்குடன் நளீமியாவின் வெளிக்களப்பரிவினால் வருடாந்தம் பல கலாசார விளையாட்டுப் போட்டிகளும் அறிவு, ஆற்றல், மொழி போன்ற திறன்களை விருத்தி செய்யும் நோக்குடன் பல போட்டி நிகழ்ச்சிகளும், மாதாமாதம்

மாணவர் மன்றங்களும், வாராந்தம் எழுத்தாற்றல் விருத்திக்களமும், வருடாந்தம் கல்விச் சுற்றுலாக்களும் நடைபெற்று வருகின்றன. இவையனைத்துக்கும் மேலாக இலங்கை அரச அங்கீகாரம் பெற்ற பல்கலைக்கழகமொன்றில் இளங்கலைமாணி பட்டப்படிப்பை வெளிவாரியாக மேற்





கொள்வதற்கும் இறுதி 4 ஆண்டுகளில் மாணவர்கள் அனுமதிக்கப்படுகிறார்கள். இதனால் நளீமியாவின் பட்டதாரிகளாக வெளியேறுபவர்கள் ஏககாலத்தில் அதன் உள்ளகக் கற்கை நெறியையும், வெளிவாரிப் பட்டப்படிப்பையும் பூர்த்தி செய்யும் வாய்ப்பை பெறுகிறார்கள். ஜாமிஆ நளீமியாவிலிருந்து பட்டம் பெற்று வெளியாகுகின்ற பட்டதாரிகள் நாட்டின் அரச பணிகளிலும் பணியாற்றுகின்றனர் .

ஜாமிஆ நளீமியாவானது நாட்டுப்பற்று மிக்க, தேசத்துக்கும் பணியாற்றக் கூடிய அறிவு, ஒழுக்கம் நிறைந்த புத்திஜீவித்துவ பரம்பரையை உருவாக்க முயற்சிக்கின்றது. எனவே நளீம் ஹாஜியாரின் தூர சிந்தனையோடு உருவாக்கப்பட்ட நளீமியாவானது இனிவரும் காலங்களிலும் மேலோங்கி நிற்க வேண்டும் என்பதே அனைவரின் விருப்பமாகும்.

**எம்.இஹ்ஸான் ஹலீம்...**
முதலாம் வருட மாணவன்,
ஜாமிஆ நளீமியா கலாபீடம்

# தமிழ் மக்கள் விடுதலைப்புலிகள் கட்சியின் 2ஆவது தேசிய மாநாடு நாளை மட்டுநகரில்

**பதினான்கு வருட காலத்துக்கு முன்னர் ஆரம்பிக்கப்பட்ட தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியானது இன்று தனது வளர்ச்சிப்பாதையை அடைந்துள்ளது. 2008.03.08 ஆம் திகதி தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சி தனது கன்னித்தேர்தலை எதிர்கொண்டது. மட்டக்களப்பு மாவட்ட (தமிழ் பிரதேசங்களுக்கு) 08 உள்ளூராட்சி மன்றங்களுக்கும் மாநகர சபைக்குமான தேர்தல் அது. அத்தேர்தலில் அனைத்து இடங்களையும் தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சி கைப்பற்றியது. மட்டக்களப்பு மாநகரசபைக்கு திருமதி சிவகீதா பிரபாகரன் என்ற பெண் மேயராக பெறுப்பேற்றார்.**

அதனைத் தொடர்ந்து 2008 மே10 ஆம் திகதி கிழக்கு மாகாணசபைத் தேர்தல் நடைபெற்றது. அவ்வேளையில் 'பிள்ளையான்' தானே தலைமையேற்று அத்தேர்தலில் போட்டியிட்டார். அத்தேர்தலிலும் வெற்றி ஈட்டியதன் அடிப்படையில் கிழக்கு மாகாணத்தின் முதலாவது முதலமைச்சர் எனும் பெருமையை தமிழ் மக்கள் விடுதலைப் புலிகளின் தலைமை வேட்பாளரான 'பிள்ளையான்' பெற்றுக் கொண்டார். அவருடன் இணைந்து கிழக்கு மாகாணசபையில் தமிழ் மக்கள் விடுதலைப் புலிகளுக்கு ஏழு ஆசனங்கள் கிடைத்தன.

அதன் பயனாக அவரது ஆட்சிக்காலத்தில் கிழக்கு மாகாணத்தில் பல அபிவிருத்திப் பணிகள் நடைபெற்றன. மட்டக்களப்பு நகரை அழகுபடுத்தும் பல்வேறு திட்டங்கள் செய்யப்பட்டன. மட்டக்களப்பு நகரின் மத்தியில் இருந்த 30 வருட ப ழைமை வாய்ந்த மிகச்சிறிய பஸ் நிலையத்துக்கு பதிலாக பிரமாண்டமான புதிய பஸ்நிலையம் அமைக்கப் பட்டது.ஏழை ம க்கள் குறைந்த செலவில் தமது வைபவங்களை நடத்த கலாசார மண்டபங்களை அமைத்து அவை பிரதேச சபைகளுக்கு பாரம் கொடுக்கப்பட்டன. அவற்றுக்கு முன்னாள் போராளிகளின் பெயர்கள் (நந்தகோபன், றெஜி, குகனேசன்) பொறிக்கப்பட்டன.

மிகப் பெரிய, சிறிய நூலகங்கள் புதிதாக உருவாக்கப்பட்டு வாசகர்களுக்கு கொடுக்கப்பட்டன. படுவான்கரை போன்ற பின்தங்கிய பிரதேசங்களை மேம்படுத்த புதிய (வவுணதீவு, திருக்கோவில்) கல்வி வலயங்கள் உருவாக்கப்பட்டன. 43 குக்கிராமங்களை உள்ளடக்கிய பிற்படுத்தப்பட்ட வெல்லாவெளி பிரதேசத்தின் வளர்ச்சிக்காக அந்த பிரதேச சபையை இடம்மாற்றி புதிய கட்டடம் அமைத்து செயலூக்கம் மிக்கதாக மாற்றப்பட்டது. மாகாணமெங்கும் நூற்றுக்கும் மேற்பட்ட பாடசாலைகள் திருத்தப்பட்டு, அபிவிருத்தி செய்யப்பட்டு தரமுயர்த்தப்பட்டன. முடிந்தவரை பின்தங்கிய பாடசாலைகளின் கணித, விஞ்ஞான, ஆங்கில ஆசிரியர் பற்றாக்குறைகளை நிவர்த்தி செய்ய பாரபட்சமற்ற இடமாற்றம் செய்யப்பட்டது.

பல்வேறு கிராமிய வீதிகளும், மின்னிணைப்புகளும், குடிநீர்விநியோகத் திட்டங்களும், புனர்நிர்மாணப் பணிகளும் நிறைவேற்றப்பட்டன.இவ்வாறாக தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியின் அரசியல் பணிகள் மட்டக்களப்பு மாவட்டத்திலும் அம்பாறை, திருகோணமலை மாவட்டங்களிலும் குறிப்பிடத்தக்க அளவு நடைபெற்றன.



## 14 வருட கால வளர்ச்சிப் பாதையில் TMVP

தமிழ் மக்கள் விடுதலைப் புலிகளின் வரலாற்றில் 2009 ஆம் ஆண்டு குறிப்பிடத்தக்க ஆண்டாகும். இவ்வாண்டில்தான் யூலை மாதம் 03 ஆம் திகதி தம்வசம் வைத்திருந்த ஆயுதங்களை இலங்கை அரசிடம் இவர்கள் ஒப்படைத்திருந்தனர்.

2010 ஆம் ஆண்டு ,ஏப்ரல் 8ஆந் திகதி இடம் பெற்ற 14ஆவது பாராளுமன்றத்திற்கான தேர்தலில் தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சி தனித்துப் போட்டியிட்டதன் காரணமாக ஆசனங்கள் எதையும் பெற்றுக் கொள்ளும் வாய்ப்பை நழுவவிட்டது. இத்தேர்தலில் 16,886 வாக்குகளைப் பெற்ற போதிலும், மிகக் குறைந்த வாக்கு வித்தியாசத்தில் தோல்வியைத் தழுவ நேர்ந்தது.

அதேபால் 2012 ஆம் ஆண்டு இடம்பெற்ற கிழக்கு மாகாணசபைத் தேர்தலில் இக்கட்சியானது பாரிய வீழ்ச்சியை சந்தித்தது. கட்சியின் தலைவர் பிள்ளையான் என்று அழைக்கப்படும் சிவனேசதுரை சந்திரகாந்தன் மட்டுமே ஒரு ஆசனத்தை வென்றார்.

அவர் 2015ஆம் ஆண்டுபயங்கரவாத தடுப்புச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டார். இக்காலகட்டமானது தமிழ் மக்கள் விடுதலைப் புலிகளின் வரலாற்றில் இருண்ட காலமாக அமைந்தது. எனினும் கட்சியின் தலைவர் தடுப்புக் காவலில் இருந்தபோதும் தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியியானது மீள்எழுச்சி பெறத் தொடங்கியது. 2018ஆம் இடம்பெற்ற உள்ளூராட்சிமன்றத் தேர்தல் ஊடாக மட்டக்களப்பு மாவட்டத்தில் 44062 வாக்குகளைப் பெற்று 37ஆசனங்களை கைப்பற்றிமை பெரும் பரபரப்பாகப் பேசப்பட்டது. இத்தேர்தல் ஊடாக கோறளைப்பற்று வடக்கு (வாகரை) மற்றும் கோறளைப்பற்று (வாழைச்சேனை) போன்ற பிரதேச சபைகளின் ஆட்சியை அக்கட்சி கைப்பற்றியது.

அதன் தொடர்ச்சியாக 2020ஆம் ஆண்டு இடம் பெற்ற பாராளுமன்றத் தேர்தலில் தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சி தமது சொந்த சின்னமான படகு சின்னத்தில் போட்டியிட்டது. இத்தேர்தலில் வெற்றியீட்டியதன் ஊடாக ஒரு மாகாண கட்சியாக இருந்த தமிழ் மக்கள் விடுதலை புலிகள் கட்சி தேசிய அரசியலில் பங்கெடுக்கும் வாய்ப்பினை பெற்றுக் கொண்டது. குறித்த தேர்தல் இடம்பெற்ற போது சிறையில் இருக்க வேண்டிய சூழலிலும் கட்சியின் தலைவர் சிவனேசதுரை சந்திரகாந்தன் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் போட்டியிட்டு வென்ற 25 தமிழ் பேசும் பாராளுமன்ற உறுப்பினர்களையும் விட அதிகூடிய விருப்பு வாக்குகளை பெற்று (54,198) சாதனையை நிலைநாட்டினார். கட்சியின் சார்பில் 67,692 வாக்குகள் பெறப்பட்டன.

சுமார் 14 வருடகாலமாக அரசியல் களத்தில் செயற்பட்டு வரும் தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியானது தனது 2ஆவது தேசிய மாநாட்டை நாளை 04ம் திகதி மட்டக்களப்பில் நடத்துகின்றது.

முதலாவது தேசிய தேசிய மாநாடு 2012 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 18 ஆம் திகதி மட்டக்களப்பு கல்லடி சிவானந்தா விளையாட்டு மைதானத்தில் நடைபெற்றமை குறிப்பிடத்தக்கது.

**எம்.எஸ்.எம்.நூர்தீன்...**
*(புதிய காத்தான்குடி தினகரன் நிருபர்)*

# அமெரிக்க–சோவியத் ஒன்றிய பனிப்போரை முடிவுக்குக் கொண்டு வந்தவர் கொர்பச்சேவ்

**முன்னாள் சோவியத் ஒன்றியத்தின் தலைவரான மிகையில் கொர்பச்சேவ் மேற்குலக நாடுகளுடனான பதற்றத்தைக் குறைத்தவர் என்றும், அமெரிக்காவுக்கும் சோவியத் ஒன்றியத்துக்கும் இடையில் இருந்த பனிப்போரை1980களின் இறுதியில் முடிவுக்கு கொண்டு வந்தவரும் என்றும் மேற்குலக நாடுகளால் பாராட்டப்பட்டவர். அமைதிக்கான நோபல் பரிசு பெற்ற மிகையில் கொர்பச்சேவ் ஓகஸ்ட் 30, 2022 இல் காலமானார்.**

கொர்பச்சேவை சோவியத்தின் சீர்திருத்தவாதி. புதிய அணுகுமுறையால் உலக அரசியல் அரங்கில் 1985 இல் நுழைந்த போது ஆரம்பத்தில் ரஷ்ய மக்கள் பெரும் நம்பிக்கை கொண்டு கொர்பச்சேவை வரவேற்றனர். அவரின் சீர்திருத்தங்கள் மீது சோவியத் மக்கள் நம்பிக்கை கொண்டனர். கொர்பச்சேவ் பதவி ஏற்றவுடன் மேற்கத்திய உலகு பொதுவாக பாராட்டியது. ஐரோப்பிய நாடுகளும் ஆதரவளித்தன.

இதனாலேயே 1990 இல் அமைதிக்கான நோபல் பரிசு கொர்பச்சேவுக்கு வழங்கப்பட்டது. எனினும், மேற்கத்திய நாடுகளுக்கு ஆதரவாக நடந்து கொண்டதாக ரஷ்யாவில் அவர் மீது கண்டனக் கணைகளும் எழுந்தன.

அமெரிக்காவின் அப்போதைய அதிபர் ரொனால்ட் ரீகனுடன் நான்கு உச்சி மாநாடுகளில் கலந்து கொண்டார் கொர்பச்சேவ். 1987 இல் நடந்த சந்திப்பின் போது வரலாற்றுச் சிறப்பு மிக்க ஒப்பந்தம் ஒன்றில் இருவரும் கையெழுத்திட்டனர். அதன்படி, ஐரோப்பாவில் வைக்கப்பட்டிருந்த இரு நாடுகளின் ஏவுகணைகள் அகற்றப்பட்டன. இரண்டாம் உலகப் போருக்குப் பின் அமெரிக்காவுக்கும் சோவியத் ஒன்றியத்துக்கும் இடையில் இருந்த பனிப்போர் 1980 களின் இறுதியில் முடிவுற்றது. அத்துடன் சோவியத் யூனியன் சிதறுண்டு பல நாடுகளாகப் பிரிந்ததும் அந்தக் காலகட்டத்தில்தான்.



## உலக அமைதிக்காக நோபல் பரிசு பெற்ற முன்னாள் தலைவர்

சோவியத் வீழ்ச்சி அடையும் காலகட்டத்திலேயே ஆப்கானிஸ்தானில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த சோவியத் துருப்புகள் 1988 இல் திரும்பப் பெறப்பட்டன. அதேபோல அங்கோலாவில் தனது படைகளை நிறுத்தியிருந்த கியூபாவும், கம்போடியாவில் தனது படைகளை நிறுத்தியிருந்த வியட்நாமும் தங்கள் படைகளைத் திரும்பப் பெற வேண்டும் என்றும் கொர்பச்சேவ் வலியுறுத்தினார்.

கொர்பச்சேவால் அறிமுகமாகிய பெரஸ்ட்ரோயிகா, கிளாஸ்நாத் ஆகிய இரண்டு சீர்திருத்தங்களும் சோவியத் யூனியனின் பொருளாதார, அரசியல் வளர்சசிக்கு உந்துசக்தியாகும் என முதலில் எதிர்பார்க்கப்பட்டது. ஆயினும் பிரச்சினைகளைத் தீர்த்ததா என்றால் இல்லை என்றே கூறலாம். இந்த சீர்திருத்தங்கள் பலனை உடனடியாகத் தரவில்லை. சோவியத் யூனியனின் ஒரு கட்சி ஆட்சியிலிருந்த அதிகார வர்க்கப் பொருளாதாரத்தைச் சந்தை பொருளாதாரம் திடீரென ஒரிரவில் மாற்றுவது இலகுவானதல்ல.

சந்தைப் பொருளாதாரம் முதிர்ச்சியடைய அதிக காலம் வேண்டும் என்பதால் அது வெற்றியடைவில்லை. அதனாலேயே கொர்பச்சேவால் அறிமுகமாகிய பெரஸ்ட்ரோயிகா, கிளாஸ்நாத் இரண்டு சீர்திருத்தங்களின் பலன்கள் தாமதமாகத்தான் வரும் என்பதால் அப்போது இருந்த பிரச்சினைகள் குறையவில்லை என்பதும் உண்மையே.

### சோவியத் ஒன்றிய வீழ்ச்சி:

சோவியத் நாட்டில் சிறந்த பொருளாதாரம் சாத்தியமாவது உலகின் பிற பகுதிகளுடன், குறிப்பாக அமெரிக்காவுடன் சிறந்த உறவுகளைக் கொண்டிருப்பதைச் சார்ந்துள்ளது என்று கொர்பச்சேவ் நம்பினார். அமெரிக்க அதிபர் ரொனால்ட் ரீகன், சோவியத் ஒன்றியத்தை அழிப்பதில் மும்முரமாக இருந்தார். மேலும் உலகெங்கிலும் இருந்த அமெரிக்க இராணுவக் கட்டமைப்பை விரிவுபடுத்தினார். இருந்த போதிலும் கோர்பச்சேவ் ஆயுதப் போட்டியிலிருந்து வெளியேறுவதாக உறுதியளித்தார்.

கிழக்கு ஐரோப்பாவின் மாற்றங்கள் சோவியத் யூனியனையும் பாதிக்கத் தொடங்கியது. கோர்பச்சேவின் சீர்திருத்த அணுகுமுறையால் சோவியத் யூனியனில் இருந்த குடியரசுகளில் சுதந்திரத்திற்கான இயக்கம் தொடங்கியது.

1991 இல் பால்டிக் நாடுகள் (எஸ்டோனியா, லிதுவேனியா மற்றும் லாட்வியா) ஒவ்வொன்றாக, மாஸ்கோவிலிருந்து பிரிந்து தங்கள் சுதந்திரத்தை அறிவித்தன. மாஸ்கோவில் ஓகஸ்ட் 18, 1991 அன்று, சோவியத் இராணுவத்தாலும் அரசாங்கத்திலும் உள்ள கம்யூனிஸ்ட் கட்சியின் சம்பந்தப்பட்ட உறுப்பினர்கள் கொர்பச்சேவை வீட்டுக் காவலில் வைத்தனர். இதன்பின் கொர்பச்சேவ் தலைமைப் பதவியை இராஜினாமா செய்வது தவிர்க்க முடியாமல் போனது. 1991 கிறிஸ்மஸ் தினத்தன்று, அவர் தனது பதவியை விட்டு விலகினார்.

அப்போது அவர் ஆற்றிய உரையில், "நாங்கள் இப்போது ஒரு புதிய உலகில் வாழ்கிறோம். பனிப் போர் மற்றும் ஆயுதப் போட்டிக்கு முற்றுப்புள்ளி வைக்கப்பட்டுள்ளது. அத்துடன் நமது பொருளாதாரம், பொது அணுகுமுறைகள் மற்றும் ஒழுக்க நெறிகளை முடக்கிய நாட்டின் பைத்தியக்காரத்தனமான இராணுவமயமாக்கலுக்கு முற்றுப்புள்ளி வைக்கப்பட்டுள்ளது. இதன் பின்னரே வலிமைமிக்க சோவியத் யூனியன் சிதைந்து வீழ்ந்தது" எனக் குறிப்பிட்டார்.

மைக்கேல் கொர்பச்சேவ் சோவியத் உடைவின் பின் “சர்வதேச உறவுகளில் நாம் ஒரு சகாப்தத்தை விட்டு, மற்றொன்றுக்குள் பிரவேசிக்கிறோம், அது உறுதியான, நீடித்த சமாதானத்தின் காலப்பகுதியென நான் எண்ணுகிறேன்” எனக் கூறினார்.

### அணு ஆயுதக் கட்டுப்பாடு:

செர்னேபில்அணு உலை விபத்து ஏற்பட்டு பத்தாண்டுகளுக்குப் பிறகு, ஏப்ரல் 1996 இல், மிக்கேல் கொர்பச்சேவ் கூறுகையில் “ஒவ்வொரு வருடமும் இலட்சக்கணக்கான பிள்ளைகள் இறக்கிறார்கள் என்ற காரியத்தை மனிதகுலம் இனி சகித்துக் கொள்ள முடியாது. அப்படிப்பட்ட சூழ்நிலைக்கு நாங்கள் தயாராய் இருக்கவே இல்லை. இந்த அவல நிகழ்ச்சி, மனிதகுலம் கண்டுபிடித்திருக்கும் இராட்சத சக்திகளை இதுவரை கட்டுப்படுத்த முடிவதில்லை என்ற உண்மையின் கொடூர நினைப்பூட்டுதலாய் இருக்கிறது" எனக் குறிப்பிட்டார். மே 1990 இல் வாஷிங்டன் டி. சியில் நடைபெற்ற வல்லரசு மாநாடு ஒன்றின் போது, சோவியத் ஜனாதிபதி மிக்கேல் கொர்பச்சேவ் ஐரோப்பிய நாடுகளின் இரண்டு கூட்டணிகளும் சமாதான ஒப்பந்தம் ஒன்றில் கையெழுத்திட வேண்டும் என்று யோசனையை தெரிவித்தார்.

நடுத்தர குறுகிய தூரம் செல்லும் தரை சார்ந்த ஏவுகணைகளை ஒழிப்பது சம்பந்தமான ஓர் ஒப்பந்தம் சோவியத் யூனியன் அதிபர் மிகேயல் கொர்பச்சேவும் அமெரிக்க ரோனால்ட் ரீகனும் மொஸ்கோவில் கூடியபோது நிறைவேறியது.

2000 வருடத்துக்குள் பூமியிலிருந்து அணு ஆயுதங்களை ஒழி த்துவிட, படிப்படியாக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்று மைக்கேல் கொர்பச்சேவ் சொன்னார்.இதற்கான வழி அணு ஆயுதங்களற்ற, வன்முறையில்லா ஓர் உலகமாக முன்னேறிச் செல்வதில் இருக்கிறது என சோவியத் தலைவர் மிக்கேல் கார்பஷாவ் எழுதிய பெரஸ்ட்ரோய்க்கா (Perestroika) நூலில் குறிப்பிட்டுள்ளார்.

ஆயினும் க்ளாஸ்நாஸ்ட் மற்றும் பெரஸ்ட்ராய்க்கா கோட்பாடுகளை செயலுக்குக் கொண்டு வருவதில் கொர்பச்சேவ்வுக்கு இருந்த ஆர்வமே, சோவியத் உடைவுக்கும், அவர் சோசலிச கம்யூனிஸத்தை உலகில் அழிக்க அமெரிக்காவுடன் சேர்ந்து நோக்கம் கொண்டிருந்தார் என்றும் ரஷ்யாவில் இன்னமும் குற்றஞ்சாட்டப்படுகிறது.

ஆயினும் உலக அமைதிக்காக அணு ஆயுதத்தைக் குறைக்க முன்னோடியாக இருந்து, அமைதிக்கான நோபல் பரிசு பெற்ற மிகையில் கொர்பச்சேவ் வரலாற்றில் என்றும் நிலைத்திருப்பார்.



**ஐங்கரன் விக்கினேஸ்வரா...**

## ஜனாதிபதியும் பிரதமரும்... 03ஆம் பக்கத் தொடர்

தெரிவிக்கையில்: நாட்டின் தற்போதைய பொருளாதார நிலைமை மற்றும் அதனை மேம்படுத்தும் திட்டங்கள் தொடர்பில் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு விளக்கமளிக்கும் செயலமர்வொன்றை மத்திய வங்கி ஆளுநர் கடந்த புதன் கிழமை பாராளுமன்ற கட்டிடத் தொகுதியில் ஏற்பாடு செய்திருந்தார்.

இது சிறந்த நடவடிக்கை. ஆனால் அந்த செயலமர்வில் ஆளும் தரப்பின் சில உறுப்பினர்கள் நடந்துகொண்ட விதம், ஆளுநரை குற்றம் சாட்டும் வகையில் தெரிவித்த கருத்துக்கள் கவலைக்குரியவை.

மத்திய வங்கி ஆளுநர் இந்த பதவியை தேடிவரவில்லை. அவுஸ்திரேலியாவிலிருந்த அவரை அப்போதைய ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவே அழைத்து இந்த பதவியை வழங்கினார். அந்த தீர்மானம் மிகவும் சரியானது.

எனினும் அன்றைய செயலமர்வின்போது அரச தரப்பின் ஒருசில எம்.பி.க்களைப் பயன்படுத்தி ஆளுநர் இரட்டைப் பிரஜா உரிமை உடையவரென பல்வேறு குற்றச்சாட்டுக்கள் அவருக்கு எதிராக முன்வைக்கப்பட்டன.இது மிகவும் தவறு.

இவ்வாறான குற்றச்சாட்டுக்கள் மூலம் மத்திய வங்கி ஆளுநரை அந்த பதவியிலிருந்து நீக்கும் சதித்திட்டத்தை அரசு முன்னெடுக்கின்றது. அதனால் மத்திய வங்கி ஆளுநர் விடயத்தில் ஜனாதிபதி மற்றும் பிரதமர் சிறந்த இணக்கப்பாட்டுக்கு வரவேண்டுமென்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

## தவறான குற்றச்சாட்டுகளை... 03ஆம் பக்கத் தொடர்

ஆளுநர் கலாநிதி நந்நலால் வீரசிங்க நாட்டை வங்குரோத்து நிலைக்கு தள்ளினார் என்றும் நாட்டின் நிதி நிலைமை தொடர்பில் பாராளுமன்றத்துக்கு தெரிவிக்கவில்லையென்றும் குறிப்பிடுவது அடிப்படையற்றதாகும்.

நாட்டின் நிதி நிலைமை தொடர்பில் 2020ஆம் ஆண்டு காலப்பகுதியில் நிதியமைச்சரிடம் கேள்வி கேட்ட போது நிதியமைச்சர் சார்பில் அப்போதைய நிதி இராஜாங்க அமைச்சராக பதவி வகித்த அஜித் நிவார்ட் கப்ரால் பதிலளித்ததார்.

நாட்டில் 2,100 மில்லியன் டொலர் உள்ளது,1,800 டொலர் மில்லியன் உள்ளது என குறிப்பிட்டு நாட்டையும் பாராளுமன்றத்தையும் தவறாக வழிநடத்தினார்.

ஆனால் மத்திய வங்கியின் தற்போதைய ஆளுநர் நந்தலால் வீரசிங்க அப்போதைய காலக்கட்டத்தில் பயன்படுத்தக் கூடிய வெளிநாட்டு கையிருப்பு 20 மில்லியன் டொலர் முதல் 30 மில்லியன் வரை மட்டுப்படுத்தப்பட்ட அளவில் காணப்பட்டதாகவும் குறிப்பிட்டார்.

நாட்டின் நிதி நிலைமை குறித்து நாம் தெரிவித்த எதனையும் அரசாங்கம் கவனத்திற் கொள்ளவில்லை.

முன்னாள் நிதியமைச்சர் அலி சப்ரி,மத்திய வங்கியின் ஆளுநர் கலாநிதி நந்தலால் வீரசிங்க ஆகிய இருவரும் நாட்டை வங்குரோத்து நிலையடைய செய்தார்கள் என்ற தவறான நிலைப்பாட்டை தோற்றுவிக்க ஆளும் தரப்பில் ஒருசிலர் முயற்சிக்கிறார்கள் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

## தேயிலை தோட்டங்களுக்கு... 03ஆம் பக்கத் தொடர்

தேயிலை தோட்ட அபிவிருத்தி அதிகார சபையின் தலைவர் துஷார பிரியதர்சன தெரிவித்துள்ளார். உரம் பெறுவதில் சிக்கல் இருப்பின் 1974 என்ற அவசர தொலைபேசி இலக்கத்துக்கு தொடர்பு கொள்ளுமாறு தலைவர் தெரிவித்தார்.

## தகவல் அறியும் உரிமைக்கு ...

தவிர்ப்பதே இதன் முக்கிய நோக்கமாகும். ஜனாதிபதியின் செயலாளர் சமன் ஏக்கநாயக்க மற்றும் அமைச்சுக்களின் செயலாளர்களுக்கிடையில் நேற்று (02) ஜனாதிபதி அலுவலகத்தில் நடைபெற்ற சந்திப்பில் இந்த தகவல்கள் தெரிவிக்கப்பட்டன. பொதுமக்களின் வசதிக்காக செயற்படுவது அனைத்து அமைச்சுக்களினதும் அரச அதிகாரிகளினதும் தலையாய பொறுப்பாகும். எனவே எந்தவொரு நபருக்கும் இடையூறு ஏற்படாத வகையில், செயல் திறன்மிக்க சேவையை வழங்க வேண்டும். இதன் மூலம் அமைச்சுக்கள் மற்றும் அரச நிறுவனங்கள் முறையான பதிலளிக்கும் வேலைத்திட்டத்தை உருவாக்குவது கட்டாயமென ஜனாதிபதியின் செயலாளர் சமன் ஏக்கநாயக்க அனைத்து அமைச்சுக்களின் செயலாளர்களுக்கும் அறிவித்துள்ளார்.

ஜனாதிபதி செயலகத்திடமிருந்து தகவல்களைக் கோரும் போதும் இந்த செயல்முறையைப் பின்பற்றுமாறு மக்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. 2019 ஆம் ஆண்டு முதல் ஜனாதிபதியின் சிரேஷ்ட உதவிச் செயலாளர் (சட்டம்) சிசிர ஹேனாதிர, தகவல் அதிகாரியாக செயற்பட்டு வருகின்றார்.

அத்துடன் ஜனாதிபதியின் மேலதிக செயலாளர் கலாநிதி சுலக்ஷன ஜயவர்த்தன பதில் அதிகாரியாக செயற்படுகின்றார். பின்வரும் இலக்கங்கள் ஊடாக தகவல் அதிகாரிகளை தொடர்பு கொள்ளலாம்.

சிசிர ஹேனாதீர ஜனாதிபதியின் சிரேஷ்ட உதவிச் செயலாளர் (சட்டம்) கையடக்க தொலைபேசி இலக்கம் 0718132590

அலுவலக இலக்கம் 0112354329 / 0112354354

கலாநிதி சுலக்ஷன ஜயவர்த்தன ஜனாதிபதியின் மேலதிக செயலாளர் கையடக்க தொலைபேசி இலக்கம் 0719994133 / 0711992354.

அலுவலக இலக்கம் – 0112354329 / 0112354354

மின்னஞ்சல் முகவரி addlsec.fsd@presidentsoffice.lk

## சவால்களை பொறுப்பேற்று...

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க சமர்ப்பித்துள்ளதாகவும் அமைச்சர் அலி சப்ரி தெரிவித்தார்.

நாட்டிற்கு 1,600 பில்லியன் வருமானம் கிடைக்கும்போது 3,800 பில்லியன் செலவாக அமைந்துள்ளபோதும் சவால்களை எதிர்கொள்ளும் துணிச்சலுடன் அவர் இந்த வரவு செலவுத் திட்டத்தை சமர்ப்பித்துள்ளதாகவும் அமைச்சர் தெரிவித்தார். எதிர்க்கட்சியினர் போன்று பொறுப்புக்களை தட்டிக் கழித்து ஆளுக்காள் குறை கூறுவது எந்த பலனையும் தராது. உண்மை நிலையை உணர்ந்து சகலரும் ஒன்றிணைந்து பொறுப்புக்களை பாரமெடுக்க வேண்டிய காலம் இது என்றும் அமைச்சர் தெரிவித்தார்.

நாட்டின் இத்தகைய சூழ்நிலையில் போராட்ட அரசியலை விடுத்து அவருக்கு ஒத்துழைப்பு வழங்க வேண்டியது அவசியம். வெறுமனே பேசி அறிக்கைகளை விடுவதை விட பொறுப்புக்களை பாரமெடுத்து செய்வதே கடினமான விடயம். விமர்சனம் செய்பவர்கள் அதனை புரிந்து கொள்ள வேண்டும்.

கடந்த மே நான்காம் திகதி நிதி அமைச்சர் என்ற வகையில் நான் நாட்டின் நெருக்கடி நிலையை பாராளுமன்றத்தில் அறிவித்தேன். அதன் பின்பே நாம் இந்தளவு முன் செல்ல முடிந்துள்ளது. தற்போது நாட்டில் எரிவாயு உள்ளது. நிலைமைகளை சரி செய்ய முடிந்துள்ளது. அதன் மூலம் எமது ரூபாவின் பெறுமதியை கட்டுப்படுத்த முடிந்துள்ளது. சர்வதேச நாணய நிதியம், உலக வங்கி உள்ளிட்ட நிறுவனங்களின் உதவி எமக்கு கிடைத்ததும் மேலும் அதனை கட்டுப்படுத்த முடியும்.

2021 ஆம் ஆண்டு எமது வருமானம் 1,600 பில்லியன் ஆகவும் செலவு 3,800 பில்லியனாகவும் இருந்துள்ளது. வரிவருமானம் குறைந்து, உல்லாசப் பிரயாணத்துறை வீழ்ச்சி கண்டு, ஏற்றுமதி வருமானம் குறைந்து, அந்நிய செலாவணி பெருமளவு குறைந்ததாலேயே அந்த நிலை ஏற்பட்டது. அரசாங்க ஊழியர்களுக்கான சம்பளம், ஓய்வூதியம்,சமுர்த்தி உதவி, உர மானியம் வழங்குவதற்கே எமது வருமானம் போதாமல் உள்ளது.

வறுமைக்கு எதிராக போராட வேண்டியுள்ளது. வறுமை நிலையை தொடர்ந்து பாதுகாக்க முடியாது. மீனுக்கு பதிலாக தூண்டில் வழங்கி வறுமை நிலையில் உள்ளவர்களை முன்னேற்ற வேண்டும்.

## ஆசிய, பசிபிக்... 03ஆம் பக்கத் தொடர்

குறித்து அவர் பிராந்தியப் பணிப்பாளருக்கு விளக்கினார். நாட்டில் நடைபெற்று வரும் உலக உணவுத் திட்ட முன்முயற்சிகளின் முன்னேற்றம், குறிப்பாக நாட்டில் சமூகப் பாதுகாப்பு வலையமைப்பு தொடர்பான திட்டங்கள் குறித்து வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சருக்கு பிராந்தியப் பணிப்பாளர் விளக்கினார்.

இந்த சவாலான நேரத்தில் உலக உணவுத் திட்டம் இலங்கை அரசாங்கத்துக்கு தொடர்ச்சியாக ஆதரவளித்து, நெருக்கமாக இணைந்து ஒத்துழைக்கும்

## இந்தியா உணவுக்... 03ஆம் பக்கத் தொடர்

குறைந்த வட்டியில் 800 மில்லியன் டொலர் உணவுக்காகவும் மருந்து மற்றும் அத்தியாவசிய தேவைகளுக்காகவும் வழங்கியிருக்கின்றது.

கடனடிப்படையில் 700 மில்லியன் டொலரை எரிபொருளுக்காக வழங்கியியுள்ளது. இரசாயன உரத்துக்கு 55 மில்லியன் டொலர் வழங்க உதவியுள்ளது. ஆனால் இலங்கைக்கான கடனைக்கூட மறுசீரமைக்க முடியாதெனக் கூறும் சீனா இலங்கைக்கு உளவுக் கப்பலையே அனுப்பியது என்றார்.

## அடக்குமுறைகளைப்... 03ஆம் பக்கத் தொடர்

விடயங்களை உள்ளடக்கி இடைக்கால வரவு செலவுத் திட்டத்தை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க சமர்ப்பித்துள்ளார்.

நாட்டின் இன்றைய நெருக்கடி நிலை இன்று நேற்று ஏற்பட்டதல்ல.

இது தொடர் பொருளாதார நெருக்கடியாகும். அந்த வகையில் எதிர்க்கட்சியில் சிலர் மொட்டுக் கட்சியை குறை கூறுவது எந்த விதத்திலும் ஏற்க முடியாது.

உக்ரேன் யுத்தத்தோடு உலகளாவிய பொருளாதார நிலையில் ஏற்படும் சவாலுக்கு இணங்க இதைவிட மோசமான பொருளாதார நிலையை நாம் எதிர்காலத்தில் எதிர்கொள்ள நேரும்.

## 43 வகை மருந்துகளின்...

இதன்படி. மருந்துகள் மற்றும் மருத்துவ உபகரணங்களின் அதிகபட்ச சில்லறை விலையில் திருத்தம் செய்யப்பட்டுள்ளது.

## உள்ளூராட்சி சபை...

சபைத் தேர்தல் 2018 இல் நடத்தப்பட்டு 2022 இல் முடிவடையத் திட்டமிடப்பட்டது, ஆனால் அமைச்சரின் அதிகாரத்தின் கீழ் அவை 2023 வரை நீட்டிக்கப்பட்டது.

தேர்தல்கள் ஆணைக்குழுவின் அதிகாரத்தின் கீழ் உள்ளூராட்சி மன்றங்களுக்கு செப்டம்பர் 20ஆம் திகதிக்கு பின்னர் தேர்தலை நடத்த முடியுமென சட்டத்தரணி புஞ்சிஹேவா தெரிவித்தார்.

ஒக்டோபர் மாதம் 31ஆம் திகதி வாக்காளர் பட்டியல்கள் சான்றளிக்கப்படவுள்ளதால், உள்ளூராட்சி சபை தேர்தலை பின்னர் நடத்துவது குறித்து தீர்மானிக்கப்படுமென அவர் தெரிவித்துள்ளார்.

## எரிபொருள், எரிவாயு, நெல்...

எரிபொருள் நெருக்கடிக்கு தீர்வு காண முன்னுரிமை வழங்குமாறும் அவர் ஆலோசனை தெரிவித்தார்.

மண்ணெண்ணெய் தொடர்பான பிரச்சினை தொடர்பில் இதன் போது அதிக கவனம் செலுத்தப்பட்டதுடன், இப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கு முன்னுரிமை வழங்குமாறும் கூறினார்.

அரிசி விலை உயர்வு மற்றும் நெற்செய்கையாளர்களுக்கு உத்தரவாத விலை வழங்குவது குறித்தும் இங்கு ஆராயப்பட்டது. நெல் கொள்வனவு செய்வதில் நெல் சந்தைப்படுத்தல் சபை எதிர்நோக்கும் பிரச்சினைகள் குறித்து நெல் சந்தைப்படுத்தல் சபையின்தலைவர்மற்றும்அரசவங்கிகளின் தலைவர்களுடன் கலந்துரையாடப்பட்டது. நெல் கொள்வனவுகளை துரிதப்படுத்துமாறும் நெல் களஞ்சியசாலைகளை மேம்படுத்துமாறும் அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுத்தார். தற்போதைய சமையல் எரிவாயு நெருக்கடி குறித்து இங்கு கலந்துரையாடப்பட்டதுடன், சமையல் எரிவாயு கொள்வனவு, இறக்குமதி மற்றும் விநியோகம் தொடர்பில் நிலவும் பிரச்சினைகளைத் தீர்க்க தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதாகவும் இதன் போது சுட்டிக் காட்டப்பட்டது.

விவசாய அமைச்சர் மஹிந்த அமரவீர, பாராளுமன்ற உறுப்பினர் நிமல் லான்சா, ஜனாதிபதியின் செயலாளர் சமன் ஏக்கநாயக்க, ஜனாதிபதியின் பொருளாதார விவகார சிரேஷ்ட ஆலோசகர் ஆர்.எச்.எஸ். சமரதுங்க, எரிபொருள், சமையல் எரிவாயு மற்றும் நெல் என்பவற்றுடன் தொடர்புள்ள அரச நிறுவன தலைவர்கள் மற்றும் வங்கிகளின் தலைவர்கள் இந்தக் கலந்துரையாடலில் கலந்துகொண்டனர்.

## இலங்கை பிரஜைகள்...

திருவண்ணாமலை மாவட்டத்தில் பெரம குமார் என்ற குணசேகரன் மற்றும் அவருடைய மகன் திலீப் ஆகியோருக்கு சொந்தமான இரண்டு விவசாய நிலங்களும் இதில் அடங்குமென தெரிவிக்கப்பட்டுள்ளது.

முன்னதாக இலங்கையின் முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்கவை இலக்கு வைத்து நடத்தப்பட்ட வெடிகுண்டுத் தாக்குதல் தொடர்பாக குமார் மீது குற்றம் சுமத்தப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இந்தநிலையில் 2020 ஆம் ஆண்டு காஞ்சிபுரம் குற்றப்புலனாய்வு பதிவு செய்த வழக்கு அடிப்படையில் அமுலாக்க பணியகம் பணமோசடி விசாரணையை ஆரம்பித்தது.

குமார், அவரது மகன் மற்றும் பலர், வெளிநாட்டினர் சட்டம், கடவுச்சீட்டு சட்டம் மற்றும் இந்திய தண்டனைச் சட்டம் ஆகியவற்றின் கீழுள்ள குற்றங்களைச் செய்ததாகக் கூறப்படுகிறது. குற்றம் சாட்டப்பட்ட நபர்கள், அடையாள அட்டை மற்றும் சாரதி அனுமதிப்பத்திரம் போன்ற போலி அடையாள அட்டைகளை உருவாக்கி இந்தியாவில் பயன்படுத்தியுள்ளதுடன் இந்தியாவில் சட்டவிரோதமாக தங்கியுள்ளனர்.

விசாரணையில் குமார், சுரேஷ் ராஜ், முகமது ஷெரீப், காமினி என்ற ராஜா மெதுரகெதர ஆகியோர் போதைப்பொருள் கொள்முதல் மற்றும் விற்பனையில் ஈடுபட்டமை தெரியவந்தது.

மேலும் அவர்கள் 2011 ஆம் ஆண்டு குற்றத்துக்காக நீதிமன்றத்தால் தண்டனை விதிக்கப்பட்டது.

சிறைத்தண்டனை முடிந்த பிறகு, அவர்கள் தங்கள் அடையாளத்தை மாற்றி, குற்றங்களில் ஈடுபட்டுள்ளனர்.

அத்துடன் இந்த வழக்கில் இணைக்கப்பட்ட சொத்துக்கள் அனைத்தும் 2011 ஆம் ஆண்டுக்குப் பிறகு வாங்கப்பட்டவை என்று தெரியவந்துள்ளது. ஆவணங்களில் குறிப்பிடப்பட்டுள்ள இச் சொத்துக்களின் மதிப்பை விட சந்தை மதிப்பு அதிகமென அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

## கொழும்பில் 18...

மஹரகம மாநகர சபைக்குட்பட்ட பகுதிகளிலேயே இவ்வாறு நீர் வெட்டு அமுல்படுத்தப்படவுள்ளதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

அத்தோடு, இக் காலப்பகுதியில் பொரலஸ்கமுவ, கொலன்னாவ, கொட்டிகாவத்தை, முல்லேரியா, இரத்மலானை மற்றும் கட்டுபெத்த ஆகிய பகுதிகளிலும் நீர் விநியோகத்தடை அமுல்படுத்தப்படவுள்ளது. அத்தியாவசிய திருத்தப்பணிகள் காரணமாகவே இந்த நீர்வெட்டு அமுல்படுத்தப்படவுள்ளது.

எனவே, நீர் வெட்டு அமுலாகும் காலப்பகுதியில் ஏற்படும் அசௌகரியங்களை தவிர்த்துக்கொள்ள முன்கூட்டியே நீரை சேமித்து வைத்துக் கொள்ளுமாறும் பொது மக்களிடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

## ஆங் சான் சூகிக்கு ...

குறிப்பிடப்பட்டுள்ளது. முன்னாள் தலைவருக்கு ஏற்கனவே 17 வருடங்களுக்கும் அதிகமாக அந்நாட்டு நீதிமன்றத்தினால் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

## பஷில் ராஜபக்ஷவிற்கு...

அனுமதிவழங்குமாறு கோரிக்கை விடுத்தார்.

அதையடுத்து 05 நீதியரசர்கள் கொண்ட குழாம் இந்த அனுமதியை வழங்கியது.

தவறான பொருளாதார கொள்கைளால் நாடு வங்குரோத்து நிலைமைக்கு தள்ளப்பட்டதாக தெரிவித்து தாக்கல் செய்யப்பட்ட அடிப்படை உரிமைகள் மனு, உயர் நீதிமன்றத்தில் நேற்று விசாரணைக்கு வந்தபோதே, பசில் ராஜபக்ஷவுக்கு வெளிநாடு செல்வதற்கு அனுமதி கோரப்பட்டது.

முன்னாள் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ, மத்திய வங்கி முன்னாள் ஆளுநர்கள் அஜித் நிவாட் கப்ரால், டபிள்யூ.டி. லக்ஷ்மன், முன்னாள் அமைச்சர்கள் பசில் ராஜபக்ஷ, அலி சப்ரி, முன்னாள் நிதியமைச்சர் எஸ்.ஆர்.ஆட்டிகல உட்பட 45 பேர் மேற்படி அடிப்படை உரிமை மனுவில் பிரதிவாதிகளாக குறிப்பிடப்பட்டுள்ளனர்.

## பிரபல பாடகர் பம்பா...

49ஆவது வயதில் நேற்று (02) மாரடைப்பால் காலமானதாக இந்திய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. இவர், எந்திரன் திரைப்படத்தில் புள்ளினங்காள், சர்கார் படத்தில் சிம்ட்டங்காரன், பிகில் படத்தில் காலமே காலமே, பொன்னியின் செல்வன் படத்தில் பொன்னி நதி போன்ற பல ஹிட் பாடல்களை பாடியவர் என்பது குறிப்பிடத்தக்கது.

## ஒரே பிரசவத்தில் நான்கு...

இவ்வாறு பிறந்த குழந்தைகளில் ஒரு ஆண் குழந்தையொன்றும், மூன்று பெண் குழந்தைகளும் அடங்குவதாக வைத்தியசாலை பணிப்பாளர் குறிப்பிட்டார்.

தற்போது நான்கு சிசுக்களும் புத்தளம் ஆதார வைத்தியசாலையின் சிறுவர்கள் தொடர்பான விசேட வைத்திய நிபுணரின் கண்காணிப்பில் இருப்பதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

## இலங்கை பொலிஸ் திணைக்களத்தின் ...

இன்றுகாலை பொலிஸ் மாஅதிபரின் தலைமையில் சர்வமத வழிபாட்டு நிகழ்வுகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன. இன்று காலை 08.30 க்கு கொழும்பு பம்பலப்பிட்டி கதிரேசன் கோவிலில் இந்து மத வழிபாட்டு நிகழ்வுகளும் காலை 09.30 க்கு கொழும்பு 02 தெவட்டகஹ பள்ளிவாசலில் இஸ்லாமிய மத பிரார்த்தனைகளும் காலை 07.45க்கு பம்பலப்பிட்டி புனித மரியாள் தேவாலயத்திலும் காலை ஹுணுப்பிட்டி கங்காராமை விஹாரையில் பௌத்த மத வழிபாட்டு நிகழ்வும் நடைபெற ஏற்பாடாகியுள்ளது.

இன்று நடைபெறவுள்ள பிரதான நிகழ்வில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவும் கலந்துகொள்ளவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

## லிட்ரோ சமையல் Gas ...

விலை குறைப்பு எதிர்பார்க்கப்படுவ தாகவும், அதற்கு தேவையான கணக்கீடுகள் தற்போது நடைபெற்று வருவதாகவும் அவர் கூறினார்.

ஐம்பது இலட்சத்துக்கும் அதிகமான லிட்ரோ சமையல் எரிவாயு சிலிண்டர்கள் நாடு முழுவதும் விநியோகிக்கப்பட்டுள்ளதுடன், அவற்றில் 96 வீதமானவை லிட்ரோ சமையல் எரிவாயு பிரதிநிதிகளிடம் உள்ளன. அந்த சிலிண்டர்களை யார் வேண்டுமானாலும் வாங்கலாம். எதிர்காலத்தில் எங்கள் சமையல் எரிவாயுவுக்கான வீட்டு விநியோக (App) செயலியை நடைமுறைப்படுத்த நாங்கள் நம்புகிறோம், மேலும் இது தேவைப்படுபவர்களுக்கு பணம் செலுத்தி சமையல் எரிவாயு சிலிண்டர்களை தங்கள் வீடுகளுக்கு கொண்டு வருவதை எளிதாக்குமென பீரிஸ் தெரிவித்தார்.

மேலும், நாட்டிலுள்ள எமது உறவினர்களுக்கு டொலர்கள் செலுத்தி சமையல் எரிவாயு சிலிண்டர்களை கொள்வனவு செய்யும் முறையை ஆரம்பிக்கவுள்ளதாகவும், லிட்ரோ சமையல் எரிவாயு நிறுவனத்தை பாதுகாக்கும் நோக்கில் இது நடைபெறுவதாகவும், லிட்ரோ சமையல் எரிவாயுவை வாடிக்கையாளர்கள் பற்றாக்குறை இல்லாமல் வழங்குவதற்கு எங்களால் முடிந்த அனைத்தையும் செய்வோமெனவும் முதித பீரிஸ் மேலும் தெரிவித்தார்..

## நாட்டின் ஸ்திரத்தன்மையை...

குறிப்பிட்டுள்ளார். இலங்கை மீதான பிரிட்டன் அரசாங்கத்தின் கரிசனையை மீளவலியுறுத்தியுள்ள பிரதமர் போரிஸ் ஜோன்சன், 'நாடு தற்போது எதிர்கொண்டுள்ள பொருளாதார, சமூக சவால்களுக்கு மத்தியில், பிரிட்டன், இலங்கை மக்களுக்கு தொடர்ந்தும் ஆதரவளிக்கும். சர்வதேச நாணய நிதியத்தின் ஒத்துழைப்புடன் மிக விரைவில் உங்களால் முன்னேற்றத்தைக் காண முடியும் என்பதில் எனக்கு நம்பிக்கையுண்டு. இவ்விடயத்தில் இலங்கைக்கு உதவ, எமது சர்வதேச பங்குதாரர்களுடன் பிரிட்டன் இணைந்து செயற்பட காத்திருக்கின்றது என்றும் குறிப்பிட்டுள்ளார்.

மேலும் இலங்கையின் நல்லிணக்கம், பொறுப்புக்கூறல் ஆகியவற்றில் நிலையான மற்றும் கணிசமான முன்னேற்றத்தை அடைவதற்கு, இரண்டு அரசாங்கங்களும் இணைந்து செயற்பட முடியுமென்றும் பிரிட்டன் பிரதமர் நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

'செப்டம்பரில் நடைபெறவுள்ள ஐ.நா மனித உரிமைகள் பேரவையின் 51ஆவது அமர்வு, அணுகுமுறை மாற்றத்துடனான இலங்கையின் மனித உரிமைச் சான்றுகளை நிரூபிக்க இலங்கை அரசாங்கத்துக்கு சிறந்த தருணமாக இருக்கும். இவ்விடயங்களில் அனைவரும் உணரக்கூடிய உண்மையான முன்னேற்றத்தை உருவாக்க, பிரிட்டனும், சர்வதேச சமூகமும், இலங்கையுடன்இணைந்து பணியாற்ற வேண்டியுள்ளது. அண்மையில் அறிவிக்கப்பட்ட அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளுக்கான வர்த்தக திட்டம் தொடர்பில் சுட்டிக் காட்டிய பிரித்தானிய பிரதமர், இத்திட்டத்தின் மூலம் இலங்கை ஏற்றுமதி செய்யும் மொத்த பொருட்களின் பெரும்பகுதிக்கு, வரிச் சலுகை அணுகுமுறை மூலம் பயனடைவதற்கான வாய்ப்பு கிட்டும் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

## காணாமல் போனோர்...

சேதமடைந்த சொத்துக்களுக்கு இழப்பீடு வழங்கவும் அதனை முறையாகவும் விரைவாகவும் செய்யுமாறு அதிகாரிகளுக்கு அவர் தெரிவித்தார். இலங்கையில் மனித உரிமைகளை பாதுகாத்தல், சமாதானம் மற்றும் நல்லிணக்கத்தை கட்டியெழுப் புதல் தொடர்பான தேசிய பொறிமுறையின் முன்னேற்றம் குறித்து ஆராயும் கலந்துரையாடல் நீதி, சிறைச்சாலை விவகாரங்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் ஜனாதிபதியின் சட்டத்தரணி கலாநிதி விஜேயதாச ராஜபக்ஷ தலைமையில் நடைபெற்றது.

இதன்போதே அமைச்சர் விஜேயதாச ராஜபக்ஷ இவ்வாறு பணிப்புரை விடுத்துள்ளார்.

நீதி அமைச்சில் நடைபெற்ற இக்கலந்துரையாடலின் போது, வெளிவிவகார அமைச்சர் ஜனாதிபதி சட்டத்தரணி அலி சப்ரியும் கலந்துகொண்டார். நீதி அமைச்சின் கேட்போர் கூடத்தில் இக் கலந்துரையாடல் நேற்று முன்தின ம் (01) நடைபெற்றது.

மனித உரிமைகளைப் பாதுகாத்தல், அமைதியைக் கட்டியெழுப்புதல், நல்லிணக்கத்தை ஏற்படுத்துதல், காணாமற்போனோர் தொடர்பான முறைப்பாடுகளை விசாரணை செய்தல், காணாமற்போனதாக உறுதிப்படுத்தப்பட்ட மற்றும் சேதப்படுத்தப்பட்ட சொத்துக்களுக்கு நட்டஈடு வழங்குதல், பாதுகாப்புப் படையினரின் வசமுள்ள தனியார் காணிகளை விடுவித்தல், அத்துடன் தொடர்புடைய நிறுவனங்களின் முன்னேற்றம் தொடர்பாகவும் இக்கலந்துரையாடலின் போது கவனம் செலுத்தப்பட்டது.

வருடாவருடம் ஜெனீவா மனித உரிமைகள் பேரவை அமர்வில் பங்குபற்றும்போது, இலங்கையில் மனித உரிமைகளைப் பாதுகாக்கும் அரசாங்கத்தின் வேலைத்தி ட்டத்தின் முன்னேற்றம் போன்று எதிர்காலத்தில் மனித உரிமைகளைப் பாதுகாப்பதற்காக நிறுவப்படும் நிறுவனங்கள் எவ்வாறு செயற்பட வேண்டும் என்பது குறித்தும் இங்கு கலந்துரையாடப்பட்டது.

நாடுகளுக்கிடையில் சமாதானத்தையும் நல்லிணக்கத்தையும் மேம்படுத்தும் வகையில் செயற்படுவது அதற்காக நிறுவப்பட்ட நிறுவனங்களின் பொறுப்பாகுமெனவும், தேசிய, ஒருமைப்பாடு மற்றும் நல்லிணக்கத்துக்கான அலுவலகத்தினால் நாடு முழுவதையும் உள்ளடக்கியதாக எதிர்காலத்தில் உருவாக்க திட்டமிடப்பட்டுள்ள ‘கிராம ராஜயம்’ கருத்தாக்கம் உடனடியாக அறிமுகப்படுத்தப்பட வேண்டுமெனவும் நீதி அமைச்சர் வலியுறுத்தினார்.

## 115 மேலதிக...

சகலரும் உட்பட 56 பேர் சபைக்கு சமுகமளிக்கவில்லை.

இதேவேளை இடைக்கால வரவு செலவுத் திட்டம் மீதான வாக்கெடுப்பில் சஜித் பிரேமதாச தலைமையிலான பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி,கடந்த புதன்கிழமை அரசிலிருந்து வெளியேறி எதிர்க்கட்சி பக்கத்தில் பொதுஜன பெரமுனவின் சுயாதீன அணியாக செயற்படும் 13 எம்.பி.க்களும் சபைக்கு சமுகமளித்திருந்த போதும் ஆதரவாகவோ எதிராகவோ வாக்களிக்கவில்லை.

ஜே .வி.பி. எம்.பி.க்களான அனுர குமார திசாநாயக்க, விஜித ஹேரத், ஹரிணி அமரசூரிய ஆகியோரும் தமிழ் தேசிய மக்கள் முன்னணி எம்.பிக்களான கஜேந்திரகுமார் பொன்னம்பலம், செல்வராஜா கஜேந்திரன் ஆகியோருமே எதிராக வாக்களித்தனர்.

அரசின் எதிர்வரும் 04 மாதங்களுக்கான இடைக்கால வரவு செலவுத்திட்டம் கடந்த செவ்வாய்க்கிழமை ஜனாதிபதியும் நிதி அமைச்சருமான ரணில் விக்கிரமசிங்கவினால் சபையில் சமர்பிக்கப்பட்டது. இதனையடுத்து புதன்,வியாழன், வெள்ளி ஆகிய 03 தினங்கள் வரவு செலவுத்திட்டம் மீதான விவாதம் இடம்பெற்றது.

விவாதத்தின் இறுதி நாளான வெள்ளிக்கிழமை நேற்று இடைக்கால வரவு செலவுத்திட்டத்தை நிறைவேற்ற எதிர்க்கட்சித் தரப்பிலுள்ள ஜே .வி. பி. வாக்கெடுப்பைக் கோரியது. இதனையடுத்து இடம்பெற்ற இலத்திரனியல் முறை வாக்களிப்பில் வரவு செலவுத்திட்டத்துக்கு ஆதரவாக 120 வாக்குகளும் எதிராக 05 வாக்குகளும் அளிக்கப்பட்ட நிலையில் 115 மேலதிக வாக்குகளினால் இடைக்கால வரவு செலவுத்திட்டம் நிறைவேற்றப்பட்டது.

இடைக்கால வரவு செலவுத்திட்டத்துக்கு ஆதரவாக அரசுடன் இணைந்து ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி, இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் ஆகிய கட்சிகள் வாக்களித்தன.

கடந்த செவ்வாய்க்கிழமை இடைக்கால வரவு செலவுத் திட்டம் சமர்ப்பிக்கப்பட்டு மறுநாள் புதன்கிழமை அதன் மீதான விவாதம் ஆரம்பமான போது ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் தவிசாளரும் எம்.பி.யுமான பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ் மற்றும் டளஸ் அழகப்பெரும உள்ளிட்ட 13 பேர் சுயாதீனமாக செயற்படவுள்ளதாக அறிவித்து எதிர்க்கட்சிப் பக்கத்தில் அமர்ந்து கொண்டனர்.

இதையடுத்து, பாராளுமன்றத்தில் எதிர்க்கட்சிகள் தரப்பிலுள்ள எம்.பி.க்கள் எண்ணிக்கை 109 ஆக அதிகரித்ததுடன் அரச கரப்பு எம்.பி.க்களின் எண்ணிக்கை 115 ஆக குறைவடைந்தது.

இந்நிலையில் நேற்று இடைக்கால வரவு செலவுத்திட்டம் வாக்கெடுப்பின் போது ஐக்கிய மக்கள் சக்தியும் அரசிலிருந்து வெளியேறி எதிர்க்கட்சி ஆசனத்தில் அமர்ந்து பொதுஜன பெரமுனவின் சுயாதீன அணியாக செயற்படும் 13 எம்.பிக்களும் வாக்களிக்காத போதும் பெரும்பான்மை வாக்குகளுடன் இடைக்கால வரவு செலவுத்திட்டம் நிறைவேற்றப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# ஆழ்கடல் வள்ளங்களுக்கான உபகரணங்களை இறக்குமதி செய்ய கடற்றொழில் அமைச்சு ஏற்பாடு

யாழ்ப்பாண குறூப் நிருபர்

கடலுணவு ஏற்றுமதி ஊடாக இலங்கைக்கு கிடைக்கின்ற அந்நியச் செலாவணியில் கணிசமான பங்களிப்பை வழங்குகின்ற படகுகளுக்கு தேவையான உபகரணங்களை இறக்குமதி செய்வதற்கான நடவடிக்கைகளை முன்னெடுப்பதாக கடற்தொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

கடற்தொழில் அமைச்சில் நேற்றைய தினம் வெள்ளிக்கிழமை ஆழ்கடல் வள்ள உரிமையாளர்கள் அமைச்சரை சந்தித்து, உபகரணங்களுக்கான இறக்குமதி தடை செய்யப்பட்டுள்ளமையால் எதிர்கொள்ளும் நெருக்கடிகள் தொடர்பாக எடுத்துரைத்தனர்.



அதனையடுத்து கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, உபகரணங்களின் இறக்குமதி தடையை நீக்குவதற்கான ஏற்பாடுகளை முன்னெடுப்பதாக உறுதியளித்தார்.

அதேவேளை உரிமையாளர்கள், தாங்கள் எதிர்கொள்ளுகின்ற பல்வேறு நடைமுறைப் பிரச்சினைகள் தொடர்பிலும் கடற்றொழில் அமைச்சரின் கவனத்திற்கு கொண்டு வந்தனர்,

அவை தொடர்பாக மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் பற்றிய ஆலோசனைகளை சம்மந்தப்பட்ட அதிகாரிகளுக்கு கடற்றொழில் அமைச்சர் வழங்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# முன்னாள் எம்.பி வி.தர்மலிங்கத்தின் நினைவுதினம் அனுஷ்டிப்பு



பருத்தித்துறை விசேட நிருபர்

முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் வி.தர்மலிங்கத்தின் 37ஆம் ஆண்டு நினைவஞ்சலி நேற்றையதினம் (02) அனுஷ்டிக்கப்பட்டது.

யாழ்ப்பாணம் தாவடியிலுள்ள அவரது நினைவுத் தூபியில் நேற்று காலை 7 மணியளவில் வலிதெற்கு பிரதேச சபை உபதவிசாளர் இ.பரமேஸ்வரலிங்கம் தலைமையில் நினைவஞ்சலிகள் இடம்பெற்றன.

இதன்போது நினைவுத் தூபிக்கு மாலை அணிவிக்கப்பட்டு மலரஞ்சலி செலுத்தப்பட்டது.

நினைவஞ்சலியில், வி.தர்மலிங்கம் அவர்களின் மகனும் யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான த.சித்தார்த்தன், இலங்கைத் தமிழரசு கட்சியின் தலைவர் மாவை சேனாதிராஜா, வடமாகாண சபை அவைத்தலைவர் சீ.வீ.கே.சிவஞானம், சமூக செயற்பாட்டாளர் ம.செல்வின், வடமாகாண சபை முன்னாள் உறுப்பினர் பா.கஜதீபன், உள்ளூராட்சி சபை தவிசாளர்கள், உள்ளூராட்சி சபை உறுப்பினர்கள் மற்றும் பொதுமக்கள் எனப்பலரும் கலந்து கொண்டனர்.

23 வருடங்கள் மானிப்பாய் தொகுதி பாராளுமன்ற உறுப்பினராகவிருந்த விஸ்வநாதர் தர்மலிங்கம் 1985 ஆம் ஆண்டு செப்டம்பர் 2 ஆம் திகதி படுகொலை செய்யப்பட்டதுடன் இதேநாளிலேயே கோப்பாய் தொகுதியின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் மு.ஆலாலசுந்தரமும் படுகொலை செய்யப்பட்டமை என்பது குறிப்பிடத்தக்கது.



கொரோனா தொற்றுக்குள்ளாகி மறைந்த இளம் ஊடகவியலாளரான ஞானப்பிரகாசம் பிரகாஷின் முதலாம் ஆண்டு நினைவேந்தல் நிகழ்வுகள் யாழில் அனுஷ்டிக்கப்பட்டது.

(படம்: யாழ்.விசேட நிருபர்)

# செம்பியன்பற்று புனித பிலிப். நேரியார் ஆலயம் மீள் நிர்மாணிப்பு

கரவெட்டி தினகரன் நிருபர்

கத்தோலிக்க மக்களின் யாத்திரை தலமான வடமராட்சி கிழக்கு செம்பியன்பற்று புனித பிலிப்பு நேரியார் ஆலயம் புதிதாக நிர்மாணிக்கப்படவுள்ளது. இதற்கான அடிக்கலை கடந்த வியாழக்கிழமை யாழ்.மறை மாவட்ட குருமுதல்வர் (விக்கார் ஜெனரல்) அருட்திரு பி.ஜெபரட்னம் அடிகளார் வழிபாடுகளுடன் நாட்டிவைத்தார். கடந்த கால போர் அனர்த்தங்களின் போது இவ்வாலயம் சேதத்துக்குள்ளானதுடன், பிரதேச மக்களும் இடம்பெயர்ந்தனர். 2009 யுத்தம் முடிவுற்றதும் மக்கள் மீளக்குடியேறினர். கடந்த மே 26 இத்திருவிழாவும் சிறப்பாக நடைபெற்றது.

1870 ஆம் ஆண்டு இந்த ஆலயம் கட்டப்பட்டதாக வரலாறுகள் கூறுகின்றன. புனித பிலிப் நேரியார் 1515 ஜூலை 22 இத்தாலி புளோரனஸ் நகரில் பிறந்தார். 1622 இல் பரிசுத்த பாப்பரசர் 15 ஆம் கிறகோரி இவருக்கு புனிதர் பட்டம் வழங்கினார்

இதேபோல யுத்தத்தால் அழிவுற்ற வடமராட்சி கிழக்கு கட்டைக்காடு புனித கப்பலேந்தி மாதா ஆலயம் புதிதாக நிர்மாணிக்கப்பட்டு ஆகஸ்ட் 15 திருவிழாவில் யாழ்.ஆயர்பேரருட் திரு யஸ்ரின் ஞானப்பிரகாசம் ஆண்டகையால் திறந்து வைக்கப்பட்டது.

யுத்தத்தில் அழிவடைந்த இவ்வாலயத்தை புனரமைக்க 2013 இல் அன்றைய யாழ்.ஆயர். மேதகு தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை அடிக்கல் நாட்டினார்.புலம்பெயர்ந்த மக்கள்,பக்தர்களின் உதவியுடன் புதிய ஆலயம் கட்டிமுடிக்கப்பட்டது.



முல்லைத்தீவு மாவட்டத்தின் துணுக்காய் கல்வி வலயத்துக்குட்பட்ட ஒழுமடு தமிழ் வித்தியாலயத்தில் மாணவர்களின் குடிநீர் தேவையை பூர்த்தி செய்யும் முகமாக நோர்வே அரசாங்கத்தின் நான்கு இலட்சம் ரூபா நிதியுதவியிலும் நோர்வே பொருண்மிய மதியுரையகத்தின் இரண்டு இலட்சத்து ஐம்பதாயிரம் ரூபா நிதியுதவியிலும் அமைக்கப்பட்ட சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் வழங்கும் தொகுதி நேற்று மாணவர்களின் பாவனைக்காக திறந்துவைக்கப்பட்டது.

(படம்: மாங்குளம் குறூப் நிருபர்)

# அக்கராயன் ம.வி. அதிபர் நியமன கோரிக்கை அமைச்சர் டக்ளஸின் தலையீட்டால் உடனடித் தீர்வு

அக்கராயன் மகாவித்தியாலயத்துக்கு பொருத்தமான அதிபர் ஒருவரை நியமிக்கவேண்டுமென நீண்டகாலமாக கோரிக்கை விடுக்கப்பட்டு வந்தது. இதனையடுத்து இதுதொடர்பில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தலையிட்டு தீர்வினை பெற்றுக்கொடுத்துள்ளார்.

முன்னர் இப்பாடசாலைக்கு நியமிக்கப்பட்டிருந்த அதிபர் பணியைத் தொடர முடியாதிருப்பதாகக் கூறி ஒதுங்கியிருந்தமையால் பாடசாலையின் முன்னேற்றம் பெரிதும் பாதிக்கப்பட்டிருந்தது.



இதனால் தமக்குப் பொருத்தமான அதிபர் ஒருவரை நியமிக்கவேண்டுமெனக் கோரி பெற்றோரும், நலன் விரும்பிகளும் கடந்த வாரம் கவனயீர்ப்புப் போராட்டமொன்றை முன்னெடுத்திருந்தனர்.

மேலும் இவ்விடயத்தில் தலையிட்டு உடனடியாக பொருத்தமான அதிபர் ஒருவரை நியமிக்க உதவுமாறு, கடற்றொழில் அமைச்சரும், கிளிநொச்சி மாவட்ட ஒருங்கிணைப்புக் குழு இணைத்தலைவருமான டக்ளஸ் தேவானந்தாவிடம் பெற்றோர், பாடசாலை நலன் விரும்பிகள் சார்பாக கோரிக்கை ஒன்றும் முன்வைக்கப்பட்டிருந்தது. 1AB தர பாடசாலையான இப்பாடசாலைக்கு, முன்னதாக, தர நியமங்களின்படி அதிபர் தரம் 1 உள்ள ஒருவரை நியமிக்காமல் ஒருசில தரப்புகளின் விருப்புவெறுப்புகளுக்கமைய அதிபர் ஒருவர் நியமிக்கப்பட்டிருந்தார்.

எனினும், கல்வித் திணைக்களத்தின் சிபாரிசின்படி பொருத்தமான, அதிபர் தரம் 1 தகைமையுள்ள அதிபர் ஒருவரை நியமிப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு தமது மேலதிக இணைப்பாளர் கோடீஸ்வரன் றுஷாங்கன் மூலம் அமைச்சர் டக்ளஸ் தேவனாந்தா மாகாண கல்வியமைச்சின் செயலாளரிடம் அறிவுறுத்தல் விடுத்திருந்தார்.

இதனையடுத்து, கிளிநொச்சி தெற்கு வலயக் கல்விப் பணிப்பாளரின் சிபாரிசின்படி, தற்போது கிளிநொச்சி கனகபுரம் வித்தியாலய அதிபராக கடமையாற்றும், அதிபர் தரம் 1 தகைமையுள்ள இராசரஞ்சிதம் ரவீந்திரன் உடனடியாக அமுலுக்கு வரும் வகையில் அக்கராயன் மகாவித்தியாலய அதிபராக இடமாற்றம் செய்யப்படுவதாக மாகாண கல்வியமைச்சின் செயலாளர் வரதீஸ்வரன் கடிதம் மூலம் வலயக் கல்விப் பணிப்பாளருடாக அறிவித்துள்ளார். இதன்படி, எதிர்வரும் 5ஆம் திகதி திங்கட்கிழமை முதல் அவர் அக்கராயன் மகாவித்தியாலய அதிபராக கடமைகளைப் பொறுப்பேற்பார் என கிளிநொச்சி தெற்கு வலயக் கல்விப் பணிப்பாளர் கமலராஜன் அறியத்தந்துள்ளார்.

# கௌரவ உரிமையுடன் அரசியல் தீர்வு வேண்டும்' 33 நாட்களை கடந்த மக்கள் போராட்டம்

(தலைமன்னார் விஷேட நிருபர்)

தமிழ் மக்களின் உரிமையை நடைமுறைப்படுத்த வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தும் முகமாக ஜனநாயகரீதியான விழிப்புணர்வு போராட்டம் நேற்றுடன் 33 ஆவது நாட்களை கடந்துள்ளன.



வடக்கு,கிழக்கு பகுதிகளில் எட்டு மாவட்டங்களிலும் நடைபெறும் நூறு நாட்கள் செயல் முனைவானது வடக்கு,கிழக்கு ஒருங்கிணைப்புக் குழுவின் அனுசரனையில் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கான இணையம் (போரம்) மற்றும் 'மெசிடோ' நிறுவனங்களின் ஏற்பாட்டில் இத்திட்டம் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது

மன்னார் முசலி பிரதேச செயலகப் பிரிவில் சிலாவத்துறையில் வெள்ளிக்கிழமை (02.09.2022) காலை 10 மணியளவில் புதிய பஸ் நிலையத்தில் முசலி பிரதேச பகுதியிலிருந்து நாலா பக்கங்களிலிருந்தும் வந்த மக்கள் கவனயீர்ப்பு போராட்டத்தில் ஒன்றுகூடியபோது அவர்களுக்கு இந்த 100 நாட்கள் செயல் முனைவு பற்றிய விளக்கவுரையும் அளிக்கப்பட்டது.

இப்போராட்டத்தின்போது 'ஒன்று கூடுவது எமது உரிமை' . 'கருத்துச் சுதந்திரம் எமது உரிமை' , 'கௌரவ உரிமையுடன் அரசியல் தீர்வு வேண்டும்' போன்ற வாசகங்களுடன் பதாதைகளை தாங்கியவர்களாக போராட்டத்தில் கலந்து கொண்டனர்.

கௌரவமான உரிமைகளுடன் கூடிய அரசியல் தீர்வுக்கான மக்கள் குரலாக இவ் செயல் திட்டம் முன்னெடுக்கப்படுவதாக இங்கு தெரிவிக்கப்பட்டது.

இதற்கான விளக்கவுரையை சட்டத்தரனி செல்வராஜ் டினேஷ் மற்றும் மெசிடோ நிறுவன மன்னார் பணிப்பாளர் யட்சன் பிகிராடோ ஆகியோர் நிகழ்த்தியதுடன் கௌரவமான உரிமைகளுடன் கூடிய அரசியல் தீர்வுக்கான மக்கள் குரலாக மக்களும் தங்கள் கருத்துக்களை பகிர்ந்து கொண்டனர்.

# வட மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளராக வைத்திய நிபுணர் திலிப் லியனகே நியமனம்

கிளிநொச்சி குறூப் நிருபர்

வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் பதவிக்கு மருத்துவ நிர்வாகத்துறை விசேட வைத்திய நிபுணர் திலிப் லியனகே (Dr. Dilip H Liyanage) சுகாதார அமைச்சினால் நியமிக்கப்பட்டுள்ளார்.

வடக்கு சுகாதார சேவைகள் பணிப்பாளராக கடமையாற்றிய சிரேஷ்ட மருத்துவ நிர்வாக சேவை அதிகாரியான வைத்திய கலாநிதி கேதீஸ்வரனின் வருடாந்த இடமாற்றத்திற்கு அமைய யாழப்பாண சுகாதார சேவைகள் பணிப்பாளராக இந்த வருட ஆரம்பத்தில் கடமைகளை பொறுப்பேற்றுக் கொண்டார். அதிலிருந்து பதவி வெற்றிடமாகியதுடன், வைத்திய கலாநிதி கேதீஸ்வரனே மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளராகவும் பதில் கடமையாற்றி வருகிறார். இவர் சுகாதார அமைச்சிற்கு விடுத்த தொடர்ச்சியான வேண்டுகோளுக்கமைய வடமாகாண ஆளுனர் உட்பட பல மட்டங்களில் சுகாதார அமைச்சிற்கு முன் வைக்கப்பட்ட கோரிக்கைகளுக்கு அமைவாகவும் சேவையின் தேவை கருதி இப் புதிய நியமனம் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக



சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது. வடக்கின் புதிய மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் தமது வைத்தியப் பணிகளை

மன்னார் மாவட்ட மார்பு நோய் வைத்தியநிலைய பொறுப்பதிகாரியாக (DTCO)

ஆரம்பித்தவர். 2017ஆம் ஆண்டில் கிளிநொச்சி மாவட்டத்தில் பன்றிக்காய்ச்சல் நோய் தீவிரமாகப் பரவிய காலப்பகுதியில் மாவட்டப் பொது வைத்தியசாலையின் பணிப்பாளராக வளங்களை ஒருங்கிணைத்து மக்களைப் பாதுகாக்க மருத்துவ ஆளணியினருக்கு உதவிப் பலரது பாராட்டையும் பெற்றவர்.

மருத்துவ நிர்வாகத்துறையில் விசேட வைத்திய நிபுணரான டிலிப் லியனனே மார்புநோய் சிகிச்சை டிப்ளோமா, சர்வதேச உறவுகளுக்கான பட்டமேற்படிப்பு டிப்ளோமா, உயர் தேசிய பொது பெறுகைகள் மற்றும் ஒப்பந்தமுகாமை டிப்ளோமா,வணிக முகாமைத்துவ முதுகலைமாணி, மருத்துவ நிர்வாக முதுகலை மாணி மற்றும் மருத்துவ நிர்வாக கலாநிதி ஆகிய பட்டமேற்படிப்புகளை நிறைவு செய்துள்ளதுடன் மருத்துவ நிர்வாகத்துறையில் சிறப்புப் பயிற்சியினை இங்கிலாந்தில் பெற்றுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

# வவுனியாவில் சீரற்ற காலநிலை; விவசாயிகள் பாதிப்பு

ஓமந்தை விஷேட நிருபர்

வவுனியாவில் சீரற்ற காலநிலை காரணமாக விவசாயிகள் பெரும் பாதிப்புக்குள்ளாகியுள்ளனர்.

வவுனியா மாவட்டத்தில் 15 ஆயிரத்து 150 ஏக்கர் அளவில் நெற்பயிர்ச்செய்கை மேற்கொள்ளப்பட்டு 12 ஆயிரத்து 909 ஏக்கர் வரை நெல் அறுவடை செய்யப்பட்டுள்ளதுடன் தொடர்ந்து நெல் அறுவடை செய்யும் செயற்பாடுகள் இடம்பெற்று வருகின்றன.



இந்நிலையில் கடந்த சிலநாட்களாக வவுனியா மாவட்டத்தில் பெய்து வருகின்ற மழை காரணமாக 2240.25 ஏக்கர் வரையிலான நெல் அறுவடையினை மேற்கொள்வதற்கு விவசாயிகள் பெரும் சிரமத்திற்குள்ளாகியுள்ளனர்.

குறிப்பாக கடந்த காலங்களில் டீசல் மற்றும் உரத்திற்கு தட்டுப்பாடு ஏற்பட்ட நிலைமையிலும் தமது வாழ்வாதாரமான நெற்செய்கையினை கைவிடமால் தொடர்ந்து மேற்கொண்டிருந்தனர். அத்தோடு சிறுபோகத்தின் போது ஒரு உரத்தினை சுமார் 40,000 ரூபா வரையில் கொள்வனவு செய்தே நெற்செய்கையினை மேற்கொண்டிருந்தனர். இந்நிலையில் கடந்த சில நாட்களாக பெய்து வருகின்ற மழை காரணமாக நெல்லினை அறுவடை செய்வதில் பாரிய சிரமத்திற்குள்ளாகியுள்ளனர்.

எனவே இதனை கருத்திற்கொண்டு அரசாங்கம் தமக்கான உதவியினையோ அல்லது நிவாரணத்தினையோ தந்து உதவ வேண்டும் என்பதே வவுனியா மாவட்ட விவசாயிகளின் வேண்டுகோளாகவுள்ளது.

# கிழக்கின் குரல்



கல்முனை கிறீன்ட்பீல்ட்

## தொடர்மாடி குடியிருப்பு பகுதியில் காட்டு யானைகள் அட்டகாசம்

**சாய்ந்தமருது விசேட நிருபர்**

கல்முனை மாநகர சபை எல்லைக் குட்பட்ட சுனாமியால் பாதிக்கப் பட்ட மக்களுக்காக கல்முனை பிர தேசத்தில் அமைக்கப்பட்ட கிறீன்ட் பீல்ட் தொடர் மாடி மக்கள் குடியி ருப்பு பகுதியில் காட்டு யானைகள் கல்முனை சமுர்த்தி வங்கி சுற்றுபுற வேலியின் ஒரு பகுதியையும் மற்றும் கல்முனை ரோயல் வித்தியாலத்தின் சுற்றுபுற வேலியின் ஒரு பகுதியை யும் சேதப்படுத்தியுள்ளது.

இரவு வேளைகளில் குறித்த பொது மக்கள் குடியிருப்பு பகுதி யில் ஊடுருவும் காட்டு யானைகள் அயலிலுள்ள வயல் வெளிகளில் கூட்டமாக சஞ்சரித்து காணப்படும் நிலையில் அதிகாலை 2.30 மணியள வில் சேதம் விளைவித்ததாக குடியி ருப்பாளர்கள் தெரிவித்தனர்.



குறிப்பாக இரவு நேரங்களில் குறித்த குடியிருப்பு பகுதிகளில் காட்டு யானைகள் வருகை தரும் நிலையில் உள்ளதால் இதனால் மிகவும் அச்ச நிலையில் தாம் வசித்து வருவதாக பொது மக்கள் மேலும் தெரிவிக்கின்றனர்.

இதேவேளை கல்முனை மாநகர சபையினால் சேமிக்கப்படும் திண் மக்கழிவுகள் கல்முனை கீறின் பில்ட் குடியிருப்பு பகுதியை அண்மித்த வயல் வெளியில் மொத்தமாக கொட் டப்பட்டு சேமிக்கப்பட்டு அகற்றல் நடவடிக்கை இடம்பெற்று வரும் நிலையில் இந்த திண்மக்கழிவினை உண்பதற்காய் காட்டு யானைகள் வருகை தருவதாக குடியிருப்பாளர் கள் தெரிவிக்கின்றனர்.

## செங்கலடி மத்திய கல்லூரி மாணவனுக்கு கிழக்கு ஆளுநர் ஒரு இலட்சம் ரூபா அன்பளிப்பு



**மட்டக்களப்பு சுழற்சி நிருபர்**

கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பரீட்சையில் பௌதிக விஞ்ஞான துறையில் அகில இலங்கை ரீதியில் நான்காவது இடத்தையும் மாவட்ட மட்டத்தில் முதலாம் இடத்தை யும் பெற்ற செங்கலடி மத்திய கல்லூரி தேசிய பாடசாலையின் மாணவன் லோகிதன் கிசோபன் நேற்று கிழக்கு மாகாண ஆளுநர் திருமதி அனுராதா யகம்பத்தினால் ஒரு இலட்சம் ரூபா சன்மானமாக வழங்கி கௌரவிக்கப்பட்டார்.

கல்லூரியில் நடைபெற்ற விசேட நிகழ்வில் கிழக்கு மாகாண ஆளுநர் பிரதம அதிதியாக கலந்து கொண்டு லோகிதன் கிசோபனுக்கு கௌர விப்பு, அன்பளிப்புத் தொகையை வழங்கி வைத்தார்.

கொம்மாதுறை பகுதியை பிறப் பிடமாக கொண்ட லோகிதன் கிசோபன் மாவட்டம்,மாகாண மட் டத்தில் பல சாதனைகளை படைத் துள்ளார். வித்தியாலய அதிபர் ட.குகதாசன் தலைமையில் இந்த விசேட நிகழ்வு நடைபெற்றது .

அக்கரைப்பற்று தொழில்நுட்பக் கல்லூரி;

## குறுங்கால பாடநெறிகளுக்கு விண்ணப்பம் கோரல்

**அக்கரைப்பற்று வடக்கு தினகரன் நிருபர்**

அக்கரைப்பற்று தொழில் நுட்பக் கல்லூரியில் ஆறு மாத கால குறுங் கால புதிய பாடநெறிகளுக்கான விண்ணப்பங்கள் தற்போது கோரப் பட்டுள்ளதாக கல்லூரியின் அதிபர் எம்.பீ.எம்.சிறாஜ் தெரிவித்துள் ளார்.

அதனடிப்படையில், தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பவிய லாளர், மோட்டார் சைக்கிள் மற்றும் ஸ்கூட்டர் பழுது பார்த்தல், அலுமி னிய பொருள் ஒருங்கமைத்தலில் சான்றிதழ், நாற்றுமேடை அபிவி ருத்தி உதவியாளர் சான்றிதழ், கள உதவியாளர் விவசாயம், கணனி கிரபிக் வடிவமைப்பு சான்றிதழ், வீட்டுப்பாவனை மின்னியல் உபகர ணங்கள் திருத்துதல் சான்றிதழ்,

கையடக்க தொலைபேசி திருத்து தல் ஆகிய பாடநெறிகளுக்கே விண் ணப்பம் கோரப்பட்டுள்ளது.

மேற்குறிப்பிட்ட பாடநெறி கள் தொடர்பில் மேலதிக விபரம் மற்றும் விண்ணப்பப்படிவங்களை பெற்றுக் கொள்வதற்கு தொழில் நுட்பக் கல்லூரியின் தொழில் வழி காட்டல் பிரிவிற்கு நேரடியாக வருகை தந்து அல்லது 0672279865 என்ற தொலைபேசி இலக்கத்தோடு தொடர்பு கொள்ளுமாறு கல்லூரி அதிபர் மாணவர்களை மேலும் கேட் டுள்ளார்.

## உயர்தர பரீட்சையில் கோட்டைக்கல்லாறு மகா வித்தியாலயம் சாதனை

**பெரியபோரதீவு தினகரன் நிருபர்**

இம்முறை வெளியாகிய க.பொ.த. உயர்தரப் பரீட்சையில் பட்டிருப்பு வலயக் கல்வி பணி மனைக்குட்பட்ட கோட்டைக் கல்லாறு மகா வித்தியாலயத்தில் மருத்துவத் துறையில் இருவரும், பொறியியல் துறையில் இருவ ரும் உட்பட ஏனைய துறைகளைச் சேர்ந்த அதிகளவு மாணவர்கள் பல் கலைக்கழகம் செல்லும் வாய்ப்பை பெற்றுள்ளனர் என்று அதிபர் தெரி வித்துள்ளார்.

மருத்துவத் துறையில் நா. சனீத் சஞ்ஜீவ் 2ஏ, பி. ,வி. சுறோமிலா 2ஏ, பி, பொறியியல் துறையில் கி. சனோஜன் 3ஏ, ஜெ. பிறௌமிகா ஏ,2பி, வணிகப் பிரிவில் வா.நேதுசா 3ஏ, வி.விதுஷாந் 3ஏ, அ.கிசோன் 2ஏ,பி, க.நெப்போலியன் 2ஏ, சீ, ஜெ.சுவேக்கா 2ஏ,பி, கலைப் பிரிவில் சி.சிதுஷா 3ஏ, நா.நர்மிதா ஏ,2பி, ப. சிறிதரன் 2ஏ, பி, ஜெ.அருள்சியா ஏ,பி,சி ஆகிய சிறப்பு பெறுபேறுகளைப் பெற் றுள்ளனர். இவர்களோடு, மேலும் பல மாணவர்கள் பல்கலைக்கழகத் திற்கு தெரிவாகியுள்ளார்கள்.

## சந்திவெளி விபத்தில் இளைஞன் ஸ்தலத்தில் பலி

**மண்டூர் தினகரன் நிருபர்**

சந்திவெளி பொலிஸ் பிரிவிற்குட் பட்ட சந்திவெளி பிரதான வீதியில் நேற்று முன்தினம் (01) மாலை இடம்பெற்ற விபத்தில் இளைஞன் ஒருவர் சம்பவ இடத்தில் பலியான தாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கோரக்கள்ளிமடு கிரான் பிரதே சத்தை சேர்ந்த (22) வயது ஜீவரெத் தினம்தனுஜன் என்பவரே சம்பவ இடத்தில் பலியானவராவார்.

இந்த இளைஞன் தனது வீட்டி லிருந்து சந்திவெளி பிரதான வீதியூ டாக தனது மோட்டார் சைக்கிளில் பயணித்துக் கொண்டிருந்த போது மறு வீதியூடாக வந்த பிறிதொரு மோட்டார் சைக்கிளில் வந்த தாயும் மகனும் மோதியதில் குறித்த இளைஞன் பலியானதுடன் மற்றைய இருவரும் படுகாயமடைந்து வைத் தியசாலையில் சிகிச்சை பெற்று வரு வதாக ஆரம்பக்கட்ட விசாரணைக ளின் போது தெரியவந்துள்ளது.

சந்திவெளி பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரியின் வேண்டுத லுக்கமைவாக சம்பவ இடத்திற் குச் சென்ற பிரதேச திடீர் மரண விசாரணை அதிகாரி எம்.எஸ்.எம்;. நசீர் சடலத்தை பார்வையிட்டதுடன் சடலத்தை பிரேத பரிசோதனைக்கு உட்படுத்திய பின்னர் உறவினர்களி டம் ஒப்படைந்தார்.மேலதிக விசார ணைகளை சந்திவெளி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## குளிர்சாதனப்பெட்டியை திறந்த போது மின்சாரம் தாக்கி இளம் தாய் மரணம்;

**ஓட்டமாவடியில் சம்பவம்**

குளிர்சாதனப்பெட்டியை திறந்த போது மின்சா ரம் தாக்கி இளம் தாயொருவர் மரணித்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

வாழைச்சேனை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ஓட்டமாவடி மூன்றாம் வட்டாரம் மஸ்ஜிதுல் ஹைர் பள்ளிவாசல் வீதியிலுள்ள வீடொன்றிலே இச் சம்பவம் நேற்று முன்தினம் (1) மாலை இடம்பெற்றுள்ளது.

குறித்த வீட்டுப் பெண்மணி குளிர்சாதனப் பெட்டியில் இருந்த பொருட்களை எடுக்க திறந்த போது குளிர்சாதனப் பெட்டியில் மின் ஒழுக்கு ஏற்பட்டிருந்ததன் காரணமாக மின்சாரம் தாக்கிய தில் மரணமடைந்துள்ளதாக பொலிஸாரின் விசா ரணைகளின் போது தெரியவந்துள்ளது.

இவ்வாறு மரணமடைந்த 35 வயது இரண்டு பிள்ளைகளின் தாயான அபூபக்கர் பஸ்மியா என்பவரின் உடல் பிரேதப் பரிசோதனைக்காக வாழைச்சேனை ஆதார வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது. இச் சம்பவம் தொடர் பான மேலதிக விசாரணைகளை வாழைச்சேனை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## பொலிஸாரின் கடமைக்கு ஊறு விளைவித்த தாய், மகனுக்கு விளக்கமறியல்

**றொட்டவெவ குறூப் நிருபர்**

திருகோணமலை மொரவெவ பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் கடமைக்கு சென்ற பொலிஸாரின் கடமைக்கு இடையூறு ஏற்படுத்திய குற்றச்சாட்டின் பேரில் கைது செய்யப் பட்ட தாய் மற்றும் மகனை எதிர்வரும் 13 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டுள் ளது.

திருகோணமலை நீதிமன்ற நீதவான் அண்ணாத்துரை தர்ஷனி முன்னிலையில் நேற்று முன்தினம் (01) குறித்த சந்தேக நபர்களை ஆஜர் படுத்திய போது இக்கட்டளை பிறப் பிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளவர்கள் திருகோணமலை றொட்டவெவ பகுதியைச் சேர்ந்த 44 வயது டைய தாயும், 26 வயதுடைய மகனும் என பொலிஸார் தெரி வித்தனர்.

சம்பவம் குறித்து தெரியவருவதாவது

மொரவெவ பொலிஸ் குற்றத்தடுப்பு பிரிவினர் போதைப் பொருள் விற்பனை செய்து வருவதாக குறித்த 26 வயது சந்தேக நபரை சோதனையிட்டபோது தாயார் குறித்த சம்பவ இடத் துக்கு வருகை தந்து சோதனையிட்ட பொலிஸாரின் கையை கடித்து காயப்படுத்தியதாகவும், கடமைக்கு இடையூறு ஏற்ப டுத்தியதாகவும் நீதவான் முன்னிலையில் பொலிஸார் தெரி வித்தனர்.



அரசாங்கத்தின் துரித உணவு உற்பத்தித் திட்டத்திற்கமைய கிழக்கு மாகாண விவசாயத் திணைக்களத்தினால் வீட்டுத் தோட்டம் மற்றும் சேனைப் பயிர் செய்கையாளர்களை ஊக் குவிக்கும் வேலைத் திட்டம் வாழைச்சேனை விவவாய விரிவாக்கல் பிரிவில் துரித உணவு உற்பத்தித் திட்டத்தின் மூலம் அல்மஜ்மா சேனைபயிர் செய்கையாளர்களுக்கு விதைப்ப யிர்கள் வழங்கும் நிகழ்வு நேற்று வெள்ளிக்கிழமை நடைபெற்ற போது,...

படம் கல்குடா தினகரன் நிருபர்

## அட்டப்பள்ளம் சித்தி விநாயகர் ஆலய மகா கும்பாபிஷேகம்

**காரைதீவு குறூப் நிருபர்**

நிந்தவூர் அட்டப்பள்ளம் ஸ்ரீ சித்தி விநாயகர் ஆலய புனராவர்த்தன அஷ் டபந்தன பஞ்ச குண்டபக்ச மகா கும் பாபிஷேகம் எதிர்வரும் 5ஆம் தேதி திங்கட்கிழமை நடைபெறவுள்ளது.

முன்னோடியாக நேற்று (2) வெள் ளிக்கிழமை கும்பாபிஷேக பிரதம குரு சிவஸ்ரீ சண்முக மகேஸ்வர குருக் கள் தலைமையில் ஆரம்பமானது.

இன்று (3) சனிக்கிழமையும் நாளை (4) ஞாயிற்றுக்கிழமையும் எண் ணெய்க் காப்பு சாத்தும் நிகழ்வு இடம் பெற இருக்கின்றது. தொடர்ந்து திங் கட்கிழமை காலை 6.54 மணி முதல் 7.31 மணி வரை உள்ள சுப வேளையில் மகா கும்பாபிஷேகம் இடம்பெற இருக்கின்றது என ஆலய பரிபாலன சபை தெரிவித்துள்ளது. கும்பாபிஷே கத்தை தொடர்ந்து மண்டல அபிஷேக பூசைகள் நடைபெறும்.



ஐக்கிய அமெரிக்க தூதரகத்தின் நிதியுதவியுடன் சேர்விங் ஹியூமானிட்டி பவுன்டேசன் கிண்ணியா அமைப்பின ரின் ஏற்பாட்டில் திருகோணமலை மாவட்டத்தில் தேர்ந்தெடுக்கப்பட்ட 20 சிவில் சமூக அமைப்புகளின் திறன் விருத்தியை மேம்படுத்தும் செயலமர்வொன்று கிண்ணியா விஷன் மண்டபத்தில் நேற்று முன்தினம் (01) நடை பெற்ற போது...

படம் தம்பலகாமம் குறூப் நிருபர்

## சர்வதேச தெங்கு தினத்தை முன்னிட்டு 1000 தென்னங் கன்றுகள் வழங்கல்

**அன்புவழிபுரம் தினகரன் நிருபர்**

சர்வதேச தெங்கு தினத்தை முன்னிட்டு திருகோணமலையில் 1000 தென்னங் கன் றுகள் சர்வதேச பசுமை வனம் அமைப்பி னால் நேற்று வழங்கி வைக்கப்பட்டது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக திரு கோணமலை மாவட்ட அரசாங்க அதிபர் B.H.N. ஜெயவிக்ரம கலந்து கொண்டார்.

பட்டிணமும் சூழலும் பிரதேச செய லகப் பிரிவில் உள்ள இலுப்பங்குளம் கிராமத்தினை தென்னை வளத்தில் தன் னிறைவான கிராமமாக மாற்றும் செயற் திட்டத்தின் ஆரம்ப நிகழ்வாகவே இது அமையப் பெற்றுள்ளது என சர்வதேச பசுமை வனம் அமைப்பின் இணைப்பா ளர் T.M. யூஜின் தெரிவித்தார்.

தொடர்ந்து அவர் கருத்துத் தெரிவிக்கும் போது,..


தமது அமைப்பின் மூலம் வழங்கப்ப டவுள்ள தென்னங்கன்றுகள் இங்குள்ள குடும்பங்களுக்கு தலா 03 கன்றுகள் வீதம் பகிர்ந்தளிக்கப்படும்.



தொடர்ச்சியாக 05 ஆண்டுகளுக்கு இவ்வாறு 03 கன்றுகள் வழங்கப்படுவது டன் அதற்கான மேற்பார்வையும் இடம் பெற ஏற்பாடுகள் உள்ளன.

இதன் மூலம் கிடைக்கும் தேங்காய் மற்றும் தும்பு முதலியவற்றை மூலப் பொருட்களை வைத்து குடிசை கைத் தொழிலை ஆரம்பிக்க திட்டம் இருப்ப தாகவும் தென்னங்கன்றுகளை உற்பத்தி செய்யும் செயற்பாடுகளையும் இக்கிராமத் தில் ஆரம்பிக்கப்படவுள்ளது என அவர் தெரிவித்தார்.

# மலைச்சாரல்



## கொட்டகலை பிரதேச சபையில் சட்டவிரோத கட்டடம்;

# பிரதேச மக்கள் முறைப்பாடு



கொட்டகலை பிரதேச சபைக்கு உட்பட்ட சட்டவிரோதமாக கட்டப்பட்ட சர்ச்சைக்குரிய பத்தனை தொடர் கடைத் தொகுதி தொடர்பான முறைப்பாடு இ.தொ.கா தலைவர் செந்தில் தொண்டமான், பொது செயலாளர் ஜீவன் தொண்டமான் ஆகியோரிடம் கிடைக்கப்பெற்றதை தொடர்ந்து, இது தொடர்பான சட்ட ரீதியான ஆவணங்களை கொட்டகலை பிரதேச தலைவர் ராஜமணி பிரசாந்த் அவர்களை சமர்ப்பிக்குமாறு பணிப்புரை விடுக்கப்பட்டது.

சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்களை ஆராயும் பொழுது சர்ச்சைக்குரிய இக்கட்டடமானது அரச அனுமதி எதுவும் இன்றி முறைக்கேடாக கட்டப்பட்டதாக அறிய முடிகிறது.

எதிர்வரும் மாதம் 8ம் திகதி சௌமியபவனில் இடம்பெற உள்ள ஒழுக்காற்று விசாரணைக்கு கொட்டகலை பிரதேச சபை தலைவர் ராஜமணி பிரசாந்த் மற்றும் முன்னாள் உப தலைவர் சுரேஷ் குமார் ஆகியோரை சமூகமளிக்குமாறு பணிப்புரை விடுக்கப்பட்டுள்ளது.

மேலும் இ.தொ.கா பொது செயலாளர் ஜீவன் தொண்டமான், சட்ட விரோதமாக கட்டப்பட்ட சர்ச்சைக்குரிய இக்கட்டடத்தை மாவட்ட செயலாளர் ஊடாக அரச உடைமை ஆக்குமாறு பணிப்புரை விடுத்துள்ளார்.



மாத்தளை நோத் செல்வவிநாயகர் கோவிலில் வருடாந்த தேர்த்திருவிழா அண்மையில் விமரிசையாக நடைபெற்ற போது பிடிக்கப்பட்ட படம். (படம் மாத்தலை சுழற்சி நிருபர்)

## 'சிறகு' புத்தக வெளியீட்டு விழா



**பலாங்கொடை தினகரன் நிருபர்**

பலாங்கொடை இ/ சி சி தமிழ் மகா வித்தியாலயத்தில் கடந்த 31 ஆம் திகதி விசேட கல்விப்பிரிவினரால்" சிறகு" என்ற பெயரில் புத்தக வெளியீட்டு விழாவொன்று வெகு விமரிசையாக பாடசாலை கேட்போர் கூடத்தில் அதிபர் தம்பி ராஜா தலைமையில் நடைபெற்றது.

வைபவத்தில் கலந்து கொண்ட பிரமுகர்கள் மத்தியில் அதிபர் உரையாற்றுகையில், "இவ்வாறான உன்னதமான நிகழ்வுகளை தான் மிகவும் மகிழ்வுடன் வரவேற்பதுடன் இந்த புத்தக வெளியீட்டை வெளியிட ஏற்பாடுகளை மேற்கொண்ட குழுவுக்கும் மாணவர்களுக்கும் எனது வாழ்த்துக்களையும் பாராட்டினையும் தெரிவிப்பதாக குறிப்பிட்டார்.

இந்த புத்தக வெளியீட்டினை உருவாக்கிய விசேட கல்வி குழுவினர் முதல் பிரதியை பாடசாலை அதிபர் தம்பி ராஜாவிடம் கையளித்தனர்.





வத்துகாமம், அருள்மிகு ஸ்ரீ கண்கண்ட விநாயகர் சதுர்தி அலங்கார உற்சவத்தின் போது இடம்பெற்ற பாற் குடப்பவனி, யாக பூஜை, கும்ப ஊர்வலம், விசேட தீபாரதனை என்பவற்றின் போது எடுக்கப்பட்ட (படம் அக்குறணை குறூப் நிருபர்)



நுவரெலியா கந்தப்பளை நகர் ஸ்ரீ சித்தி விநாயகர் ஆலய ஆவணி மாத வருடாந்த மஹோற்சவத் திருவிழாவின் முத்தேர் பவனி நேற்றுமுன்தினம் (01) காலை வெகுவிமர்சையாக இடம்பெற்றது.

## Dust No. 1 தர தேயிலை அதிக விலையைப் பெற்று சாதனை




உயர்தர தேயிலைகளை உற்பத்தி செய்வதில் பெயர் பெற்ற ஹேலிஸ் பெருந்தோட்ட கம்பனியின் கீழ் இயங்கும் தலவாக்கலை கிறேட்வெஸ்டன் தோட்டத்தில் தயாரிக்கப்பட்ட தேயிலைத்தூள் அதிக விலைக்கு விற்பனை செய்யப்பட்டுள்ளது. கடந்த ஆகஸ்ட் மாத இறுதியில் இடம்பெற்ற ஏலத்தில் Dust No. 1 தர தேயிலைத்தூள் 2650 ரூபாய் விலையைப் பெற்று சாதனை படைத்தது. இந்த தேயிலை போப்ஸ் மற்றும் வோக்கர்ஸ் ஆகிய தனியார் ஏற்றுமதி நிறுவனங்களால் வாங்கப்பட்டது. கிறேட்வெஸ்டன் தோட்டத்தில் மிகவும் தரமான தேயிலைத்தூள் வகைகளான FBOP ஒரு கிலோ 3000 ரூபாய்க்கும், BOPS ஒரு கிலோ 1800 ரூபாய்க்கும் விற்பனை செய்யப்பட்டது.

தலவாக்கலை கிறேட்வெஸ்டன் தோட்டம் தலவாக்கலை பெருந்தோட்ட கம்பனியின் கீழ் நிர்வகிக்கப்படுகிறது. இதன் வளர்ச்சிக்கு காரணமாக முகாமையாளர் சரத் ரணவீர மற்றும் சிரேஷ்ட உதவி முகாமையாளர் தினேஸ் மெதிவக்க ஆகியோர் கலந்துகொண்டனர்.

(படம் தலவாக்கலை குறூப் நிருபர்)

## மானியமுறையில் உணவுப் பொருட்களை வழங்க கோரிக்கை

**நாவலப்பிட்டி சுழற்சி நிருபர்**



நாட்டில் நிலவும் பொருளாதார நெருக்கடி, அத்தியாவசியப் பொருட்களின் விலையேற்றம் காரணமாக பெருந்தோட்ட மக்கள் தமது வாழ்க்கையை கொண்டு செல்வதில் தி னமும் பெரும் சிரமங்களை எதிர்நோக்கிவருவதாக தெரிவிக்கின்றனர். ஒருநாட் சம்பளமாக ஆயிரம் ரூபாய் கிடைக்கின்றது. இந்நிலையில் தோட்டங்களில் அநேக சிறு குழந்தைகளுக்கு பால்மா பக்கட் ஒன்று கூட வாங்கிகொடுக்க முடியாத நிலைக்கு மக்கள் தள்ளப்பட்டிருப்பதாக தெரிவிக்கின்றனர். பெருந்தோட்டங்களிலுள்ள மக்களில் அநேகமானோர் காலை உணவாக கோதுமைமா ரொட்டியை சாப்பிடுவதே வழக்கமாகும். எனினும் கோதுமை மா போன்றவற்றின் விலை சடுதியாக அதிகரித்துள்ளமையால் தமது ஒருவேளை உணவை கூட சரியாக பெற்றுக்கொள்ள முடிவதில்லையென கவலை வெளியிட்டுள்ளனர். மலையகத்தில் பல தொழிற்சங்க அரசியல்வாதிகள் இருந்த போதிலும் இன்னும் தோட்டத்தொழிலாளர்கள் வாழ்வில் மாற்றம் ஏற்படவில்லை. அன்று தொடக்கம் இன்று வரை உழைப்புக்குகேற்ப சம்பள உயர்வு கிடைப்பதில்லை. இதனால் மாணவர்களின் கல்வி, போஷாக்கு என அனைத்தும் பாதிக்கப்பட்டுள்ளதாக மக்கள் தெரிவிக்கின்றனர். எனவே, மலையக தொழிற்சங்கவாதிகள் பெருந்தோட்ட மக்களுக்கு உணவுப்பொருட்களை மானிய அடிப்படையில் பெற்றுக்கொடுக்க நடவடிக்கை எடுக்கவேண்டும் என கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

## வீதியில் கண்டெடுத்த சீருடை

**(இரத்தினபுரி சுழற்சி நிருபர்)**

இரத்தினபுரி புதிய நகர துணை வீதியொன்றில் சீருடையொன்று கண்டெடுக்கப்பட்டுள்ளது.

இதன் உரிமையாளர் கீழுள்ள தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொண்டு இதனை பெற்றுக் கொள்ளலாம் என இதனைக் கண்டெடுத்தவர் அறிவித்தல் விடுத்துள்ளார். 0714305035 / 0775586035





மத்திய மாகாண ஹங்குரன்கெத்த கல்வி வலய தமிழ்மொழித் தினப் போட்டிகள் ஹேவாஹெட்ட விக்னேஸ்வரா தமிழ் மகா வித்தியாலயத்தில் அதிபர் எஸ்.தயாபரன் தலைமையில் இடம்பெற்றது. மத்திய மாகாண மேலதிக கல்விப் பணிப்பாளர் அருந்ததி சத்தியேந்திரா ,மத்திய மாகாண உதவிக் கல்விப் பணிப்பாளர் பெ.விக்னேஸ்வரன் மற்றும் பலர் இந்நிகழ்வில் கலந்துகொண்டனர். (படம் புசல்லாவை தினகரன் நிருபர்)

## இலவச செயலமர்வு

களுத்துறை மாவட்டத்தில் இம்முறை தரம் 05 புலமைப்பரிசில் பரீட்சைக்கு தோற்றவுள்ள தமிழ் மொழிமூலமாணவர்களுக்குஇலவச செயலமர்வு ஒன்று ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. ஹொரணை கல்வி வலயத்துக்குட்பட்ட புளத்சிங்கள கோட்ட கல்வி பணிமனை மற்றும் அக்கோட்டத்திற்குட்பட்ட தமிழ் மொழி மூல அதிபர்களின் ஏற்பாட்டில் எதிர்வரும் 06ஆம், 07ஆம், 08ஆம் ஆகிய திகதிகளில் புளத்சிங்கள கேட்போர் கூடத்தில் இச்செயலமர்வு இடம்பெறவுள்ளது.

## மதுபானசாலையில் கொள்ளை

**மஸ்கெலியா தினகரன் விசேட நிருபர்**



மஸ்கெலியா நகரிலுள்ள மதுபான சாலையில் நேற்று முன்தினம் இரவு மதுபான போத்தல்களை கொள்ளையிட்டு சென்றுள்ளதாக மஸ்கெலியா பொலிஸ் நிலையத்தில் புகார் பதிவு செய்யப்பட்டுள்ளது. இது குறித்து மஸ்கெலியா பொலிஸார் சம்பவ இடத்திற்கு சென்று விசாரணை மேற்கொண்டு வருகின்றனர். ஹற்றன் பொலிஸ் நிலையத்திலிருந்து கை ரேகை நிபுணர்கள் வரவழைக்கப்பட்டு ரேகைகள் பதிவு செய்யப்பட்டுள்ளன.

அருகிலுள்ள வர்த்தக நிலையங்களில் பொருத்தப்பட்டுள்ள சீ.சீ.டிவி கேமராக்கள் மூலம் கொள்ளையரை தேட முயற்சித்து வருகின்றனர்.

## வெலிகபொல பிரதேச சபையினால் 80 இலட்சம் ரூபா செலவில் உணவகம்





**காவத்தை தினகரன் விசேட நிருபர்**

ஓப்பநாயக்க வெலிகபொல பிரதேச சபையின் மூலம் 80 இலட்சம் ரூபா செலவில் ஓப்பநாயக்க கொழும்பு பிரதான வீதியின் பழைய ரயில் வீதியில் புதிதாக அமைக்கப்பட்ட உணவகம் நேற்று(2) மக்கள் பாவனைக்காக திறந்து வைக்கப்பட்டது. திறந்து வைக்கப்பட்டுள்ள உணவகத்தின் மூலம் மக்களுக்கு நச்சுத்தன்மையற்ற தேசிய உணவு வகைகளை சாதாரண விலைகளில் பெற்று கொடுப்பதற்கும் வெலிகபொல பிரதேச சபை நடவடிக்கை எடுத்துள்ளதுடன் இதன் மேற்பார்வைகள் அனைத்தும் வெலிகபொல பிரதேச சபையினால் முன்னெடுக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இந்நிகழ்வில் வெலிகபொல பிரதேச சபை தலைவர் கெமும் ஹெலபீல்ல, கொடக்கவெல பிரதேச சபை தலைவர் பியந்த பண்டார, பலாங்கொடை நகர சபை தலைவர் வசந்த குணரத்ன, சப்ரகமுவ மாகாண ஆளுநர் அலுவலகத்தின் செயலாளர் எச்.டி.சிசிர, மாகாண ஆளுநரின் பிரத்தியேக செயலாளர் மஞ்சுலா இதிகாவெல உட்பட அரச அதிகாரிகள் பொதுமக்கள் அனைவரும் கலந்து கொண்டனர்.

# அமரர் சௌமிய மூர்த்தி தொண்டமானின் 109 ஆவது ஜனன தின நிகழ்வுகள்


பதுளை

இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் ஸ்தாபகத் தலைவர் அமரர் சௌமிய மூர்த்தி தொண்டமானின் 109 ஆவது ஜனன தினம் மலையகப் பகுதிகளில் அனுஷ்டிக்கப்பட்ட போது...




கலஹா


.ஹற்றன்






ராகல






பொகவந்தலாவ




நேர்வூட்



# தீர்க்கமான போட்டியில் பங்களாதேஷ் அணியை வீழ்த்தி இலங்கை 'சுப்பர் போர்' சுற்றுக்கு தகுதி

## இலங்கை-ஆப்கான் மோதும் போட்டி இன்று



பங்களாதேஷுக்கு எதிரான தீர்க்கமான ஆரம்ப சுற்றுப் போட்டியில் கடைசி ஓவர் வரை போராடிய இலங்கை அணி 2 விக்கெட்டுகளால் வெற்றியீட்டி ஆசியக் கிண்ணத் தொடரின் சுப்பர் போர் சுற்றுக்கு முன்னேறியது.

இதன்படி இலங்கை அணி சுப்பர் போர் சுற்றில் தனது முதல் போட்டியில் ஆப்கானிஸ்தான் அணியை இன்று (03) எதிர்கொள்ளவுள்ளது. ஷார்ஜாவில் நடைபெறும் இந்தப் போட்டி இன்று மாலை 7.30க்கு ஆரம்பமாகும்.

இலங்கை அணி ஆரம்ப சுற்றில் ஆப்கானிடம் மோசமான தோல்வியை சந்தித்த நிலையில், அதற்கு பதிலடி கொடுக்க தயாராகும். எனினும் இந்தத் தொடரில் பந்துவீச்சு மற்றும் துடுப்பாட்டம் இரண்டு துறைகளிலும் வலுவாக செயற்படும் ஆப்கான் அணி மீண்டும் ஒருமுறை இலங்கைக்கு சவால் கொடுக்க முயற்சிக்கும்.

இந்நிலையில் டுபாயில் கடந்த வியாழக்கிழமை (01) நடந்த போட்டியில் 184 ஓட்ட வெற்றி இலக்கை நோக்கி பதிலெடுத்தாடிய இலங்கை அணி கடைசி இரண்டு ஓவர்களுக்கும் 25 ஓட்டங்களை பெற வேண்டி ஏற்பட்டது.

அந்த ஓவரின் முதல் நான்கு பந்துகளில் கருணாரத்ன 11 ஓட்டங்களை பெற்றதோடு அசித்த பெர்னாண்டோ கடைசிப் பந்தில் பௌண்டரி ஒன்றை விலாசியதால் இலங்கை அணிக்கு சாதகமான நிலை ஏற்பட்டது.

கடைசி ஓவருக்கு எட்டு ஓட்டங்களை பெற வேண்டிய நிலையில் அசித்த பெர்னாண்டோ இரண்டாவது பந்தில் பௌண்டரி ஒன்றை விளாசியதோடு மூன்றாவது பந்தில் இரண்டு ஓட்டங்களை பெற்ற நிலையில் அது நோபோல் என அறிவிக்கப்பட்டதை அடுத்து இலங்கை அணியின் வெற்றி உறுதியானது.

இலங்கை அணி 19.4 ஓவர்களில் 8 விக்கெட்டுகளை இழந்தே வெற்றி இலக்கை எட்டியது.

முன்னதாக ஆரம்ப வீரர் குசல் மெண்டிஸ் சிறப்பாக துடுப்பெடுத்தாடி 37 பந்துகளில் 4 பௌண்டரிகள் மற்றும் 3 சிக்ஸர்களுடன் 60 ஓட்டங்களை பெற்று போட்டியின் ஆட்ட நாயகன் விருதையும் வென்றார். இந்த இன்னிங்ஸில் அவருக்கு அதிர்ஷ்டமும் பெரிதும் கைகொடுத்தது. விக்கெட் காப்பாளர் முஷ்பிகுர் ரஹிம் அவரது பிடியெடுப்பு ஒன்றை தவறவிட்டதோடு மற்ற வாய்ப்பில் விக்கெட் காப்பாளர் பிடியெடுத்து அவர் ஆட்டமிழந்ததாக அறிவிக்கப்பட்டபோதும் பின்னர் அது நோபோலென கண்டறியப்பட்டது. இவ்வாறு ஆறு ஆட்டமிழப்பு வாய்ப்புகளில் இருந்து தப்பியே மெண்டிஸ், இலங்கை அணியின் வெற்றிக்கு உதவினார்.

முக்கியமான நேரத்தில் வந்த அணித் தலைவர் தசுன் ஷானக்க போட்டியை இலங்கை அணிக்கு சாதகமாக திசை திருப்பினார். குறிப்பாக எபாதொத் ஹொஸைன் வீசிய 13 ஆவது ஓவரில் அடுத்தடுத்து அடித்த சிக்கஸர்கள் இலங்கை அணிக்கு நம்பிக்கையை தந்தது.

முதலில் துடுப்பெடுத்தாட பணிக்கப்பட்ட பங்களாதேஷ் அணியின் விக்கெட்டுகளை முக்கிய இடைவெளிகளில் இலங்கை பந்துவீச்சாளர்களால் வீழ்த்த முடிந்தபோதும் அந்த அணியின் ஓட்ட வேகத்தை கட்டுப்படுத்த முடியாமல்போனது. ஆரம்ப வீரர் மஹ்தி ஹசன் மிராஸ் 26 பந்துகளில் 2 பௌண்டரிகள் மற்றும் 2 சிக்ஸர்களுடன் 38 ஓட்டங்களை விளாசியதோடு மத்திய வரிசையில் ஹபீப் ஹொஸைன் 22 பந்துகளில் 4 பௌண்டரிகள் மற்றும் 2 சிக்ஸர்களுடன் 39 ஓட்டங்களை பெற்றார்.

அதிலும் மொசதக் ஹொசைன் கடைசி ஓவர்களில் 9 பந்துகளில் பெற்ற 24 ஓட்டங்கள் பங்களாதேஷ் ஓட்டங்கள் அதிகரிக்கக் காரணமானது.

தனது கன்னி டி20 போட்டியில் ஆடிய அசித்த பெர்னாண்டோ 3 விக்கெட்டுகளை வீழ்த்தியபோதும் 4 ஓவர்களுக்கும் 51 ஓட்டங்களை விட்டுக்கொடுத்தார். குறிப்பாக அவர் வீசிய கடைசி ஓவரில் பங்களாதேஷ் அணி 17 ஓட்டங்களை விளாசியது.

வனிந்து ஹசரங்கவும் 2 விக்கெட்டுகளை வீழ்த்தியபோதும் வழக்கத்திற்கு மாறாக 4 ஓவர்களுக்கும் 41 ஓட்டங்களை விட்டுக்கொடுத்தார். எனினும் இலங்கை அணி எதிரணிக்கு எந்த மேலதிக ஓட்டத்தையும் விட்டுக் கொடுக்கவில்லை. மறுபுறம் பங்களாதேஷ் அணி 4 நோபோல் மற்றும் எட்டு வைட் பந்துகளை வீசியது இலங்கை அணியின் வெற்றிக்கு உதவிய காரணிகளில் ஒன்றாக இருந்தது.

## கல்முனை ஸாஹிராவில் நாளை கண்காட்சிக் கிரிக்கெட் போட்டி

மாளிகைக்காடு குறூப் நிருபர்




இலங்கை பொலிஸ் திணைக்களத்தின் 156 வருட பூர்த்தியை முன்னிட்டு கல்முனை ஸாஹிரா தேசியக் கல்லூரி ஆசிரியர் அணிக்கும் கல்முனை மற்றும் சாய்ந்தமருது பொலிஸ் நிலையத்தில் கடமை புரியும் பொலிஸாருக்கும் இடையிலான 20 ஓவர்கள் மட்டுப்படுத்தப்பட்ட கண்காட்சி கிரிக்கெட் போட்டி நாளை ஞாயிற்றுக்கிழமை மாலை 2 மணிக்கு கல்முனை ஸாஹிரா தேசியக் கல்லூரி மைதானத்தில் இடம்பெறவுள்ளது

கல்முனை ஸாஹிரா தேசியக் கல்லூரி அதிபர் எம்.ஐ.எம். ஜாபிர் மற்றும் சாய்ந்தமருது பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரியும் கல்லூரியின் பழைய மாணவருமான எஸ்.எல். சம்சுதீன் ஆகியோரின் ஆலோசனையின் பேரில் இடம்பெறவுள்ள இந்நிகழ்வை கல்லூரி விளையாட்டுக்குழு ஒழுங்கு செய்துள்ளது.

## 76ஆவது பிரட்பி கேடய இறுதிப் போட்டி இன்று

அக்குறணை குறூப் நிருபர்



76 ஆவது பிரட்பி கேடயத்துக்கான இரண்டாம் கட்ட இறுதிப் போட்டி இன்று (03) கண்டி பல்லேகலை திருத்துவ கல்லூரி றகர் மைதானத்தில் நடைபெறவுள்ளது.

கண்டி திருத்துவக் கல்லூரி மற்றும் கொழும்பு ரோயல் கல்லூரிகளுக்கு இடையே இடம்பெற்ற பிரட்பி கேடயத்துக்கான முதலாம் சுற்றில் 27–0 என்ற அடிப்படையில் ரோயல் கல்லூரி அமோக வெற்றி ஈட்டியது.

இரண்டாம் சுற்றில் ரோயல் கல்லூரியை விட 27 புள்ளிகள் மேலதிகமாகப் பெறப்பட்டால் மட்டுமே திருத்துவக் கல்லூரியால் கேடயத்தை தனதாக்கிக்கொள்ள முடியும். எனவே 76 ஆவது பிரட்பிகேடயத்தை பெறும்பாலும் தனதாக்கிக் கொள்ளும் சாத்தியம் ரோயல் கல்லூரிக்கு உள்ளது.

## 6 பதக்கங்கள் வென்ற ராம் கராத்தே சங்கம்

அக்கரைப்பற்று வடக்கு தினகரன் நிருபர்



விளையாட்டுத்துறை அமைச்சின் ஏற்பாட்டில் திருகோணமலை எம். சீ. கெய்சர் உள்ளக விளையாட்டு அரங்கில் அண்மையில் நடைபெற்ற மாகாண மட்ட கராத்தே சுற்றுப்போட்டியில் அம்பாறை மாவட்டம் சார்பாக பங்குபற்றிய ஆலையடிவேம்பு ராம் கராத்தே சங்க கழக வீரர்கள் 02 தங்கப்பதக்கம், 01 வெள்ளி பதக்கம் மற்றும் 03 வெண்கலப் பதக்கம் அடங்கலாக மொத்தம் 06 பதக்கங்களை வென்றனர்.

இம்மாதம் கொழும்பில் நடைபெறும் தேசிய விளையாட்டு விழாவில் இச்சங்கத்தின் சார்பில் நான்கு காரத்தே வீரர்கள் கலந்து கொள்ள தெரிவு செய்யப்பட்டுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

## குசல் பெரேராவின் சத்திரசிகிச்சை முடிந்தது



தோள்பட்டை காயத்திற்கு முகம்கொடுத்துள்ள இலங்கை அணியின் ஆரம்ப துடுப்பாட்ட வீரர் குசல் பெரேரா இங்கிலாந்தில் சத்திரசிகிச்சை செய்துகொண்டார்.

இங்கிலாந்தின் மத்திய லண்டனில் இருக்கும் கிங் எட்வட் வைத்தியசாலையில் இடம்பெற்ற இந்த சத்திர சிகிச்சைக்கான முழு செலவையும் இலங்கை கிரிக்கெட் சபை ஏற்றுள்ளது. பிரபல சத்திரசிகிச்சை நிபுணர் அன்ட்ரூ வொலஸ் தலைமையிலேயே இந்த சத்திர சிகிச்சை இடம்பெற்றுள்ளது.

“குசல் நேற்று சத்திர சிகிச்சைக்கு முகம்கோடுத்தார். எதிர்வரும் 14 நாட்களுக்குள் அவர் குணமடைய வேண்டும். என்றாலும் இம்மாதம் 14 ஆம் திகதி அவரை மீண்டும் சோதிக்க வேண்டும்” என்று மருத்துவர் அன்ட்ரூ வொலஸ் கூறினார்.

கடந்த ஆண்டு இந்தியாவின் இலங்கை சுற்றுப்பயணத்திற்கு முன்னரே குசல் பெரேராவுக்கு தோள்பட்டை காயம் ஏற்பட்டது. இதனால் அவர் ஆட்டத்தில் அசௌகரியத்தை உணர்ந்தார்.

இந்த உபாதையுடனேயே அவர் கடந்த ஆண்டு லங்கா பிரிமியர் லீக் போட்டியில் ஆடினார். அப்போது அவர் ஒவ்வொரு நாளும் போல் வலி நிவாரணி மற்றும் ஊசிகளை எடுத்துக்கொண்டே போட்டியில் பங்கேற்றார் என்று நெருங்கிய வட்டாரத்தில் இருந்து தெரியவருகிறது.

லங்கா பிரிமியர் லீக் போட்டிகளில் ஆடியதே அவர் காயத்தில் இருந்து மீண்டு வருவதில் தாமதம் ஏற்பட்டது. இதனால் அவர் இம்முறை ஆசியக் கிண்ண போட்டியை இழக்க வேண்டி ஏற்பட்டுள்ளது. இந்நிலையில் குசல் பெரேரா கடந்த வியாழக் கிழமையே (01) சத்திரசிகிச்சை செய்துகொண்டுள்ளார். அவர் உடல் தேர்ச்சி பெறும் திட்டம் பற்றி இன்னும் உறுதி செய்யப்படவில்லை.

எனவே அடுத்த மாதம் அவுஸ்திரேலியாவில் நடைபெறவுள்ள உலகக் கிண்ண போட்டியில் அவரால் பங்கேற்க முடியாமல் போகலாம் என்று நம்பப்படுகிறது.

எனினும் அடுத்த ஆண்டு நடைபெறும் ஒருநாள் உலகக் கிண்ணத்தில் குசல் பெரேராவால் விளையாட முடியுமாக இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

குசல் பெரேரா 2021 நவம்பரில் நடந்த டி20 உலகக் கிண்ணப் போட்டியிலேயே இலங்கைக்காக கடைசியாக சர்வதேச போட்டிகளில் ஆடினார். அப்போதே அவர் தோள்பட்டை காயத்திற்கு மத்தியிலேயே அந்தத் தொடரில் ஆடினார் என்பது குறிப்பிடத்தக்கது.

## மகளிர் டி20 தகுதிகாண் போட்டிகள் அபுதாபியில்



2023 ஆம் ஆண்டுக்கான மகளிர் டி20 உலகக் கிண்ணத்திற்கு அணிகளை தெரிவு செய்யும் தகுதிகாண் கிரிக்கெட் தொடர் ஐக்கிய அரபு இராச்சியத்தில் நடைபெறும் என சர்வதேச கிரிக்கெட் கௌன்ஸில் அறிவித்துள்ளது.

ஐ.சி.சியின் மகளிர் டி20 உலகக் கிண்ணத் தொடர் அடுத்த ஆண்டு பெப்ரவரி மாதம் தென்னாபிரிக்காவில் நடைபெறவுள்ளது. இந்த நிலையில், மகளிர் டி20 உலகக் கிண்ண கிரிக்கெட் தொடரின், தகுதிகாண் போட்டிகளுக்கான அட்டவணையை ஐ.சி.சி வெளியிட்டுள்ளது.

மொத்தம் 8 நாடுகளின் மகளிர் கிரிக்கெட் அணிகள் பங்குபெறுகின்ற இந்த தகுதிகாண் தொடரில் இருந்து, 2023 ஆம் ஆண்டு மகளிர் டி20 உலகக் கிண்ணத்திற்காக இரண்டு அணிகள் தெரிவு செய்யப்படவுள்ளன.

அதன்படி செப்டம்பர் மாதம் 18 ஆம் திகதி முதல் 25 ஆம் திகதி வரை ஐக்கிய அரபு இராச்சியத்தின் அபுதாபியில் உள்ள சயீட் கிரிக்கெட் மைதானம் மற்றும் டொலரன்ஸ் ஓவல் மைதானம் ஆகிய 2 மைதானங்களில் தகுதிகாண் போட்டிகள் நடைபெறுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இதில் ஏ குழுவில் பங்களாதேஷ், அயர்லாந்து, ஸ்கொட்லாந்து, அமெரிக்கா ஆகிய அணிகள் இடம்பிடித்துள்ளன. அதேபோன்று பி குழுவில் தாய்லாந்து, சிம்பாப்வே, பப்புவா நியூ கினியா, ஐக்கிய அரபு இராச்சியம் ஆகிய அணிகள் இடம் பெற்றுள்ளன.

## தென்னாபிரிக்க டி20 லீக் தொடருக்கு புதிய பெயர்



தென்னாபிரிக்க கிரிக்கெட் சபையினால் முதல் தடவையாக ஏற்பாடு செய்யப்படவுள்ள டி20 லீக் தொடருக்கு எஸ்.ஏ20 எனப் பெயரிடப்பட்டுள்ளது.

தென்னாபிரிக்க கிரிக்கெட் சபையினால் அடுத்த ஆண்டு ஜனவரி – பெப்ரவரி மாதங்களில் நடத்தப்படவுள்ள புதிய டி20 லீக் தொடர் குறித்த முக்கிய அறிவிப்புகளை போட்டித் தொடரின் ஆணையாளரான கிரேம் ஸ்மித் உத்தியோகபூர்வமாக அறிவித்தார்.

இதன்படி, 2023 ஜனவரி முதல் பெப்ரவரி வரையிலான காலகட்டத்தில் நடைபெறவுள்ள இந்தப் போட்டித் தொடரின் வீரர்கள் ஏலம் செப்டம்பர் 19ஆம் திகதி நடைபெறவுள்ளது.

இந்த நிலையில், தென்னாபிரிக்கா டி20 லீக் போட்டியில் பங்கேற்கும் ஆறு அணிகளையும் இந்தியன் பிரீமியர் லீக் அணிகளின் உரிமையாளர்கள் விலைக்கு வாங்கியுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

இந்தத் தொடரில் இலங்கையின் பல வீரர்களும் இடம் பெற்றுள்ளனர்.

# தினகரன் வர்த்தக உலா

எம்.எஸ். பாஹிம் E-mail: businesstkn@gmail.com

# சிறந்த சேவையை வழங்குவதற்காக S-lon தனது யாழ். மீன் விநியோக மையத்தை இடமாற்றியது



தெர்மோபிளாஸ்டிக் குழாய்கள் மற்றும் இணைப்புகள் துறையில் சந்தையில் முன்னணியில் உள்ள Slon Lanka தனியார் நிறுவனம், தனது மதிப்புமிக்க வாடிக்கையாளர்களின் வசதி மற்றும் சேவையின் தரத்தை மேலும் மேம்படுத்தும் நோக்கத்துடனும், தங்களது விற்பனை பங்குதாரர்களுக்கு உதவும் வகையிலும், யாழ்ப்பாணத்தில் உள்ள தனது மீன் விநியோக மையத்தை (redistribution centre) ஒரு புதிய இடத்திற்கு மாற்றம் செய்துள்ளது.

இப்புதிய மீன் விநியோக மையமானது, Slon Lanka நிறுவனத்தின் அர்ப்பணிப்பை மேலும் உறுதிப்படுத்துகிறது, குறிப்பாக இந்த சவாலான காலங்களில், உயர்தர தயாரிப்புகள் மற்றும் சேவைகளை வழங்குவதன் மூலம் அது தனது வாடிக்கையாளர்கள் மற்றும் விற்பனையாளர் வலையமைப்பிற்கு வழங்கும் சேவைகளை மேம்படுத்தியுள்ளது.

Slon நிறுவனத்தின் விநியோகஸ்தர் வலையமைப்பானது அதன் வணிக நடவடிக்கைகளில் ஒரு முக்கிய பகுதியாக விளங்குகின்றது. அத்துடன் விற்பனையாளர்களை ஆதரிப்பதில் நிறுவனம் தொடர்ந்தும் அர்ப்பணிப்புடன் செயற்பட்டு வருகின்றது.

கெபிட்டல் மஹாராஜா குழுமத்தின் குழுமப் பணிப்பாளரும் அதன் பிரதான செயற்பாட்டு அதிகாரியுமான எஸ்.சி. வீரசேகர அவர்கள், இப்புதிய மீன் விநியோக நிலையம் குறித்து கருத்துத் தெரிவிக்கையில்,

"எமது நெறிமுறைகளின் அடிப்படையில், நாம் எமது வாடிக்கையாளர்களை எமது குடும்ப உறுப்பினர்களாக கருதுகிறோம். ஏனெனில் எமது குடும்பத்தினர் மற்றும் நண்பர்களால் எமது தயாரிப்புகள் கொள்வனவு செய்யப்படும் வரை நாம் எமது வாடிக்கையாளர்களுக்கு எந்தவொரு பொருளையும் விற்பனை செய்வதில்லை.

சந்தையில் முன்னணியிலுள்ள நிறுவனம் எனும் வகையில் நாம் வாடிக்கையாளர்களுடன் நெருக்கமாக செயற்பட்டு வருகிறோம். குறிப்பாக இந்த கடினமான காலங்களில் சிறந்த சேவையை வழங்குவது இன்றியமையாததாக காணப்படுகின்றது. இதன் அடிப்படையிலேயே யாழ்ப்பாணத்தில் உள்ள எமது மீன் விநியோக நிலையத்தை மிகவும் வசதியான மற்றும் விசாலமான இடத்தில் நாம் இடமாற்றம் செய்துள்ளோம்.

இதன் மூலம் எமது தயாரிப்புகள் மற்றும் சேவைகளை எமது விற்பனையாளர்கள் இலகுவாக பெறுவதை நாம் உறுதி செய்துள்ளோம்." என்றார்.

புதிய மீன் விநியோக நிலையத்தின் திறப்பு விழாவில், கெபிட்டல் மஹாராஜா குழுமத்தின் குழுமப் பணிப்பாளரும் அதன் பிரதான செயற்பாட்டு அதிகாரியுமான எஸ்.சி. வீரசேகர அவர்கள் மற்றும் யாழ் மீன் விநியோக நிலையத்தின் முகாமைத்துவப் பணிப்பாளர் கிருபாகரன் அவர்கள் ஆகியோர் கலந்து சிறப்பித்தனர்.

இந்நிகழ்வில் Slon நிறுவனத்தின் பிரதிநிதிகளான, நிறுவனத்தின் விநியோகச் சங்கிலி பணிப்பாளர் ஜயந்த கால்லஹேவா, சந்தைப்படுத்தல் முகாமையாளர் நுவன் விக்ரமபத்திரண, விற்பனை முகாமையாளர் சனத் சமிந்த தலைமையிலான கள விற்பனைக் குழுவினர் உள்ளிட்டோர் கலந்து கொண்டிருந்தனர்.

# One Galle face mallஇல் 5G அனுபவங்களை வழங்கும் SLT-MOBITEL



இலங்கையில் நவீன தொழில்நுட்ப மேம்படுத்தல்களை அறிமுகம் செய்வதில் தனது முன்னோடித்தன்மையை உறுதி செய்யும் வகையில் SLTMOBITEL, கொழும்பு one Galleface Mall கிளையில் வாடிக்கையாளர்களுக்கு 5G அனுபவத்தை பெற்றுக் கொள்ளும் நிகழ்வை ஏற்பாடு செய்திருந்தது.

இந்த நிகழ்வில் பொது மக்களுக்காக பரந்தளவு 5G தொழில்நுட்ப வெளிப்படுத்தல் சேவைகள், Virtual Reality, 5G Gaming, remote vehicle control, HD video streaming போன்ற பல அம்சங்கள் அடங்கியிருந்தன. இவற்றினூடாக, அதியுயர் வேகங்களுக்கு மேலதிகமாக 5G தொழில்நுட்பத்தின் திறன்கள் பற்றிய விளக்கங்கள் வழங்கப்பட்டிருந்தன.

பிரதான நகரங்களில் தினசரி வாழ்க்கையில் 5G ஆதிக்கம் செலுத்த ஆரம்பித்துள்ள நிலையில், தனது வணிக அறிமுகத்துக்கு முன்னரான பரீட்சார்த்த வலையமைப்பு பகுதிகளை கொழும்பு, கண்டி, அனுராதபுரம், காலி மற்றும் யாழ்ப்பாணம் ஆகிய பிரதான நகரங்களில் SLTMOBITEL மேலும் விரிவாக்கம் செய்துள்ளது.

இதனூடாக, வாடிக்கையாளர்களுக்கு 5G தொழில்நுட்பத்தை மொபைல் புரோட்பான்ட் ஊடாகவும், நிலையான வயர்லஸ் அணுகல் டொமெயின்களினூடாகவும் பயன்படுத்த வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளது.

2019 ஆம் ஆண்டு முதல், SLTMOBITEL இனால் நாடு முழுவதிலும் 5G வலையமைப்பு பற்றிய விழிப்புணர்வூட்டும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்ட வண்ணமுள்ளன.

2019 ஏப்ரல் மாதத்தில் SLTMOBITEL இனால், தெற்காசியாவின் முதலாவது மொபைல் வலையமைப்பினூடான 5G பரீட்சார்த்த நிறுவுகை வெற்றிகரமாக முன்னெடுக்கப்பட்டிருந்தது.

மொபைல் ஸ்மார்ட் தொலைபேசி ஒன்றை 5G வலையமைப்புடன் இணைத்து அதிவேக இணைப்புகள் பதிவு செய்யப்பட்டிருந்தது.

வயர்லஸ் தொடர்பாடலின் அடுத்த தலைமுறையாக 5G அறியப்படுகின்றது. இதில் அதிவேகம், பாரிய இணைப்புத் திறன் மற்றும் புதிய உள்ளடக்கமான அனுபவங்கள் போன்றவற்றுடன் HD video streaming, virtual reality, factory automation, remote operations, missioncritical communications, massive IOT, smart home & smart city கொள்கைகள் மற்றும் விறுவிறுப்பான மேலும் பல வரையறைகளற்ற அம்சங்கள் நுகர்வோர்களுக்காகவும், வியாபாரங்களுக்காகவும் அடங்கியுள்ளன.

# நல்லூர் திருவிழாவின் போது பக்தர்களுக்கு அன்னதானம் வழங்கும் HUTCH



Broadband தரவு இணைய சேவைகளுக்கான நாட்டின் வளர்ந்து வரும் தெரிவான HUTCH, பொருளாதார ரீதியாக சவாலான இவ்வேளையில் மக்களுக்கு ஆதரவளிப்பதற்கான அதன் முயற்சிகளைத் தொடர்ச்சியாக முன்னெடுத்து வருகிறது.

HUTCH மேற்கொண்டு வரும் பல சமூக ஆதரவு முயற்சிகளுக்கு மத்தியில், யாழ்ப்பாணத்தின் நல்லூர் மகோற்சவத்தில் பக்தர்களுக்கு அன்னதானம் வழங்கி HUTCH தனது பங்களிப்பை வெளிப்படுத்தி வருகின்றது.

வட மாகாணத்தின் யாழ்ப்பாணத்தில் நடைபெறும் மிகப்பெரிய இந்து ஆலய திருவிழாவாக நல்லூர்த் திருவிழா விளங்குகின்றது. இம்மகோற்சவத்தில் கலந்துகொள்பவர்களுக்கு அன்னதானம் வழங்கும் புனிதமான பாரம்பரிய நிகழ்வாக அன்னதான நிகழ்வு இடம்பெற்று வருகின்றது. நாட்டில் தற்போது பணவீக்கம் நிலவுகின்றது. குறிப்பாக உணவுத் தட்டுப்பாடானது 80%க்கு மேல் அதிகரித்து வரும் நிலையில், நாடு முழுவதும் உள்ள மக்கள் போசாக்கான உணவை உண்பதில் மிகவும் சிரமத்தை எதிர்நோக்குகிறார்கள். எனவே, HUTCH ஆனது அதன் சமூகத்திற்கான ஆதரவு முயற்சிகளின் ஒரு பகுதியாக, அன்னதான உதவிகளை வழங்குவதன் மூலம் இச்சுமையை ஓரளவு குறைக்கும் முயற்சியை முன்னெடுத்துள்ளது. நல்லூர் மைலூரான் அரங்கில் ஓகஸ்ட் 05ஆம் திகதி முதல் ஓகஸ்ட் 25ஆம் திகதி வரை 20 நாட்கள் இடம்பெறும் HUTCH அன்னதான நிகழ்வில் பல்லாயிரக் கணக்கானோருக்கு உணவு வழங்கப்படவுள்ளது.

இந்த முயற்சி குறித்து கருத்து தெரிவித்த HUTCH Sri Lanka நிறுவனத்தின் பிரதான நிறைவேற்று அதிகாரி திரு. திருக்குமார் நடராசா, "நல்லூர் திருவிழாவில் வழக்கமான தனது வர்த்தக ஊக்குவிப்பு நடவடிக்கைகளை மேற்கொள்வதற்குப் பதிலாக, வட பிராந்திய மக்களுக்கு சிறந்த உணவை வழங்குவதற்காக இந்நிதியை ஒதுக்க HUTCH தீர்மானித்துள்ளது." என்றார்.

# செலான் கடனட்டைகளுடன் சௌகரியமான முறையில் ஆசிரி வைத்தியசாலை கட்டணங்கள் செலுத்தும் வசதி

விசேட இலகு தவணை கொடுப்பனவு (EPP) திட்டத்தினூடாக ஆசிரி வைத்தியசாலை குழுமத்தின் வைத்தியசாலைக் கட்டணப் பட்டியல் கொடுப்பனவுகளை மேற்கொள்வதை இலகுவாக்கும் வகையில் ஆசிரி வைத்தியசாலை குழுமத்துடன் செலான் வங்கி கைகோர்த்துள்ளதாக அறிவித்துள்ளது. அன்புக்குரியவர் சுகயீனமடைவதால் ஏற்படும் அழுத்தத்தை புரிந்து கொண்ட அன்புடன் அரவணைக்கும் வங்கி, செலான் வங்கி, வாடிக்கையாளர்களுக்கு வைத்தியசாலை கட்டணப் பட்டியல் கொடுப்பனவுகளை மேற்கொள்ளும் போது நிவாரணத்தை வழங்குவதற்காக முன்வந்துள்ளது.

இதனூடாக அவர்களுக்கு இந்த நெருக்கடியான காலப்பகுதியில் அத்தியாவசிய தேவைகளுக்காக அத்தியாவசிய அட்டையினூடாக மனநிம்மதியை பெற்றுக் கொள்ள முடியும்.

எந்தவொரு ஆசிரி வைத்தியசாலையிலும் செலான் கடனட்டையை பயன்படுத்தி கொடுப்பனவை மேற்கொள்ளும் செலான் கடனட்டை வாடிக்கையாளர்களுக்கு விசேட இலகு தவணை கொடுப்பனவு (EPP) திட்டத்தைப் பெற்றுக் கொள்ள முடியும். 6 மாத காலப்பகுதிக்கு 0% வட்டியில்லாத முறையில் மீளச் செலுத்தும் வசதி வழங்கப்படும்.

ஆகக்குறைந்தது ரூ.50,000 முதல் ஆகக்கூடியது ரூ. 1 மில்லியன் வரை பெறுமதியான கட்டணப் பட்டியல் பெறுமதியைக் கொண்ட வாடிக்கையாளர்கள், கொடுக்கல் வாங்கலை மேற்கொண்டு ஏழு வேலை நாட்களுக்குள் 0112008888 எனும் ஹொட்லைன் இலக்கத்துடன் தொடர்பு கொண்டு விசேட இலகு தவணை கொடுப்பனவு திட்டத்துக்கு மாற்றிக் கொள்ள முடியும்.

வட்டியில்லாத இந்த இலகுமுறை மீளச் செலுத்தல் வசதியினூடாக, வாடிக்கையாளர்களுக்கு தமது செலவை படிப்படியாக செலுத்தக்கூடியதாக இருக்கும்.

இந்த வசதி 2022 டிசம்பர் 31ஆம் திகதி வழங்கப்படும். இந்த வசதியினூடாக, செலான் வங்கியினால் அட்டைதாரர்களுக்கு தமது அன்புக்குரியவர்களின் நெருக்கடியான காலப்பகுதியில் மேற்கொள்ளும் மொத்தக் கொடுப்பனவுகளின் போது தொடர்ச்சியான நிவாரணம் வழங்கப்படும். இந்தப் பங்காண்மை தொடர்பில் செலான் வங்கியின் சந்தைப்படுத்தல் மற்றும் விற்பனை உதவி பொது முகாமையாளர் காமிக டி சில்வா கருத்துத் தெரிவிக்கையில், "எமது அட்டைதாரர்களுக்கு இந்த கொடுப்பனவு திட்டத்தை பெற்றுக் கொடுப்பதற்காக முன்னணி சுகாதார பராமரிப்பு சேவைகளை வழங்கும் ஆசிரி குழும வைத்தியசாலையுடன் நாம் கைகோர்த்துள்ளதையிட்டு மகிழ்ச்சியடைகின்றோம்.

தற்போதைய சூழலில், சுகாதார பராமரிப்பு துறையின் தேவைகளை நிவர்த்தி செய்யும் செலவுகளை தாங்கிக் கொள்வதில் பெரும் சிக்கல்களுக்கு பொது மக்கள் முகங்கொடுத்துள்ளனர்.

அத்தியாவசிய தேவைகளுக்கான அத்தியாவசிய அட்டை எனும் வகையில், இது போன்ற தந்திரோபாய ரீதியில் முக்கியத்துவம் வாய்ந்த பங்காண்மைகளினூடாக வாடிக்கையாளர்களின் சுமையை குறைப்பதற்கு பங்களிப்பு வழங்கக் கூடியதாக இருக்கும் என நாம் எதிர்பார்க்கின்றோம்." என்றார்.

# 100% இயற்கை வர்ணமான Planetones, Control Unionஆல் சான்றளிக்கப்பட்டது



இரசாயனப் பொருட்களை முறையாக பயன்படுத்துவதை உறுதிசெய்யும் வகையில், Noyon Lanka (Pvt) Ltd (Noyon) சரிகைக்கான 100% இயற்கையான வர்ணமான Planetonesஐ அறிமுகப்படுத்தியுள்ளது. ஒரு இயற்கை வர்ணத்துக்கு Control Union சான்றிதழ் வழங்குவது இதுவே முதல் முறையாகும்.

ஏற்கனவே இரண்டு முன்னணி ஐரோப்பிய நவநாகரீக பிராண்டுகளுக்கு வணிகமயமாக்கப்பட்ட Noyonன் Planetones இயற்கை வர்ணமானது நிறங்களில் பொதுவாகக் காணப்படும் நடுநிலை நிறங்களுக்கு அப்பால் பரந்த அளவிலான 32 தொடர்களை வழங்குகிறது. Cranberry மற்றும் Achiote போன்ற இயற்கை வண்ண மூலங்கள் பயன்படுத்தப்பட்டு தயாரிக்கப்பட்டுள்ளமை முக்கிய விடயமாகும்.

Eco Dye Standard கட்டுப்பாட்டுச் சபையின் சான்றிதழுக்கு மேலதிகமாக, இந்த இயற்கைச் சாயகரைசலானது, அபாயகரமான இரசாயனங்களின் ஜீரோ டிஸ்சார்ஜ் (ZDHC) தர நிலைகளின் மிக உயர்ந்த மட்டத்தில் உள்ளது என்பதுடன் உற்பத்தித் தயாரிப்பு கட்டுப்படுத்தப்பட்ட பொருட்களின் பட்டியல் (MRSL) நிலை 1 முதல் நிர்ணயிக்கப்பட்ட தரங்களுடன் இணங்குகிறது. Control Unionனின் Eco Dye Standard சான்றிதழைப் பெற்ற முதல் நிறுவனம் Noyon என்பது குறிப்பிடத்தக்கது.

Noyon Lanka என்பது MAS ஹோல்டிங்ஸின் துணை நிறுவனமாகும், இது 2003இல் நிறுவப்பட்டது. இந்த தீர்வு குறித்து கருத்து தெரிவித்த Noyonஇன் பிரதம நிறைவேற்று அதிகாரி Ashiq Lafir,

"எங்கள் மேம்பட்ட ஆராய்ச்சி மற்றும் மேம்பாடு மற்றும் தொழில்நுட்ப திறன்களை பயன்படுத்தி, Noyon பல புத்தாக்கமான மற்றும் நிலையான தீர்வுகளை உருவாக்கியுள்ளது.

எங்கள் வாடிக்கையாளர்களின் அனைத்து முக்கிய செயல்திறன் மற்றும் தரநிலைகளை எதிர்நோக்கும் போது, எங்கள் தயாரிப்புகளின் எதிர்மறையான சுற்றுச்சூழல் தாக்கத்தை குறைக்க முடியும். இந்தப் பயணத்தில் இந்த சமீபத்திய தயாரிப்பு ஒரு முக்கியமான மைல்கல்லாகும்.

# கொமர்ஷல் வங்கி குழுமத்தின் உயர் குறைபாட்டு ஏற்பாடுகளால் நடுநிலைப்படுத்தப்பட்டுள்ள 6 மாத உறுதியான செயற்பாடுகள்

நாட்டின் நுண் பொருளாதாரத்தின் மாறுபட்ட வகைபாடுகளை வெளிப்படுத்தும் வகையில் கொமர்ஷல் வங்கியின் இவ்வாண்டுக்கான முதல் ஆறு மாத காலத்துக்கான நிதிச் செயற்பாட்டு அறிக்கை வெளியிடப்பட்டுள்ளது. இரண்டாம் காலாண்டில் குறைபாட்டு கட்டணங்கள் மற்றும் ஏனைய இழப்புகளுக்கான வழமைக்கு மாறான ஒதுக்கீடுகள் உறுதியான செயற்பாட்டு வருமானத்தை மறுக்கும் நிலையில் இந்த அறிக்கை வெளியிடப்பட்டுள்ளது.

வரையறுக்கப்பட்ட கொமர்ஷல் வங்கி அதன் கிளைகள் மற்றும் இணை நிறுவனங்கள் என்பனவற்றை உள்ளடக்கிய குழுமம் 2022 ஜுன் 30ல் முடிவடைந்த முதல் அரையாண்டில் மொத்த வருமானமாக 119.517 பில்லியன்களைப் பதிவு செய்துள்ளது.

இரண்டாம் காலாண்டுக்கான வருமானமாக 64.944 பில்லியன்களும் பதிவாகி உள்ளன. இது ஆரோக்கியமான முன்னிலை வளர்ச்சியாக முறையே 49.52 வீதம் மற்றும் 66.41 வீதங்களாக அமைந்துள்ளன.

வட்டி வருமானம் 39.08 வீதமாக அதிகரித்து ஆறு மாத காலத்தில் 88.117 பில்லியன்களாக உள்ளது. இரண்டாம் காலாண்டில் 58.78 வீதமாக அதிகரித்து 50.270 பில்லியன்களாக உள்ளது.

சொத்துக்களின் மீள் விலையிடலே இதற்கு பிரதான காரணமாகும். வட்டி வீதங்கள் அதிகரித்து வருகின்ற நிலையிலும் வைப்புக்களின் தொடர்ச்சியான மீள் விலையிடல் காரணமாகவும் வட்டிச் செலவுகள் 47.23 வீதமாக அதிகரித்து 47.4044 பில்லியன்களாக முதல் அரையாண்டில் பதிவாகி உள்ளது.

இரண்டாம் காலாண்டில் இது 77.61 வீதமாகி 28.380 பில்லியன்களாக உள்ளது. இதன் விளைவாக ஆறு மாத காலத்தில் தேறிய வட்டி வருமானம் 30.66 வீத முன்னேற்றம் கண்டு 40.713 பில்லியன்களாக உள்ளது. அதேவேளை தேறிய வட்டி வருமானம் இரண்டாம் காலாண்டுப் பகுதியில் 39.59 வீத வளர்ச்சி கண்டு 21.890 பில்லியன்களாக உள்ளது.

மீளாய்வுக்கு உட்பட்ட காலப்பகுதி பற்றி கருத்து வெளியிட்ட கொமர்ஷல் வங்கித் தலைவர் பேராசிரியர் ஆனந்த ஜயவர்தன "நுண் பொருளாதார சவால்கள் உறுதியான செயற்பாட்டு நடவடிக்கைகளை எவ்வாறு நடுநிலைப்படுத்தலாம் என்பதற்கான ஒரு கற்கை ஆய்வாக எமது ஆறு மாதகால பெறுபேறுகள் அமைந்துள்ளன. நாம் உற்சாகமூட்டும் செயற்பாட்டு நடவடிக்கைகளைக் கடந்துள்ளோம்.

ஆனால் நாமும் ஏனைய எல்லா நிறுவனங்களும் செய்வது போலவே நலிவடைந்து வரும் பொருளாதார சூழ்நிலைகளில் சில சீராக்கங்களை செய்ய வேண்டிய கட்டாயம் இருந்தது.

வங்கி தனது பங்காளர்கள் அனைவரினதும் கடப்பாடுகளை சந்திப்பதையும் வழிவழியாக வந்த அதன் பொருளாதார ஸ்திரப்பாடு மற்றும் உறுதி என்பனவற்றை உறுதி செய்யும் வகையில் இவை இடம் பெற்றன" என்று கூறினார்.

வங்கியின் முகாமைத்துவப் பணிப்பாளரும் பிரதம நிறைவேற்று அதிகாரியுமான சனத் மனதுங்க கருத்து வெளியிடுகையில் "நாங்கள் கடைப்பிடிக்கும் கொள்கை சூழலின் அடிப்படையில் சுறுசுறுப்பான பதில்கள் மற்றும் முன்னோக்கிய முடிவுகள் தேவைப்படுகின்றன.


அவை எந்தளவு கடினமாக இருப்பினும் சரியே. எமது இரண்டாம் காலாண்டு பெறுபேறுகள் குறிப்பாக மேலதிக குறைப்பாட்டு கட்டணங்களின் செல்வாக்கிற்கு உட்பட்டுள்ளன.

இது இலாப வளர்ச்சியில் தாக்கம் செலுத்தக் கூடியது.





இலங்கை அரசாங்கமும் இலங்கை மக்களும் இணைந்து இந்தியாவுக்கு நன்றி தெரிவிக்கும் உபகாரத்தினை (31) கொழும்பு தாஜ் சமுத்திரா ஹோட்டலில் வைத்து இந்தியா உயர் ஸ்தானிகர் கோபால் பக்லேயிடம் கையளித்தனர். இந் நிகழ்வில் வெளிநாட்டு அமைச்சர் ஜனாதிபதி சட்டத்தரணி அலி சப்றி, கலாநிதி கொஸ்கொட சிறி சுபோதி அநுநாயக்க தேரர், கலாநிதி எம். விமலசார தேரர், பேராசிரியர் மலாவா ஹந்தி ஜெகத் ரவீந்திர, செல்வி ஹிமலி பெர்னாண்டோ, சர்வோதய அமைப்பின் பதில் தலைவர் டொக்டர் வின்யா ஆரியரத்தின, நவின் குணரத்தின, ஏ.பால்ராஜ், திருமதி நியோமனி வீரசூரிய, மகேந்திர அமரசூரிய, சுலோச்சன சேகர. கே. ஆர். ரவீந்திரன் ஆகியோர் கலந்து கொண்டனர். கடந்த காலத்தில் இலங்கையில் ஏற்பட்ட பொருளாதார கொவிட் -19 தருணங்களில் அயல் நாடான இந்தியாவே இந்த நாட்டு மக்களுக்கும் அரசுக்கும் உதவியது. அதற்காக இந்நாட்டில் வாழும் சகல சமூகங்கள் சார்பாக இவர்கள் நன்றி தெரிவித்தனர்.



அகில இலங்கை முஸ்லிம் லீக் வாலிபர் சம்மேளனத்தின் ஏற்பாட்டில் ஸ்ரீ லங்கா முஸ்லிம் கவுன்சில் தலைவரும் ஸ்ரீ லங்கா முஸ்லிம் மீடியா போரத்தின் தலைவருமான என்.எம்.அமீனின் தலைமையில் மர்ஹூம் ஏ.எச்.எம்.அஸ்வர் அவர்களின் ஐந்தாவது நினைவு தினம் கொழும்பு 08 இல் எல்விடிகல அடுக்குமாடி தொடரில் அண்மையில் நடைபெற்றது. இலங்கை ஒலிபரப்பு கூட்டுத்தாபனத்தின் தலைவர் ஹட்சன் சமரசிங்க, மர்ஹூம் ஏ.எச்.எம். அஸ்வர் அவர்களின் ஐந்தாவது நினைவு மலர் ஒன்றை யாழ். எழுத்தாளர் கலாபூஷணம் பரீட் இக்பாலுக்கு கையளிக்கும் போது எடுத்த படம்.

## கொழும்பில் இளம் ஊடகவியலாளர்களுக்கான ஊடகப் பயிற்சிநெறி

(எம்.எஸ்.எம்.ஸாகிர்)

ஸ்ரீலங்கா முஸ்லிம் மீடியா போரம் நடாத்தும் தமிழ் பேசும் இளம் ஊடகவியலாளர்களுக்கான ஊடகப் பயிற்சிநெறி இன்று (03) சனிக்கிழமை காலை 9.30 மணிக்கு கொழும்பு மருதானை வை.எம்.எம்.ஏ. மண்டபத்தில் இடம் பெறும்.

சிரேஷ்ட ஊடகவியலாளர் சமீஹா சபீரின் ஏற்பாட்டில், நாடளாவிய ரீதியில் இருந்து சுமார் 50 இளம் ஊடகவியலாளர்கள் கலந்து கொள்ளும் இவ்வூடகப் பயிற்சி நெறியின் வளவாளராக சிரேஷ்ட ஊடகவியலாளர் நௌஷாட் மொஹிடீன் கலந்து கொண்டு ஊடகத்தைக் கையாளும் முறை உட்பட ஊடகத்தில் உள்ள பல நுணுக்கமான விடயங்கள் குறித்தும் பயிற்சியோடு கலந்த விரிவாக விளக்கவுள்ளார். இளம் ஊடகவியலாளர்கள் மத்தியில் இருக்கும் பல்வேறு சந்தேகங்களுக்கும் இதன்போது விளக்கமளிக்கப்படவுள்ளன. சிரேஷ்ட ஊடகவியலாளர்களின் விரிவுரைகளும் இதன்போது இடம்பெறவுள்ளது சிறப்பம்சமாகும்.



காலை 9.30 மணி முதல் பிற்பகல் 2 மணி வரையும் இடம்பெறும் இப்பயிற்சி நெறியின் பின்னர் சான்றிதழ் வழங்கும் வைபவம் ஸ்ரீலங்கா முஸ்லிம் மீடியா போரத்தின் தலைவி புர்கான் பீ இப்திகார் தலைமையில் நடைபெறும். இந்நிகழ்வில், கௌரவ அதிதிகளாக இலங்கை ஜே.ஜே. பவுண்டேசனின் பணிப்பாளர் ஐ.வை.எம்.ஹனீப் மற்றும் அகில இலங்கை வை.எம். எம்.ஏ.பேரவையின் தலைவர் சஹீட் எம்.ரிஸ்மி உட்பட ஸ்ரீலங்கா மீடியா போரத்தின் சிரேஷ்ட உறுப்பினர்கள் பலரும் கலந்து கொள்வர்.

இலங்கை ஜே.ஜே.பவுண்டேசன் மற்றும் அகில இலங்கை வை.எம். எம். ஏ. பேரவையின் பூரண அனுசரணையில் இடம்பெறும் இப்பயிற்சிநெறியில் கலந்து கொள்ளும் அனைத்து இளம் ஊடகவியலாளர்களுக்கும் சான்றிதழ்கள் வழங்கப்படவுள்ளது குறிப்பிடத்தக்கது.

## சனிக்கிழமை அற்றைத்திங்களில் மருத்துவர் ஞானசேகரன்



தமிழின் மூத்த படைப்பாளிகளும் தகைசான்ற ஆளுமைகளும், தமது வாழ்வியல் அனுபவங்கள், கலை, இலக்கிய நட்பு எழுகைகள், பண்பாட்டுத் தாக்கங்கள், படைப்பு முயற்சிகள் முதலியவற்றைப் பகிர்ந்து கொள்ளும் அற்றைத்திங்கள் நிகழ்வு 2022.09.10ம் திகதி சனிக்கிழமை மாலை 5.00 மணிக்கு கொழும்புத் தமிழ்ச் சங்க விநோதன் மண்டபத்தில் நடைபெறவுள்ளது. இந்நிகழ்வு,கொழும்புத் தமிழ்ச்சங்கத் தலைவர் சட்டத்தரணி நடராஜர் காண்டீபன் தலைமையில் நடைபெறவுள்ளது. கொழும்புத் தமிழ்ச் சங்கத் துணைத்தலைவர் மருத்துவர் தி.ஞானசேகரன் (மூத்த எழுத்தாளர்) இங்கு உரை நிகழ்த்தவுள்ளார்.



பிரபல பாடகர் எச்.ஆர்.ஜோதிபாலாவின் 35வது வருட நினைவு நிகழ்வு செவ்வாய்க்கிழமை (30) மாலை இலங்கை ஒலிபரப்பு கூட்டுத்தாபனத்தின் ஆனந்த சமரகோன் கலையரங்கத்தில் நடைபெற்றது. இதன்போது அவரால் பாடப்பட்ட பாடல்களை சிறப்பாக பாடிய ஜனக குணரத்னவுக்கு மலர் மாலை அணிவித்து வானொலி பெட்டி ஒன்றை நிலையத்தின் தலைவர் ஹட்சன் சமரசிங்க வழங்குவதையும் அருகில் பணிப்பாளர் நாயகம் நளின் குமார நிஸ்ஸங்க டவர் ஹோல் நிதியத்தின் பணிப்பாளர் சபை உறுப்பினர் புரவலர் ஹாசிம் உமர் ஆகியோர் அருகில் இருப்பதையும் காணலாம்.

## சிறந்த ஆசிரியர்களுக்கு இந்திய தேசிய விருது

### இந்திய ஜனாதிபதி வழங்குவார்





அதி சிறந்த பாடசாலை ஆசிரியர்கள் 46 பேருக்கு எதிர்வரும் 5ஆம் திகதி தேசிய விருதுகள் வழங்கப்படவுள்ளன. இவற்றை இந்திய ஜனாதிபதி திரவுபதி முர்மு வழங்கி வைக்கவுள்ளார்.

அருண்குமார் கார்க், வந்தனா ஷாஷி, ஹார்பிரீட் சிங் ஆகிய மூன்று பஞ்சாபிகளுக்கு இவ்விருதுகள் வழங்கப்படவுள்ளன. பாடசாலைக் கல்வி அமைச்சர் ஹார்கோத் சிங் இதனை பாராட்டி வரவேற்றுள்ளார்.

அரச பாடசாலைகளில் பணியாற்றும் ஆசிரியர்களுக்கே இவ்விருது வழங்கப்படுகிறது.

அரச ஆரம்பப் பள்ளி தலைமை ஆசிரியரான ஹார்பிரீட் தான் 2003ம் ஆண்டில் பொறுப்பேற்று சிதிலமடைந்த பாடசாலைக் கட்டடத்தை பெற்றோர் மற்றும் நிறுவனங்களின் உதவியோடு 35 லட்சம் ரூபா செலவில் ஸ்மார்ட் பாடசாலையாக மாற்றியமைத்தார்.

இதற்காக ஏழு லட்சம் ரூபாவை தன் சொந்த பணத்தில் இருந்து செலவு செய்ததாக இவரைப் பற்றிய குறிப்பில் இருந்து அறிய முடிகிறது.






கொழும்பு தமிழ்ச் சங்கத்தின் 80ஆம் ஆண்டு "அமுதவிழா" பயணத்தின் முதல் நிகழ்வாக தவத்திரு தனிநாயகம் அடிகளாரின் புலமைப்பகிர்வு நிகழ்வுகடந்த 31ஆம் திகதி தமிழ்ச் சங்க வினோதன் மண்டபத்தில் தலைவர் சட்டத்தரணி ந. காண்டீபன் தலைமையில் நடைபெற்றது. நிகழ்வில் சென்னை பல்கலைக்கழக முன்னாள் தமிழ் இலக்கியத்துறை தலைவர் பேராசிரியர் வீ. அரசு சிறப்பதிதியாக கலந்து கொண்டார். அவர் அடிகளாரின் நிழல் படத்திற்கு மலர் மாலை அணிவித்தார், பேராசிரியர் வீ. அரசு "மேலைநாடுகளுக்கு தமிழியல் ஆய்வு சென்றடைந்த வரலாறும் தவத்திரு தனிநாயகம் அடிகளும்" என்னும் தலைப்பில் சிறப்புரையாற்றினார். ந. காண்டீபன், ஆழ்வாப்பிள்ளை கந்தசாமி, தெ. மதுசூதனன் ஆகியோரும் இதில் கலந்து கொண்டனர்.






## மியன்மாரின் அத்துமீறல்களை சீனா கண்டிப்பதில்லை

### அவதானிகள் கண்டனம்



இங்கிலாந்தின் முன்னாள் தூதுவரான விக்கி போமனை, அவர் தன் புதிய வீட்டு முகவரியை குடிவரவு திணைக்களத்தில் பதிவதற்கு தவறினார் என்ற குற்றச்சாட்டின் பேரில் மியன்மார் இராணுவ அரசு கைது செய்திருப்பதை சீனா கண்டுகொள்ளாமல்விட்டதை அரசியல் அவதானிகள் கண்டித்துள்ளனர். சீனாவுக்கு தனது நலன்கள் பாதிக்கப்படக்கூடாது என்பதே முக்கியம். வங்காள விரிகுடாவில் சீன நடமாட்டத்துக்கு மியன்மார் உதவுவதால் மியன்மார் அரசின்; தவறான நடவடிக்கைகளை சீனா கண்டிப்பதில்லை என்பதோடு மியன்மாரில் ஜனநாயகத்தை நிலை நிறுத்த வேண்டும் என்று அறிவுத்துவதுமில்லை என்று தென்கிழக்காசிய பிராந்திய விவகாரங்களில் நிபுணத்துவம் பெற்ற பில்ஹைடன் தெரிவித்துள்ளார். ஏனைய நாடுகளின் தவறான செய்கைகளை சீனா கண்டிக்காமல் விடும்போது நாடுகளின் உள் விவகாரங்களில் சீனா தலையிடுவதில்லை எனக் காரணம் கூறி தப்பிவிடுவதாகவும் இவர் கூறியுள்ளார்.




நாட்டிய கலா மந்திர் ஸ்தாபக இயக்குனர் 'கலாசூரி' ஸ்ரீமதி வாசுகி ஜெகதீஸ்வரனின் மாணவி செல்வி அம்ரிதா கேதீஸ்வரனின் பரத நாட்டிய அரங்கேற்றம் கடந்த 28ஆம் திகதி பம்பலப்பிட்டி புதிய கதிரேசன் மண்டபத்தில் நடைபெற்றது. இவ்வரங்கேற்ற வைபவத்தில் நிர்த்தனா நடனப்பள்ளி இயக்குனர் 'கலைமாமணி' ஸ்ரீமதி சிவானந்தி ஹரிதர்ஷன் பிரதம அதிதியாக கலந்து சிறப்பித்தார். நிகழ்வில் அவர் கௌரவிக்கப்பட்டார். இங்கு இடம்பெற்ற மாணவியின் அரங்கேற்ற நடனக் காட்சிகளையும், மாணவிக்கு ஆசிரியர் நடனத்திற்கான சான்றிதழ் வழங்கி வைப்பதையும், நிகழ்வில் இணைந்து செயல்பட்ட அணிசேர் கலைஞர்களையும் காணலாம்.

## குழந்தை பிறப்பு வீழ்ச்சியால் கவலையில் சீன அரசு



ஒரு திருமணமான சோடி ஒரு குழந்தைக்கு மேல் பெற்றுக் கொள்ளக் கூடாது என்ற முந்தைய கொள்கையை கைவிட்டுள்ள சீன அரசு தற்போது பல குழந்தைகளைப் பெற்றுக் கொள்ளலாம் என அறிவித்துள்ள போதிலும் அச்செய்தி மக்கள் வரவேற்பைப் பெறத் தவறியிருப்பதாக தகவல்கள் மூலம் அறிய முடிகிறது.

பல்வேறு காரணங்களால் உடனடிக் கருத்தரிப்பை திருமண சோடிகள் தவிர்க்க விரும்புவதாகவும், திருமணத்தைத் தாமதம் செய்வதாகவும் இதனால் அரசு எதிர்பார்க்கும் சனத்தொகை அதிகரிப்பு வீதத்தை எட்ட முடியாமல் போகலாம் என்றும் நிக்கி ஆசியா செய்தி நிறுவனம் தெரிவித்துள்ளது.

திருமணமாகாத ஒரு பெண் தன் கருமுட்டையை எதிர்காலத் தேவைக்காக பாதுகாப்பாக வைத்திருப்பதற்கு ஆஸ்பத்திரி ஒன்றை நாடிய போது அந்த ஆஸ்பத்திரி அதற்கு மறுப்பு தெரிவித்ததோடு திருமணம் செய்து குழந்தை பெற்றுக் கொள்ளும்படி அறிவுரையும் கூறியிருக்கிறது.

இதை எதிர்த்து அப்பெண் 2018ம் ஆண்டு தொடர்ந்த வழக்கின் தீர்ப்பு கடந்த ஜூலை மாதம் வெளியானபோது அது அப் பெண்ணின் விருப்பத்துக்கு எதிராக அமைந்திருந்தது என்று ஐரோப்பிய டைம்ஸ் செய்தி வெளியிட்டுள்ளது.

சீனாவில் திருமணமாகாத ஆண்கள் தமது விந்தணுக்களை சேமித்து வைக்க அனுமதி உண்டு. கரு முட்டையை சேமித்து வைக்க அனுமதி மறுக்கப்பட்டமை அந்நாட்டில் பாலின சமத்துவமின்மையை எடுத்துக் காட்டுவதாக ஊடகங்கள் கருத்து வெளியிட்டுள்ளன.

சீனாவின் நடுத்தர வயதுடையோரின் எண்ணிக்கை சதவீதம் 2020ம் ஆண்டு 38.4 ஆக இருப்பதாகவும் 2035ம் ஆண்டு இது 45 சதவீதமாக உயரும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளதோடு சனத்தொகை அதிகரிப்பு மெதுவாக நடைபெறுமானால் அது சீன கம்யூனிஸ்ட் கட்சிக்கு சவாலாக அமையுமெனவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

மேலும் பெண்களும் தமது கருமுட்டைகளை சேமித்து வைக்க அனுமதிக்கப்பட வேண்டுமெனவும் இது சனத்தொகை அதிகரிப்புக்கு வழிவகுக்கும் எனவும் சீன ஆய்வாளர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

## டொலர் பற்றாக்குறையால் திணறும் பூட்டான்; 15 மாத இறக்குமதிக்கே பணம் இருப்பதாக அறிவிப்பு



அந்நியச் செலாவணி பற்றாக்குறையால் கடுமையாகப் பாதிக்கப்பட்டிருக்கும் பூட்டான், அடுத்த 15 மாதங்களுக்கான இறக்குமதிக்கான வெளிநாட்டு நாணய கையிருப்பே தம்மிடம் உள்ளதாக அறிவித்துள்ளது.

கொவிட் தொற்று நாட்டுக்குள் பரவக்கூடாது என்பதால் கடந்த இரண்டு வருடங்களாக சுற்றுலாப் பயணிகள் வருகையை நிறுத்திவைத்துள்ள பூட்டான், உக்ரைன் யுத்தம் காரணமாக ஏற்பட்டிருக்கும் எண்ணெய் மற்றும் தானிய விலை உயர்வால் கடுமையான நிதி நெருக்கடியை சந்தித்துள்ளது.

இந்நிலையை சீர்செய்ய மாற்று நடவடிக்கைகளை மேற்கொள்ளப் போவதாக தெரிவித்திருக்கும் அந்நாட்டு பொருளாதார விவகார அமைச்சர் லோக்நாத் ஷர்மா, இறக்குமதியில் கட்டுப்பாடுகள் விதிக்கப்படும் என்று கூறியுள்ளார். முதல் கட்டமாக பிஸ்கட் மற்றும் துரித உணவுகளின் இறக்குமதி நிறுத்தப்படும் என்றும இரண்டாம் கட்டமாக அவசியமhன பொருட்களின் இறக்குமதி நிறுத்தப்பட்டு மூன்றாம் கட்டமாக அத்தியாவசிய பொருட்கள் மட்டுமே இறக்குமதி செய்ய அனுமதிக்கப்படும் என்றும் இவர் கூறியுள்ளார்.

பூட்டானின் மொத்த இறக்குமதியில் ஐந்தில் ஒரு பங்காக எரிசக்தி இறக்குமதி விளங்குகிறது. இதே சமயம் சுற்றுலாத்துறையை மீண்டும் ஆரம்பிப்பதற்காக பெருமளவில் வாகனங்களை இறக்குமதி செய்ய வேண்டியிருப்பதாகவும் வர்த்தகர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

எட்டு லட்சம் பேரை சனத்தொகையாகக் கொண்ட பூட்டானின் அந்நிய செலாவணி கையிருப்பு 2021 இல் 1.46 பில்லியன் அமெரிக்க டொலராக இருந்தது.

தற்போது இது 970 மில்லியன் அமெரிக்க டொலராக குறைவடைந்துள்ளது. கொவிட் தொற்று ஏற்படுவதற்கு முன்னர் 2.7 பில்லியன் அமெரிக்க டொலர்களாகக் காணப்பட்ட வெளிநாட்டுக் கடன் சுமை தற்போது 3.2 பில்லியன்களாக அதிகரித்துள்ளதாக பூட்டான் அரச நாணய அதிகார சபை கூறியுள்ளது.

அந்நாடு இந்தியாவிடம் 2.2 பில்லியன் அமெரிக்க டொலர்களை கடன்பட்டிருப்பதோடு ஆசிய அபிவிருத்தி வங்கி மற்றும் உலக வங்கியிடம் ஒரு பில்லியன் அமெரிக்க டொலர்களை கடனாகப் பெற்றிருக்கிறது.